**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 16-4-2014 Issued : 16-4-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 19, 2013—தொகுதி 47—எண் 1**

**Friday, the 19th April 2013—Volume 47—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**11-235**

## 19–4–2013

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

*ஆளுநரும் அமைச்சரவையும்* v-x

Governor and Council of Ministers xi-xv

*பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்* xvii-xx

*பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)* xxi-xxxi

**1. வினாக்கள்–விடைகள்—**

*உடுக்குறியிட்ட வினாக்கள்* *1-51*

**2. விதி 110–ன்கீழ் அறிக்கை—**

*டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வறட்சி நிவாரணம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை* *52-59*

**3. டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வறட்சி நிவாரணம்– முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி** *59-86*

*முனைவர் செ.கு. தமிழரசன்* *59-61*

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* *60*

*திரு. உ. தனியரசு* *61-65*

**திரு. பி.வி. கதிரவன்* *65-66*

*டாக்டர் க. கிருஷ்ணசாமி* *66-68*

*திரு. ஆ. நாராயணன்* *68-70*

*முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* *70-71*

பக்கங்கள்

**3. டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வறட்சி நிவாரணம் – முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி**—தொடர்ச்சி

*திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 71-72

திரு. சு. குணசேகரன் 73-76

*திரு. க. பாலகிருஷ்ணன் 77-79

திரு. ச. இராமச்சந்திரன் 80

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 81-82

*மாண்புமிகு திரு. செ. தாமோதரன் 82-83

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் 83-85

*மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா 85

**4. கவன ஈர்ப்பு**—

கேரள அரசு பவானி மற்றும் சிறுவாணி ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுவதால் ஏற்பட்டுள்ள நிலை

திரு. எம். ஆறுமுகம் 86,89-90, 92-93

*மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் 87-93

**5. அறிக்கைகள் அளித்தல்**—

பொதுக் கணக்குக் குழு 93

**6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

கோரிக்கை எண் 27-தொழில் துறை

மாண்பமிகு திரு. பி. தங்கமணி 94,99,100 101, 102, 111, 125-129, 130, 131, 134, 135-136, 144, 145, 150-152, 153-154, 156-158 163-165, 167-169, 170-207



பக்கங்கள்

**6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*திரு. க. பாண்டியராஜன் 99-111

திரு. என்.வி. காமராஜ் 112-117

செல்வி கே. பாலபாரதி 117-134

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் 120-123, 124

*மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன் 129

திரு. சு. குணசேகரன் 134-135, 151

*திரு. க. கோபால்சாமி 136-143

திரு. எம். ஆறுமுகம் 143-159

*மாண்புமிகு திரு. பி.வி. ரமணா 146

திரு. ம. முத்துராமலிங்கம் 154

*திருமதி எஸ். விஜயதரணி 159-163

திரு. அ. அஸ்லம் பாஷா 165-169

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 208-210

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – முனைவர் கே. ரோசய்யா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை |
| 2. நிதி அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள் |
| 3. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு |
| 4. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்க மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு |

**5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**6. ஊரகத் தொழில் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் ..** **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

**9. வேளாண்மைத் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு



**10. கூட்டுறவுத் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**11. வனத் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:**

வனம்

**12. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

**13. உணவுத் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**14. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:**

பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**15. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

**16. பொதுப் பணித் துறை அமைச்சர் ..** **மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:**

*கால்நடை பராமரிப்பு*

**18. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**

*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

**19. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:**

*கைத்தறி மற்றும் துணிநூல்*

**20. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*

**21. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:**

*வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம்*

**22. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

**23. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:**

*போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்*

**24. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:**

*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*



**25. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:**

*தகவல் தொழில்நுட்பம்*

**26. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்*

**27. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:**

*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*

**28. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்*

**29. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

**30. வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

**31. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:**

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

**32. பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல், விளையாட்டுகள், இளைஞர் நலன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

**33. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. K. ROSAIAH

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home

**2. Minister for Finance** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Finance, Planning, Legislative Assembly, Elections and Passports

**3. Minister for Electricity & Prohibition and Excise** .. **The Hon. Thiru Natham R. Viswanathan:**

Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses

**4. Minister for Municipal Administration & Rural Development, Law, Courts and Prisons** .. **The Hon. Thiru K.P. Munusamy:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Law, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption

**5. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

| | | |
|---|---|---|
| 6. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru P. Mohan:**<br>Rural Industries including Cottage Industries and Small Industries |
| 7. **Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme |
| 8. **Minister for Higher Education** | .. | **The Hon. Thiru P. Palaniappan:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| 9. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru S. Damodaran:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| 10. **Minister for Co-operation** | .. | **The Hon. Thiru Sellur K. Raju:**<br>Co-operation, Statistics and Ex-Servicemen Welfare |
| 11. **Minister for Forests** | .. | **The Hon. Thiru K.T. Patchaimal:**<br>Forests |





| | | |
|---|---|---|
| 12. **Minister for Highways & Minor Ports** | .. | **The Hon. Thiru Edappadi K. Palaniswami:**<br>Highways & Minor Ports |
| 13. **Minister for Food** | .. | **The Hon. Thiru R. Kamaraj:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 14. **Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru V. Moorthy:**<br>Milk and Dairy Development |
| 15. **Minister for Environment** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Environment and Pollution Control |
| 16. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru K.V. Ramalingam:**<br>Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works |
| 17. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru T.K.M. Chinnayya:**<br>Animal Husbandry |
| 18. **Minister for Industries** | .. | **The Hon. Thiru P. Thangamani:**<br>Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives |
| 19. **Minister for Handlooms & Textiles** | .. | **The Hon. Dr. S. Sundararaj:**<br>Handlooms & Textiles |
| 20. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru P. Chendur Pandian:**<br>Tourism, Tourism Development Corporation |

| | | |
|---|---|---|
| **21. Minister for Commercial Taxes & Registration** | .. | **The Hon. Thiru B.V. Ramanaa:**<br>Commercial Taxes & Registration and Stamp Act |
| **22. Minister for Adi Dravidar & Tribal Welfare** | .. | **The Hon. Thiru N. Subramanian:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **23. Minister for Transport** | .. | **The Hon. Thiru V. Senthil Balaji:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act |
| **24. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.A. Jayapal:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| **25. Minister for Information Technology** | .. | **The Hon. Thiru N. Subramanian:**<br>Information Technology |
| **26. Minister for Information and Special Programmes Implementation** | .. | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:**<br>Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto |
| **27. Minister for Labour** | .. | **The Hon. Thiru S.T. Chellapandian:**<br>Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment |



| | | |
|---|---|---|
| **28. Minister for Backward Classes and Minorities Welfare** | .. | **The Hon. Thiru A. Mohammedjan:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf |
| **29. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru M.S.M. Anandan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| **30. Minister for Revenue** | .. | **The Hon. Thiru N.D. Venkatachalam:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| **31. Minister for Khadi and Village Industries** | .. | **The Hon. Thiru T.P. Poonachi:**<br>Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan |
| **32. Minister for School Education and Sports & Youth Welfare** | .. | **The Hon. Dr. Vaigaichelvan:**<br>School Education and Archaeology, Sports and Youth Welfare, Tamil Official Language and Tamil Culture |
| **33. Minister for Health** | .. | **The Hon. Thiru K.C. Veeramani:**<br>Health, Medical Education and Family Welfare |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

## மாற்றுத் தலைவர்கள்#

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ஆர்.பி. உதயகுமார்

திரு. கே.பி. அன்பழகன்

திரு. ஆர். சின்னசாமி

திரு. பி.ஜி. நாராயணன்

திரு. சு. குணசேகரன்

## செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்

---

*#5-2-2013 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. க. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | | |
|---|---|---|
| திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. தி.ஜெ. ஸ்ரீதர், பி.எஸ்சி. | .. | குழு அலுவலர் |
| திரு. ந. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. க. சங்கர், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி கோ.மு. வனஜா, எம்.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வே. ரவிசங்கர், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. கி. சீனிவாசன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.ஜி.எல்., சி.எல்.ஐ.எஸ். | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ப. மனோகரன், எம்.ஏ., பி.எட்., | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி க. செந்தாமரை, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. கு. தண்டபாணி, பி.காம். | .. | செயலாளரின் தனிச் செயலர் |
| திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. வெ. கலைராஜன், எம்.ஏ., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., .. சார்புச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. .. வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. .. மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். .. ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆ.க. .. கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. .. திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. .. பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். .. மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. .. சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. .. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. .. ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. .. கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். .. வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். .. திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. .. துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. ச. .. ஆலந்தூர்
22. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
23. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
24. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
25. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
26. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
27. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
28. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
29. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
30. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி
31. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
32. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
33. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
34. கதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
35. கந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
36. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
37. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
38. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
39. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
40. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
41. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
42. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்



43. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்
44. காமராஜ், திரு. செ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
45. கார்த்திக் தொண்டைமான், திரு... புதுக்கோட்டை
46. கிட்டுசாமி, திரு. ஆர்.என். .. மொடக்குறிச்சி
47. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
48. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.எ. .. பர்கூர்
49. கிருஷ்ணன், திரு. கு.ப. .. ஆலங்குடி
50. கிருஷ்ணன், திரு. சி. .. ஓமலூர்
51. குணசீலன், திரு. வே. .. வந்தவாசி (செ.வ.)
52. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
53. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
54. குப்பன், திரு. கே. .. திருவொற்றியூர்
55. குமரகுரு, திரு. இரா. .. உளுந்தூர்பேட்டை
56. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஜெயங்கொண்டம்
57. கோகுல இந்திரா, திருமதி எஸ். .. அண்ணா நகர்
58. கோபால்சாமி, திரு. க. .. ராஜபாளையம்
59. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
60. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
61. சக்தி, திருமதி ம. .. சீர்காழி (செ.வ.)
62. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
63. சண்முகம், திரு. சி.வி. .. விழுப்புரம்
64. சண்முகவேலு, திரு. சி. .. மடத்துக்குளம்
65. சந்திரகுமார், திரு. வி.சி. .. ஈரோடு கிழக்கு

66. சந்திரசேகர், திரு. ஆர். .. மணப்பாறை
67. சம்பத், திரு. எம்.சி. .. கடலூர்
68. சம்பத்குமார், திரு. கோவி. .. வாணியம்பாடி
69. சம்பத்குமார், திரு. ப. .. திருச்செங்கோடு
70. சரத்குமார், திரு. ரா. .. தென்காசி
71. சவுந்தரராசன், திரு. அ. .. பெரம்பூர்
72. சாந்தி, திருமதி ஆர். .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சாமி, திரு. ஆர். .. மேலூர்
74. சிவக்கொழுந்து, திரு. ப. .. பண்ருட்டி
75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். .. நெய்வேலி
77. சிவபதி, திரு. என்.ஆர். .. முசிறி
78. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்
79. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
80. சின்னையா, திரு. டி.கே.எம். .. தாம்பரம்
81. சீனிவாசன், திரு. ஆர். .. ஆற்காடு
82. சுந்தரம், திரு. பி.எல். .. பவானிசாகர் (செ.வ.)
83. சுந்தரராஜ், டாக்டர் ச. .. பரமக்குடி (செ.வ.)
84. சுந்தர்ராஜன், திரு. ஆர். .. மதுரை மத்தி
85. சுபா, திருமதி ர. .. கெங்கவல்லி (செ.வ.)
86. சுப்பிரமணியன், திரு. ந. .. செய்யாறு
87. சுப்பையா, திரு. இ. .. அம்பாசமுத்திரம்
88. சுப்ரமணியன், திரு. ந. .. கந்தர்வகோட்டை (செ.வ.)



89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)
90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி
91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்
94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்
95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்
96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி
97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு
98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு
100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி
101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)
102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி
103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்
104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி
105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை
110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு
111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கீழ்வைத்திணான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி



135. நாராயணன், திரு. பி.ஜி. .. பவானி
136. நீலகண்டன், திரு. வ. .. திரு.வி.க. நகர் (செ.வ.)
137. பச்சைமால், திரு. கே.டி. .. கன்னியாகுமரி
138. பரஞ்ஜோதி, திரு. மு. .. திருச்சிராப்பள்ளி மேற்கு
139. பரமசிவம், திரு. கே.பி. .. பல்லடம்
140. பவுன்ராஜ், திரு. சு. .. பூம்புகார்
141. பழனிசாமி, திரு. கே.சி. .. அரவக்குறிச்சி
142. பழனிச்சாமி, திரு. ச. .. வேடசந்தூர்
143. பழனியப்பன், திரு. பி. .. பாப்பிரெட்டிப்பட்டி
144. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
145. பாண்டியராஜன், திரு. க. .. விருதுநகர்
146. பாபு முருகவேல், திரு. ர.ம. .. ஆரணி
147. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
148. பார்த்தசாரதி, திரு. ப. .. விருகம்பாக்கம்
149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். .. மேட்டூர்
150. பாலகிருஷ்ணன், திரு. க. .. சிதம்பரம்
151. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
152. பாஸ்கர், திரு. அ. .. தருமபுரி
153. பாஸ்கர், திரு. கே.பி.பி. .. நாமக்கல்
154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. .. வில்லிவாக்கம்
155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
156. பீம்ராவ், திரு. க. .. மதுரவாயல்
157. புத்திசந்திரன், திரு. .. உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்
159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்
160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
163. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ஆ.வா.)
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை
165. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)
166. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)
167. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு
168. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)
169. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்
170. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு
171. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு
172. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்
173. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்
174. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)
175. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)
176. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்
177. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி
178. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்



179. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)
180. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
181. முருகன், திரு. மு. .. முதுகுளத்தூர்
182. முருகுமாறன், திரு. என். .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
183. முருகேசன், திரு. து. .. செங்கல்பட்டு
184. முனுசாமி, திரு. கே.பி. .. கிருஷ்ணகிரி
185. முஹம்மத்ஜான், திரு. அ. .. இராணிப்பேட்டை
186. மூர்த்தி, திரு. வி. .. மாதவரம்
187. மைக்கேல் ராயப்பன், திரு. சி. .. ராதாபுரம்
188. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
189. மோகன், திரு. ப. .. சங்கராபுரம்
190. ரமணா, திரு. பி.வி. .. திருவள்ளூர்
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. அந்தியூர்
192. ரமேஷ், திரு. கா.கோ. .. திருப்பத்தூர்
193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)
194. ராமசாமி, திரு. ஆ. .. நிலக்கோட்டை (செ.வ.)
195. ராமச்சந்திரன், திரு. கா. .. குன்னூர்
196. ராமமூர்த்தி, திரு. ஆர். .. விக்கிரவாண்டி
197. ராஜநாயகம், திரு. மு. .. அறந்தாங்கி
198. ராஜலட்சுமி, திருமதி ஆர். .. மயிலாப்பூர்
199. ராஜா, திரு. ஏ.கே.டி. .. திருப்பரங்குன்றம்
200. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

201. ராஜா, திரு. பொன். .. பொன்னேரி (செ.வ.)

202. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

203. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

204. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

205. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

206. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

207. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

208. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

209. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

210. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

211. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

212. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்கரி

213. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

214. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

215. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

216. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

217. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கே.எஸ்.என். .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்



223. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

235. நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, சித்திரை 6, திருவள்ளுவர் ஆண்டு–2044

## 2013 ஏப்ரல் 19, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்"*

*தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்ய வேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 268, 269, 270 மற்றும் 272 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**271—**

### தொழிற்பேட்டை

***20101—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2013 ஏப்ரல் 19

*(அ) சேலம் வட்டம், ஜாகீர் அம்மாபாளையம் அருகில் தொழிற்பேட்டை அமைக்கவும், சங்ககிரியில் தொழிற்பேட்டை அமைக்கும் பணியினை விரைவுபடுத்தவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஜாகீர் அம்மாபாளையம் அருகில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் தகுதியான அரசு புறம்போக்கு நிலம் கிடைக்கும்பட்சத்தில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சங்ககிரியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் அரசின் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் காலதாமதமாகின்றது என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டமானது அதிகமான தொழில்கள் நடைபெறக்கூடிய ஒரு மாவட்டமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவதற்காகவும், குறு மற்றும் சிறு தொழில்கள் அங்கே பெருக்கம் அடைவதற்கும் இதுபோன்ற தொழில் நகரங்கள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எனவே, தொழில்வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதைக் கருத்திலேகொண்டு அங்கே ஒரு தொழில் நகரம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் சேலம் மாவட்டத்தைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் தொழிற்சாலைகள் வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ரெட்டியூர் கிராமத்தில் தொழிற்பேட்டை ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று மேட்டூர் வட்டம், கருமலைக்கூடல் கிராமத்தில் தொழிற்பேட்டை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று ஓமலூர் வட்டத்தைப் பொறுத்தமட்டில் கருப்பூர் கிராமத்தில் இதேபோன்று தொழிற்பேட்டை ஒன்றும் இருக்கிறது என்பதையும், வீரபாண்டி வட்டம், வீரபாண்டி கிராமத்திலும் தொழில் மனைப் பிரிவுகள் இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, சங்ககிரி வட்டத்திலே உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, அந்தப் பகுதியிலேயிருந்து பல்வேறு கருத்துருக்கள் பெறப்பட்டு, சேலம் சங்ககிரி வட்டத்திலே கஸ்தூரிப்பட்டி என்ற இடத்தில் புதிய தொழிற்பேட்டை உருவாக்க 51 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, நிலமெடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. தற்சமயம் நீதிமன்றத்தில் அதுசம்பந்தமாக வழக்கு உள்ள காரணத்தினால் அதைச் செய்ய இயலவில்லை. சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 17 குறு தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அவைக்கு ஒரு செய்தியாகவும், உறுப்பினர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசிக் குழுமம் ஏற்படுத்தப்பட்டு, உற்பத்தி தொடங்கி, சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட அந்தப் பகுதியில் மேலும் ஒரு ஜவ்வரிசிக் குழுமம், ஒரு தானியங்கி மற்றும் விசைத் தறிக் குழுமம், Stainless Steel Fabrication குழுமம் ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 19

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 272, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

*வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**273—**

**தடுப்பணை**

***12348—திரு. அ. அஸ்லம் பாஷா:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், மதனாஞ்சேரி பள்ளிப்பட்டு தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) பொதுமக்களிடமிருந்து இது குறித்து கோரிக்கை மனு ஏதும் இத்துறையில் பெறப்படாததால், வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம் மதனாஞ்சேரி பள்ளிப்பட்டு தடுப்பணையின் உயரத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, இருக்கையில் இல்லை.*

*வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*



2013 ஏப்ரல் 19]

**274—**

**சாலை சீரமைப்பு**

***6715—திரு. டி. சுரேஷ்குமார்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலையிலிருந்து செங்கம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) திண்டிவனம், செஞ்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை எண் 66 தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் கடினப் புருவங்களுடன்கூடிய இருவழிப்பாதையாக மேம்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

**திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, திட்டங்களுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காகவே திட்டம் என்று பேருரை ஆற்றிய (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர முதல்வர், தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன், மாண்புமிகு கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்களை சந்தித்தது ஒரு சிலருக்கு கோபமாக இருந்தது. ஆனால், எனது தொகுதி மக்கள் என்ன கூறுகிறார்கள் என்றால் "ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதான்டா வளர்ச்சி", (மேசையைத் தட்டும்*

ஒலி) 'நீங்களும் வளரணும், தொகுதியும் வளரணும் என்று நீங்கள் எடுத்ததே சிறப்பான முயற்சி' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்றார்கள்.

அதற்கு உதாரணமாக எனது செங்கம் தொகுதிக்கு பேரூராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவித்ததற்காகவும், செங்கத்திற்குப் பேருந்துப் பணிமனை அமைத்துக் கொடுப்பதற்கு ஆணை வழங்கியதற்காகவும், செங்கம் வட்டம் ஆலத்தூரிலே ஒரு கல்லணையும், செங்கம் தொகுதி தண்டராம்பட்டு வட்டத்திலே நாராயணகுப்பம், பாம்பன் பாலம் அருகே ஒரு தடுப்பணையும் ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்ததற்காகவும் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.

**திரு. இ. சுப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிகழ்காலத்திற்கு நிழலையும், எதிர்காலத்திற்கு நிரந்தரமான நிம்மதியையும், தீர்வாகத் தந்து, தாய் உள்ளம் கொண்டு, தமிழக மக்கள் எல்லா வளங்களையும் பெற்று வாழ, தன் மெய் வருத்தி உழைக்கும் எங்கள் தாயே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் கண்டு வணங்கி, அம்பாசமுத்திரம் தொகுதியில் மிக பிரசித்திப்பெற்ற பாபநாசநாதர் திருக்கோயில் ஒன்று உள்ளது. அந்தத் திருக்கோயிலுக்கு பக்தர்கள் நிறைய பேர் வருவதுண்டு. ஆனால், அத்திருக்கோயிலுக்குச் செல்லும் நெடுஞ்சாலை அம்பாசமுத்திரம் இரயில் நிலையத்திலிருந்து திருக்கோயில் வரை மிக மோசமாக உள்ளது. அதை நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய சாலையை ஆய்வு செய்து நிதிநிலைக்கேற்ப அதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பூவுலகில் வாழும் மனித உயிர்கள் அல்லாது, அனைத்து உயிரினங்களும் ஏற்றம் பெற வேண்டும் என்று வாழும் மனித தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரை செல்கிற நெடுஞ்சாலை கடந்த 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 67 ஆகத் தரம் உயர்த்தப்பட்டது. அப்படித் தரம் உயர்த்தப்பட்ட சாலை, ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு, ஆட்சி மாற்றத்திற்கு பின்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசு கோயம்புத்தூரிலிருந்து மேட்டுப்பாளையம் வரை இருக்கின்ற 45 கிலோ மீட்டர் சாலை நான்கு வழிச் சாலையாக மேம்பாடு செய்யப்படும் என்று சொல்லி, அன்றைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டார்கள். ஏனோ காரணம் தெரியவில்லை, அந்தச் சாலை நரசிம்மநாயக்கன்பாளையம் வரை உள்ள 15 கிலோ மீட்டர் தூரம்வரை மட்டும் நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டது. மீதம் இருக்கின்ற 25 கிலோ மீட்டர் சாலை எந்தவிதமான மேம்பாடும் செய்யப்படவில்லை. அந்தச் சாலை ஏறத்தாழ 11 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்ட சாலையாகும். மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருக்கின்ற இந்தச் சாலையில் நாள்தோறும் பலர் விபத்துக்குள்ளாகிறார்கள். அந்தச் சாலையை மேம்படுத்த வேண்டுமென்று தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை வற்புறுத்தியும், இதுவரையிலும் அதற்கான பணிகளை மேற்கொள்ளாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை மீண்டும் வற்புறுத்தி, அந்தச் சாலையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அந்தச் சாலையை மாநில நெடுஞ்சாலையாக வகைமாற்றம் செய்து,

[2013 ஏப்ரல் 19

அதை நமது மாநில அரசே எடுத்து, புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல தேசிய நெடுஞ்சாலை எண் 67—ஐத் தரம் உயர்த்துவதற்கான நிலம் எடுப்புப் பணி நடைபெற்றுவருகிறது. தற்போது 80% நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகள் முடிந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விரைவாக அங்கே சாலை அமைக்கின்ற பணி குறித்து இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டு, அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியினுடைய பிரதான சாலையான என்.சி. வீரலூர் சாலை 17 கி.மீ. நீளமாகும். கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போளூர், ஜமுனாமருதூர், ஆலங்காயம் சாலை, 55 கி.மீ. நீளமான பிரதான சாலை ஆகும். இந்த இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசு முன்வருமா எனக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். சாலையினுடைய வாகனச் செரிவின் அடிப்படையில்தான் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. அந்தச்



2013 ஏப்ரல் 19]

சாலையில் செல்கின்ற வாகனங்களின் செரிவைக் கணக்கிட்டு, அதற்கேற்றவாறு அகலப்படுத்தப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டினத்திற்கு 87 கி.மீ. தூரம் உள்ளது. இதில் 60 கி.மீ. தூரத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 200 கோடி ரூபாய் செலவில் புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், மாநில நெடுஞ்சாலைத் துறையினுடைய தடையின்மைச் சான்று கிடைத்தால்தான் அந்தப் பணி தொடங்கப்படும் என்று தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். ஆகவே, அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு உடனடியாக நமது மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தடையின்மைச் சான்றினை உடனடியாக அளிப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநில அரசு தடையில்லாச் சான்று வழங்காத காரணத்தினால் அங்கே வேலை நிறுத்தப்பட்டது என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் எங்கள் கவனத்திற்கு இதுவரை வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் பற்றி ஆய்வு செய்து, அவ்வாறு இருக்கின்றபட்சத்தில் உடனடியாக தடையில்லாச் சான்றினை வழங்கி, அதன்மீது மேற்கொண்டு நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் வல்ல எங்கள் குடும்ப தெய்வம் இதய தெய்வம் அம்மா

[2013 ஏப்ரல் 19

அவர்களை வணங்கி, சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி, கோவில் நகரமாக இருப்பதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. அதனைத் தவிர்க்க, சீர்காழியிலிருந்து வைத்தீஸ்வரன்கோயில் வரை புறவழிச் சாலை அமைக்க மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள எல்லா நகராட்சிப் பகுதிகளிலும், எந்த நகராட்சியில் புறவழிச் சாலை அமைக்கப்படவில்லையோ, அந்த நகராட்சிப் பகுதிகளில் எல்லாம், அங்கு இருக்கின்ற போக்குவரத்து நெரிசலின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முன்னுரிமையின் அடிப்படையிலே ஆங்காங்கே புறவழிச்சாலை அமைப்பதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். அதனடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலே போக்குவரத்து நெரிசல் அதிகம் இருக்கும்பட்சத்தில் ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 49—லிருந்து புதுமடம் செல்லக்கூடிய சாலை நீண்டகாலமாக பழுதடைந்துள்ளது. அதை சீர் செய்வதற்கான திட்ட ஒதுக்கீடுகளெல்லாம் செய்த பிறகும்கூட, அந்தப் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. இதுகுறித்து அதிகாரிகளிடம் வினவும்போது, ஒரு Package System—த்தில் இந்தச் சாலைகளைப் போடுகிறோம், அதனால் தாமதமாகும் என்று சொல்கிறார்கள். எனவே, விரைவிலே இந்தச் சாலையைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று இங்கே கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையால் மேம்படுத்தப்படுகின்ற பல்வேறு சாலைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கப்படாமல் இருந்தும் அப்படி பாதிக்கப்பட்டிருந்த 11 தேசிய நெடுஞ்சாலைகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நிதியொதுக்கீடு செய்து, அவற்றை சீர் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலைப் பணியை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். விரைந்து செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடியிலிருந்து காரியாப்பட்டி செல்லக்கூடிய சாலை 17 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை. இது மதுரை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையையும், மதுரை—திருச்செந்தூர் தேசிய நெடுஞ்சாலையையும் இணைக்கக்கூடிய சாலை. அதிகப் போக்குவரத்து நிறைந்த இந்தச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. மக்கள் எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இந்தச் சாலையை முழுவதுமாக செப்பனிட்டுத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தப் பகுதியில், சாலைகளைச் சீர் செய்ய வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய நிதியிலிருந்து நாம் மாநில சாலைகளைப் பராமரித்து வருகிறோம். இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்ற சாலைகளை, அவர்களிடமிருந்து நிதியைப் பெற்றுத்தான் சீர் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. நாம் எவ்வளவுதான் கேட்டாலும், அனுமதியும் கொடுப்பதில்லை, நிதியும் கொடுப்பதில்லை. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே சாலைகள் மிக மோசமாக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதனடிப்படையில் விரைந்து அதனை சீர் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இன்றைய அரசு ஆண்டுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் முதல் 3 ஆயிரம், 4 ஆயிரம் கோடி ரூபாய்வரை ஒதுக்கி வருகிறது; அது வரவேற்கத்தக்கது. சர்வதேச அளவிற்கு இந்தச் சாலைகளெல்லாம் நிறுவப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் போடக்கூடிய இந்தச் சாலைகளினுடைய தரத்தை நிர்ணயிப்பதற்கு மாநில அளவில், மாவட்ட அளவில் எந்த அமைப்பு செயல்படுகிறது? தரத்தை எப்படி தீர்மானிக்கிறார்கள், அதை எப்படி கண்காணிக்கிறார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்





சாலைகளின் தரத்தை எப்படி ஆய்வு செய்கிறார்கள் என்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். இதற்காக தர உறுதிக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் இருக்கின்றார்கள். சாலைகள் அமைத்த பிறகு அந்த அதிகாரிகள் பார்வையிட்டு சான்றிதழ் கொடுத்த பிறகுதான் அதற்குண்டான டெண்டர் தொகை அதாவது அவர்கள் சாலை அமைத்ததற்கான தொகை வழங்கப்படுகிறது. ஆகவே, எந்த ஒரு சாலை அமைக்கப்பட்டாலும், அந்தச் சாலை தரமுள்ள சாலைதான் என்று தீர்மானிக்கப்பட்ட பின்புதான் அந்தச் சாலை அமைக்கப்பட்டதற்குண்டான தொகை வழங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

**திரு. எம். ரெங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் பல நல்ல திட்டங்களைத் தந்து, தமிழ்நாட்டு மக்களை வாழ வைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு NH 45C என்ற சாலை அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும், இதுவரை அமைக்கப்படாமல் இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், அங்கே விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது அதோடு பயண நேரமும் அதிகரிப்பதால், மிகவும் இடையூறாக இருக்கின்றது. எனவே, அந்தச் சாலையைச் சீரமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டினம் செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையிலும் சாலை அமைக்கும் பணி தாமதப்படுத்தப்படுவதால் குறைந்தபட்சம் அந்தச் சாலையிலே இருக்கின்ற பழுதுகளையாவது சீரமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எங்கெங்கெல்லாம் சாலைகள் சீர் செய்யப்பட வேண்டுமோ அங்கெல்லாம் சீர்செய்து வருகிறது. மாநில அரசால் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்தவரைக்கும், மத்திய அரசிடமிருந்துதான் நிதி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தேசிய நெடுஞ் சாலைகளில் பழுது ஏற்பட்டால், அதனைச் சீரமைப்பதற்கு மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்திடம் தமிழக அரசு கோரும் நிதியை மத்திய அரசு தருவதில்லை. ஆகவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழுதடைந்துள்ள 11 தேசிய நெடுஞ் சாலைகளைக் கண்டறிந்து, அந்தச் சாலைகளையெல்லாம் சீரமைப்பதற்காக நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலையையும் சீரமைப்பது குறித்து பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் சாலைகள் எப்படி தரக் கட்டுப்பாடு செய்யப்படுகின்றன என்று இங்கே ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நெடுஞ்சாலைத் துறையின் சாலை மற்றும் பாலப் பணிகள் சிறப்புற நடைபெற தரக் கட்டுப்பாடு அலகின்மூலம் பணிகள் கீழ்க்கண்ட வகையில் தரமாக உறுதி செய்யப்படுகிறது;

முதலாவதாக, தார்க் கலவை எப்படி கலக்கப்படுகிறது என்பது கண்காணிக்கப்படுகிறது; இரண்டாவது, தார்க் கலவையில் கலக்கப்படும் சரளைக் கற்கள்; மூன்றாவது, தார்க் கலவை சரியான வெப்பத்தில் பரப்பப்படுகிறதா என்பதை உறுதி செய்தல், அதாவது, பரப்பப்படக்கூடிய தார் குறிப்பிட்ட டிகிரி அளவில் வெப்பமுடையதாக இருந்தால்தான், அந்தத் தார் சாலையின் மேற்பரப்பில் சரியாக அமரும். நான்காவதாக, சாலைகள் அமைப்பில் ஒவ்வோர் அடுக்குகளின் கனம் மற்றும் அடர்த்தி ஆகியவற்றைத் தரக் கட்டுப்பாட்டு அலுவலர் உறுதி செய்கின்றனர். சாலை அமைக்கப்பட்ட பிறகு, மேலே குறிப்பிட்ட முறைகளெல்லாம் கணக்கிடப்படுகின்றது.



2013 ஏப்ரல் 19]

அதேபோல, பாலப் பணிகளின் தரத்தை ஆய்வு செய்தல். பாலப் பணியில் உபயோகப்படுத்தப்படும் மூலப்பொருட்களின் தரம், கான்கிரீட் கலவையின் உறுதித் தன்மை, அதாவது 7 மற்றும் 28–வது நாட்களில் அடையும் வலுத் தன்மை மற்றும் முடிக்கப்பட்ட பாலத்தின் கட்டுமானத்தை உறுதி செய்தல் ஆகியவை தரக் கட்டுப்பாட்டு அலுவலர்மூலமாக உறுதி செய்யப்படுகின்றன. இப்படி உறுதி செய்யப்பட்ட பிறகுதான், அந்தப் பணிகள் முடிந்த பிறகு, தரக் கட்டுப்பாட்டு அலுவலர்களது சான்றுகள் வழங்கப்பட்ட பிறகுதான், அந்தச் சாலைகளை அமைக்கும் அல்லது பாலங்களைக் கட்டும் ஒப்பந்ததாரருக்குண்டான தொகை வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். புவனகிரி பேரூராட்சியின் வாகனப் போக்குவரத்துகளைப் பொறுத்தவரைக்கும் அதிக நெருக்கடியுள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், புவனகிரி பேரூராட்சிக்குப் புறவழிச் சாலை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புவனகிரி பேரூராட்சியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதா என்பது கணக்கிடப்பட்டு, நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் புறவழிச் சாலை அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**275—**

**படகுக் குழாம்**

****4792—திரு. என். முருகுமாறன்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். இப்போது அதுபோன்ற செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

*முற்பகல் 10–25*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மன்னன் பராந்தக சோழன் வீராணம் ஏரியை வெட்டி, விவசாயம் செழிக்க வகை செய்தான். அதற்குப் பின்னாலே, 21 ஆம் நூற்றாண்டில், நேற்றையதினம் 1,465 மில்லியன் கன அடி முழுமையான கொள்ளளவு கொண்ட வீராணம் ஏரியாக உருமாறுவதற்கு, ஏரியை வெட்டித் தூர்வாரும் பணி செய்வதற்காக ரூபாய் 40 கோடியை வாரி வழங்கிய, வாழுகின்ற பராந்தக சோழனாக, மன்னருக்கெல்லாம் மன்னராக, வள்ளலுக்கெல்லாம் வள்ளலாக விளங்குகிற, மாட்சிமைப் பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர்*



2013 ஏப்ரல் 19]

*(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நாட்டு மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என்சார்பாகவும் அவருடைய புனித மலர்ப் பாதங்களுக்கு பணிவான நன்றியை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பல்வேறு சிறப்புகளைக் கொண்ட வீராணம் ஏரி மிகுந்த இயற்கைப் பொலிவோடும், எழிலோடும் விளங்குகிறது. அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுகிறவகையில், அங்கே ஒரு படகுக் குழாம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் என்றாலே வீணானத் திட்டம் என்ற நிலையை மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை வெற்றித் திட்டமாகச் செயல்படுத்திக் காட்டியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர வேண்டும்; அந்தப் பகுதியில் விவசாயம் மேம்பட வேண்டுமென்று வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் அம்மா. குடிநீர் ஆதாரத்திற்குப் பயன்படக்கூடிய அந்த வீராணம் ஏரியில் படகுக் குழாம் அமைப்பதற்கு அனுமதித்தால் தண்ணீர் மாசுபடுவதற்கான வாய்ப்பு இருப்பதால், அந்தத் திட்டம் கைவிடப்படுகிறது. எனவே, இது சாத்தியமல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

**திரு. என். முருகுமாறன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடியாது, நடக்காது, சாத்தியமில்லை, வாய்ப்பில்லை என்ற எதிர்க்கட்சிகளினுடைய முகத்திரையைக் கிழித்தெறிந்து, முடியாது என்று சொன்ன புதிய வீராணம் திட்டத்தை முடித்துக்காட்டி, சென்னைப் பெருநகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்த மாட்சிமைப் பொருந்திய புரட்சித்*

தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லரசு, கருணை உள்ளத்தோடு, மீண்டும் வீராணம் பகுதி மக்களின் எண்ணத்தை நிறைவேற்றுகின்றவகையில், எதிர்காலத்திலாவது படகுக் குழாம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**276—**

### கால்நடை மருத்துவமனை

***1762—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோட்டப்பூண்டி ஊராட்சியிலே அரசின் விதிகளுக்குட்பட்டு, 3,000 கால்நடை அலகுக்குமேல் இருப்பதால், அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டப்பூண்டி ஊராட்சியில், கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை மருத்துவமனை இயங்கிவந்தது. அந்த மருத்துவமனைக்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, மருத்துவர் இல்லாத காரணத்தினால் அந்தக் கால்நடை மருத்துவமனை பழுதடைந்த நிலையில் இன்றும் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுப்பதன்மூலம், கிட்டத்தட்ட 10 ஊராட்சிகள் பயன்பெறக்கூடியவகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று கூறியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

**திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–2013 அன்று நடைபெற்ற கால்நடைத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்றவகையிலே, கடந்த இரண்டு நிதியாண்டுகளிலே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான, விலையில்லாத ஆடுகள், கறவை மாடுகள் அளிக்கின்ற திட்டத்தைப்பற்றி எடுத்துச்சொல்லி, இந்த நிதியாண்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டம் தொடர ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்று மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தனது பதிலுரையிலே எடுத்துச்சொன்னார்கள்.

ஆனால், ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற இந்தத் திட்டத்தைப் பற்றி, குறை சொல்கின்றவிதமாக, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திவரும் கட்சி நாளிதழான முரசொலியிலே இந்தத் திட்டத்திற்கு நிதி எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது? இந்தத் திட்டத்திற்கு நிதியொதுக்கீடு

[2013 ஏப்ரல் 19

*செய்துள்ளீர்களா என்று குறை சொல்லியுள்ளார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?*

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு பேசாமல், வெளியிலே சென்று திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திவரும் முரசொலி நாளேட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தினை குறை சொல்லி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கிய அதே தொகையைத்தான் இந்த ஆண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும், பயனாளிகள் மேற்கொண்டு பணத்தை கொடுத்து ஆடு, மாடுகளை வாங்குகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சராக இருந்தவர் இந்தத் திட்டத்தைப் பற்றி படித்துவிட்டு, எப்படிப் பேச வேண்டுமென்று தெரியாமல் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டத்தைக் குறை சொல்லியிருக்கிறார்கள்.*

*மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தபோதே ஒரு வருடத்திற்கு 12,000 கறவை பசுக்கள்தான் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒரு கறவைப் பசுவிற்கு ரூ.30,000/—; போக்குவரத்திற்கு ரூ.1,000/—; வண்டி வாடகை ரூ.3,000/—; காப்பீட்டுத் தொகை ரூ.900/— என்று மொத்தம் ரூ.35,000/— ஆகிறதென்று நான் மானியக் கோரிக்கையின்போது தெரிவித்திருந்தேன். இதற்காக ஓர் ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் செலவாகிறது. அதே தொகையைத்தான் இந்த ஆண்டும் கொடுக்க முடியும். தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியதுபோல இந்த ஆண்டும் அதே 12,000 பசுக்கள்தான் வழங்கப்படும். எனவே, அதிகமாக நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை.*

*அதேபோல, நாங்கள் தேர்ந்தெடுத்த பயனாளிகளையெல்லாம் எங்களுடைய கால்நடை மருத்துவர்கள் சந்தைக்கு அழைத்துச் சென்று கறவைப் பசுக்களை வாங்கவிடுகிறார்கள். ஒரு பசுவின் விலை ரூ.28,000/— என்று சொன்னால், ரூ.2,000/—ஐ பயனாளிகளின் கையிலே வழங்கிவிடுகிறோம். ரூ.25,000/— என்று சொன்னால், ரூ.5,000/—ஐ பயனாளிகளின் கையில் வழங்கிவிடுகிறோம் என்று என்னுடைய மானியக் கோரிக்கையிலே சொன்னேன். ரூ.30,000/—க்குக் குறைவாக வாங்கும்போது மீதி பணத்தை அவர்களின் கையில் கொடுத்து விடுகிறோம். கிட்டத்தட்ட இரண்டு வருட காலமாக சிறப்பாக இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.30,000/—க்கு மேற்கொண்டு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அந்த உறுப்பினர் இந்தத் திட்டத்தை குறை சொல்ல முயற்சி செய்திருக்கிறார்; யாரும் குறை சொல்ல முடியாத இந்தத் திட்டத்தை குறை சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**277—**

### பேருந்து வசதி

***5424—திரு. செ. பெருமாள்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலத்திலிருந்து ஏற்காடு வழியாக வெள்ளக்கடை, நல்லூர், பெரியேரிக்காடு கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் சேலத்திலிருந்து ஏற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 10 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்காடு, வெள்ளக்கடை வழித்தடத்தில் 4 அரசுப் பேருந்துகள்மூலம் 6 நடைகளும், ஒரு*

[2013 ஏப்ரல் 19

தனியார் பேருந்துமூலம் இரண்டு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வெள்ளக்கடை, நல்லூர், ஆணைக்காடு, பெரியேரிக்காடு வரையிலான 12 கிலோ மீட்டர் சாலையில், ஆணைக்காடு வரையிலான 10 கிலோ மீட்டர் சாலை மிகக் குறுகலாக உள்ளது. குறுஞ்சட்ட பேருந்துகள் மட்டுமே இயக்க முடியும். நல்லூர் மக்கள் தொகை 820. பெரியேரிக்காடு மக்கள் தொகை 780 ஆகும்.

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சேலம் மாவட்டத்தில் மட்டும் இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 71 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க ஆணையிட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சுதந்திரம் பெற்ற காலம் முதல் பேருந்து வசதியே இல்லாத நல்லூர், பெரியேரிக்காடு பகுதிகளுக்கு பேருந்தை இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

**திரு. செ. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா, தாயே, சூரியனை சுட்டெரித்த சுடர் ஒளியே! ‘இலையால்’ வென்று இருண்ட தமிழகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ஒளி விளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) ஊழல் ஆட்சியை ஒழித்திட்ட உத்தமத் தாயே, தாலிக்குத் தங்கம் தந்த தங்கத் தாரகையே, விலையில்லா அரிசி தந்து ஏழைகளின் பசியைப் போக்கிய அன்னமிட்ட தாயே, வானில் உள்ள நட்சத்திரங்களைக்கூட எண்ணிவிடலாம் தாயே, தாங்கள் மக்களுக்கு வாரி வழங்கும் சலுகைகளை எண்ண முடியவில்லை தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புகழ் பாடும் மக்களோ கோடானு கோடி தாயே, தாங்கள் பதவியேற்றபோது 7 கோப்புகளில் கையெழுத்திட்டு ஏற்றதொரு நல்லாட்சியை அமைத்திட்ட இதய தெய்வமே, தங்களைப் பணிவுடன் வணங்குகிறேன். என்னுடைய கோரிக்கையை ஏற்று சேலத்திலிருந்து ஏற்காடு வழியாக வெள்ளக்கடை, நல்லூர், பெரியேரிக்காடு



2013 ஏப்ரல் 19]

கிராமங்களுக்குப் பேருந்து விடப்படும் என அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் மக்கள் குன்னப்பட்டி, கோட்டாத்தூர், புத்தனாம்பட்டி, சமயபுரம் வழியாக சத்திரம் பேருந்து நிலையம் செல்ல புதிய வழித்தடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 86 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 19

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்திலிருந்து, திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி வரை, கல்யாணிப்பட்டி, மேலபெருமாள்பட்டி வழியாக பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பகுதிகளிலே, கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, அனைத்துப் பகுதி மக்களும் சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,353 புதிய வழித்தடங்களில் பேருந்துகளைத் தங்களுடைய திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவை இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், கூடுதல் பேருந்துகள் தேவைப்படும் எஞ்சியிருக்கின்ற இடங்களில் எல்லாம், அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய பகுதிகளில் ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த வழித்தடங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று பேருந்து இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. இரா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்டிருக்கிற, மீனவ மக்கள் அதிகமாக வசிக்கிற அன்னப்பம்பேட்டையிலிருந்து, அய்யம்பேட்டை, பெரியகுப்பம், ஆலப்பாக்கம் வழியாக கடலூருக்குப் பேருந்து ஒன்றினை இயக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, 49 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பேருந்துகள் மக்களுக்குச் சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களில் மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, பேருந்துகளுடைய பயன்பாட்டிற்கு ஏற்ப, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**278—**

**மீன் இறங்குதளம்**

***21607—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆசாத் நகரில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2013 ஏப்ரல் 19

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆசாத் நகரில் மீன் இறங்குதளம் அமைத்திட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், கந்தபரிச்சான் ஆற்றில் கடல்நீர் கலப்பதைத் தடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த 8–4–2013 ஆம் நாளன்று துணைக் கேள்விமூலம் கேட்டேன். நேற்றையதினம் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கந்தபரிச்சான் ஆற்றில் கடல்நீர் கலப்பதைத் தடுக்க ரூபாய் 3 கோடியில் ரெகுலேட்டர் அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், அப்பகுதி மக்களின் சார்பிலும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம் 29 ஊராட்சிகளையும், ஒரு பேரூராட்சியையும் கொண்ட ஒன்றியமாகும். இந்த ஒன்றியத்தில் தொண்டியக்காடு, இடும்பவனம், ஜாம்பானோடை, தில்லைவிளாகம், ஆலங்காடு, கற்பகநாதர்குளம், விளாங்காடு, முத்துப்பேட்டை பேரூராட்சி, பேட்டை, செம்படவன்காடு, துரைக்காடு, கீழவாடியக்காடு ஆகியவை மிகப் பெரிய அளவில் மீனவர்கள் வாழக்கூடிய பகுதிகளாகும். இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 3 கி.மீ. தூரம் கோரையாற்றுக் கால்வாய் வழியாகச் செல்ல வேண்டும். அந்தக் கால்வாய் தூர்ந்துபோய் இருப்பதால், படகுகளை மீனவர்கள் தள்ளிச் செல்ல முடியாத சூழலும், பிடித்த கடல் மீன்களை கரைக்குக் கொண்டு வரமுடியாத சூழலும் ஏற்படுகின்றன. அங்குள்ள 1,000–க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே, சென்ற 2012 ஆம் ஆண்டு, நான் இந்த அவையில் கேள்விகளைக் கேட்டபோது, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால்,



2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், “மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை படிப்படியாக நிறைவேற்றப்படும்” என்று சொன்னார்கள். ஆகவே, இந்தச் சூழலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்துப்பேட்டை, ஆசாத் நகரில் ஒரு மீன்பிடி இறங்குதளம் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையிலுள்ள துரைக்காடு மற்றும் ஆசாத் நகர் பகுதிகளில் சுமார் 85 கண்ணாடி நாரிழைப் படகுகள் மட்டுமே உள்ளன. இந்தக் கண்ணாடி நாரிழைப் படகுகளில் சுமார் 900 மீனவர்கள், கோரையாற்றில் சுமார் 9 கி.மீ. தூரம் சென்று, முத்துப்பேட்டை லகூனில் மீன் பிடித்துவிட்டுத் திரும்புகின்றனர். வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஜாம்பானோடை படகுத் துறையில் அலையாத்திக் காடுகள் 14 கி.மீ. தூரத்தில் ஆரம்பித்து, கடல் முகத்துவாரம் வரை சதுப்புக் காடுகளாக உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, கோரையாற்றின் நீளம் 13 கி.மீ. ஆகும். அலையாத்திக் காடுகள் நிரம்பியுள்ள அந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது; குறிப்பாக reserve forest area–வில் இருக்கிறது. ஆகவே, வனத் துறையின் அனுமதி பெற்று, பணிகள் செய்ய வேண்டியிருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆசாத் நகர் பகுதியில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கத் தற்போது வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்தப் பகுதியில் மீன்பிடி இறங்கு

[2013 ஏப்ரல் 19

*தளம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மீனவர்கள் தங்கள் படகுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை எளிதில் பெறக்கூடிய வகையில் முத்துப்பேட்டையில் ஒரு டீசல் டேங்க் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை, கோரையாற்றில், ஜாம்பானோடை, ஆசாத் நகர் பகுதிகள்* reserve forest area*–வில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் உரிய அனுமதியைப் பெற்று, சாலைகள் அமைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.* Reserve forest area*–வில் இருக்கின்ற இடங்களைப் பெறுவதற்கு அனுமதி வாங்க வேண்டுமெனில், அதற்கு நிறைய சம்பிரதாயங்கள்,* formalities *இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்கள் உள்ளபடியே தொழில் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தப் பகுதிகளில் எந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனினும்,* reserve forest*–ன் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதனை எடுத்துச் சென்று, உரிய முயற்சிகள் எடுத்து, அந்தப் பணிகளை ஆரம்பிப்பதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முயற்சிக்கும் என்பதை இந்தநேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீன்பிடி இறங்குதளம் அமைக்க ஆவன செய்யப்படுமா என்று கேட்க வேண்டும். ஆனால், மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். எனினும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்தும் சிந்திக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 279, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**279—**

## கம்பருக்கு நினைவிடம்

***9776—திரு. ம. குணசேகரன்:**

*மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையில் கம்பருக்கு நினைவிடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையில் கம்பருக்கு நினைவிடம் கட்டுவதற்கான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன், கவிச் சக்கரவர்த்தி கம்பர் தஞ்சை மாவட்டம், தேரழுந்தூரில் பிறந்தவர். இராமாயணத்தைத் தமிழில் இயற்றி, அழியாப் புகழ் பெற்ற இவர், தன்னுடைய இறுதி நாட்களில் பாண்டியநாடு என்று சொல்லப்பட்ட சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையில் வாழ்ந்து, அங்கேயே இயற்கை மரணம் எய்தினார்.*

[2013 ஏப்ரல் 19

*கம்பன் இறந்த இடத்தில் சமாதி அமைக்கப்பட்டு, இன்றளவும் வணங்கப்பட்டு வருகின்ற நேரத்தில், கம்பன் சமாதி உள்ள இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்பதால், அரசு இதுவரை எந்தக் கட்டடமோ, நினைவிடமோ கட்ட முடியவில்லை. கம்பனுடைய தமிழைப் போற்றக்கூடிய வகையில், எந்த விழாக்களும் நடத்த முடியவில்லை. இதனால் இந்தப் பகுதியில் வாழும் மக்களிடத்திலே கம்பனைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியாத ஒரு சூழல் நிலவுகிறது. கம்பன் விழாக்கள் பல ஊர்களிலும், வெளிநாடுகளிலும் கொண்டாடப்படும் நிலையில், கம்பன் மறைந்த ஊரான நாட்டரசன் கோட்டையில் கம்பனுக்கு பெரிய அளவில் விழா எதுவும் எடுப்பதற்கு முடியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு இதை எடுத்துச் சென்று, கம்பர் மறைந்த நாட்டரசன் கோட்டையில் அவருக்கு நினைவிடம் அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வில் ஒன்று, சொல் ஒன்று, இல் ஒன்று” என்று வாழ்ந்த இராமபிரான் புகழ் விளங்க இராமாயணம் எழுதினார் கம்பர். தன் வீட்டுக் கட்டுத்தறியையும் கவி பாட வைத்த கம்பரின் புகழ் நிலைக்க கம்பர் பெயராலே விருது ஏற்படுத்தினார் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இராமர் புகழையும், கம்பர் புகழையும் உலகிற்கு விளக்கும் தமிழ் அறிஞருக்கு கம்பர் விருதளித்து, தமிழுக்குப் பெருமை சேர்த்தார் எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* கம்ப இராமாயணம் இலக்கியத்தில் மிகப் பெரிய இதிகாசமாகும். ஆழமான கவிதை அனுபவமும், புலமைத் திறனும், கற்பனை ஆற்றலும் கம்பரின் கைவண்ணங்களாகும். கம்பர் தான் இயற்றிய இராமாயணத்தை அரங்கேற்றம் செய்திட தகுதிமிக்க ஒரே இடம் இதுவே என்று இன்றைக்கு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை



2013 ஏப்ரல் 19]

இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்துத் தந்திருக்கும் ஸ்ரீரங்கத்தில் அன்றைக்கு அரங்கேற்றம் செய்தார். *(மேசையைத் தட்டும் ஒலி)* கவிச் சக்கரவர்த்தி கம்பரின் அருமை, பெருமைகளை நன்கறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கம்பரின் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும் வகையில் கம்பர் பெயரால் விருது ஏற்படுத்தி, அந்த விருதைக் கம்ப இராமாயணத்தில் உயரிய கருத்துகளைப் பரப்பும் சிறந்த அறிஞருக்கு ஆண்டுதோறும் வழங்கிட ஆணையிட்டு, அதன்படி இந்த ஆண்டிற்கான கம்பர் விருதை தமிழறிஞர் முனைவர் பாலரமணி அவர்களுக்குக் கடந்த 15—4—2013 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியதுடன், அதற்கான பரிசுத் தொகை ரூபாய் ஒரு இலட்சம், ஒரு சவரன் தங்கப் பதக்கம், தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார்கள் என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், கம்பரின் பெருமைகளைப் போற்றிடும் வகையில் முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் கம்பர் பிறந்த ஊரான நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் வட்டம், தேரழுந்தூர் கிராமத்தில் தமிழக அரசின் சார்பில் ரூபாய் 20 இலட்சம் செலவில் கம்பரின் முழு உருவச் சிலையுடன், கம்பர் கோட்டம் கட்டப்பட்டு 10—12—1984 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையில் நினைவிடம் கட்ட வேண்டும் என்று வலியுறுத்துகின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும் என்ற பழமொழிக்கேற்ப பாரதியார்கூட கம்பரைப்போல் ஒரு சிறந்த புலவர் இல்லை என்று பல இடங்களில் சொல்லி இருக்கின்றார். அப்படிப்பட்ட அந்த கம்பருடைய நினைவு நாளில் பல

[2013 ஏப்ரல் 19

பகுதிகளில் இருக்கின்ற மாணவ, மாணவியர் எல்லாம் அந்த கம்பருடைய நினைவிடத்திற்குச் சென்று வணங்கி வருகிறார்கள். இதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவானப் பார்வைக்கு எடுத்துச் சென்று அப்படிப்பட்ட அந்த கம்பன் சமாதியை அரசு ஏற்றோ அல்லது சமாதியிலிருந்து சில அடி தூரத்தில் உள்ள அரசு நிலத்தில் ஒரு நினைவிடத்தைக் கட்டி அதில் அரசு விழா நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சருக்கும் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சமுதாயத்தில் அரும்பெரும் சாதனைகளைப் படைத்திருக்கிற பல்வேறு தலைவர்களுக்கு நம்முடைய அரசு நினைவுச் சின்னங்கள், மணிமண்டபங்கள் அமைத்து, அவர்களுக்கு போற்றுதலுக்குரிய காரியத்தை ஆற்றி வருவது பாராட்டுக்குரியது. இந்த வகையில், நம்முடைய சட்டப் பேரவையில் 30 ஆண்டுகளுக்கு மேலே உறுப்பினராக இருந்து, பணியாற்றியவர் சுவாமி சகஜானந்தா அவர்கள். 1925 ஆம் ஆண்டு ஆதி திராவிட மக்களுக்கு கல்வி வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில், முதன்முதலிலே சிதம்பரம் பகுதியிலே நந்தனார் கல்வி நிலையங்களை உருவாக்கி, இந்தியாவிலும், தமிழகத்திலும் மிகப் பெரிய கல்வி நிறுவனத்தை உருவாக்கி பல்வேறு அறிஞர்களை உருவாக்கி பணியாற்றியவர் சுவாமி சகஜானந்தா அவர்கள். பன்மொழிப் புலவராக வாழ்ந்தவர். துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர். பல துறைகளில் எண்ணற்ற சாதனைகளைப் படைத்தவர். ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர் என்கிற காரணத்தினாலே அவருக்கு உரிய முக்கியத்துவம் இதுவரையிலே வழங்கப்படவில்லை என்கிற ஆதங்கம் அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு சிதம்பரம் பகுதியிலே மணி மண்டபமும், சென்னையிலே ஒரு முழு உருவச் சிலையும் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2013 ஏப்ரல் 19]

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு மணிமண்டபமும், சிலையும் நிறுவச் சொல்லி இங்கே கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதி, மதம் பார்க்காமல், வாழ்ந்து மறைந்துவிட்ட மாபெரும் தலைவர்களுக்கும், சான்றோர்களுக்கும் மணிமண்டபமும், சிலைகளும் அமைத்து பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் உறுப்பினருடைய இந்தக் கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**280—**

## குடமுழுக்கு

***5745—திரு. நயினார் நாகேந்திரன்:**

*மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கலிங்கசுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

[2013 ஏப்ரல் 19

திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கலிங்கசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். ஆண்டு வருமானம் ரூ.5,000–க்குகீழ் உள்ள அந்தச் சிறிய திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜை என்ற திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட சுமார் 30 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திருக்கோயில் பழமையான திருக்கோயிலாக இருப்பதாலும், போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினாலும் 14–வது நிதி ஆணையத்திடம் நிதி வேண்டி பரிந்துரை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணைகளைப் பெற்று திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

**திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் மூத்த மகள், தாய்க்குலத்தின் தனிமகள், தரணிபோற்றும் தங்க மகள், (மேசையைத் தட்டும் ஒலி) தனது ஒரே கையெழுத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு கோடி தமிழர்களின் தலையெழுத்தை மாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாளை ஒரே கையெழுத்தில் 100 கோடி இந்தியர்களின் தலையெழுத்தை மாற்ற இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) திருநெல்வேலி தொகுதி, உக்கிரன்கோட்டை அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில் உக்கிரபாண்டிய மன்னரால் பத்தாம் நூற்றாண்டு காலத்தில் கட்டப்பட்ட பழம்பெருமை வாய்ந்த கோயிலாகும். அந்தக் கோயிலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் 14 ஆம் நிதி ஆணையத்திடமிருந்து நிதியைப் பெற்று குடமுழுக்கு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு, இந்தியா மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவியாய் இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா



2013 ஏப்ரல் 19]

அவர்களுக்கும், வாரித் தந்த வள்ளல் கரங்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**281—**

## பேரூராட்சியை இணைத்தல்

***7593—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, உதயேந்திரம் பேரூராட்சியை மீண்டும் வாணியம்பாடி வட்டத்துடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டத்தில் உள்ள உதயேந்திரம்–1, 2 மற்றும் கொல்லக்குப்பம் ஆகிய மூன்று கிராமங்களை வாணியம்பாடி வட்டத்தில் சேர்ப்பது குறித்த முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் அரசளவில் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாழ்பட்டு நின்ற தமிழகத்தை, பாரதமே வியக்கும் வண்ணம், நாளும் ஒரு திட்டம் தந்து தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர், ஏழைகளின் இதய

[2013 ஏப்ரல் 19

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சிங்களவன் கூட்டத்தை தமிழகத்தின் எல்லைக்குள்ளே தடம் பதிக்க விடமாட்டேன் என்று வீறுகொண்டு எழுந்திட்ட வீரத்தின் விளை நிலமே! வேங்கையின் இருப்பிடமே! வெற்றியின் விலாசமே! தனி மனித இராணுவமே! புனிதம் மிக்க இப்பேரவையில், புரட்சிகர தீர்மானம் இயற்றி, போர்க்குற்ற விசாரிப்பும், பொருளாதாரத் தடையும் வேண்டுமென அனல் பறக்கும் ஆவேசம் காட்டி, அகிலத்தையே உற்று நோக்க வைத்த அறிவுப் பெட்டகமே! எங்கள் அம்மாவே! தங்களை வணங்குகிறேன். தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் பாலாற்றின் ஒரு கரையிலே வாணியம்பாடி தாலுகா அலுவலகமும் மறு கரையில் உதயேந்திரம் பேரூராட்சி–1, 2 மற்றும் கொல்லக்குப்பம் ஊராட்சிகள் அமைந்துள்ளன. சுமார் 25,000–க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் மேற்கண்ட பகுதி மக்களின் பெரும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு புதிதாக உருவாக்கப்பட்ட 25 கிலோ மீட்டர் தூரம் உள்ள ஆம்பூர் தாலுகாவோடு இணைத்து விட்டார்கள். இதன்காரணமாக பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் சாதிச் சான்று, வருமானச் சான்று, இருப்பிடச் சான்று, சிட்டா, பட்டா, முதியோர் ஓய்வூதியம், பிறப்பு இறப்புச் சான்று, குடும்ப அட்டை ஆகியவை பெற மிகவும் சிரமப்படுகின்ற நிலை உள்ளது. எனவே, மீண்டும் 1/2 கிலோ மீட்டர் தூரமுள்ள வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தோடு மேற்கண்ட பகுதியை இணைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையினுடைய அடிப்படையிலே இப்போது ஆம்பூர் வட்டம் இரண்டு வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்றது. அதை ஆம்பூர் வட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று சொன்னால், பிரிக்கப்படுகிற பகுதி பிரிக்கப்பட்ட பின்னாலே, அந்த வட்டத்தினுடைய பரப்பளவு வருவாய் அளவுகோலை சரிசெய்யக்கூடிய விதத்திலே இருக்கவேண்டும். அந்தப் பகுதியினுடைய மக்கள் தொகையானது குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறையாமல் இருக்கவேண்டும். பரப்பளவு பிரிக்கப்பட்ட பின்னால் 250 சதுர கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அதேபோல வருவாய்க் கிராமங்கள் 30–க்குக் குறையாமல் இருக்கவேண்டும். ஆக, அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, இவர் கேட்பதுபோன்று அந்த உதயேந்திரம் பகுதியை ஆம்பூர் வட்டத்தோடு சேர்க்கின்றபோது பிரிக்கப்படுகிற அந்த பகுதியானது அந்த வருவாய் அளவுகோலுக்குக் குறையாமல் இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

**திரு. கோவி. சம்பத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக திட்டங்களே தவிர, திட்டங்களுக்காக மக்கள் இல்லையென செயலாற்றி வருகின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய மாட்சிமை பொருந்திய முதல்வர், சாதாரணத் தொண்டனையும் சாமான்ய மக்களையும் மாற்றிக்காட்டும் சாதனைத்தாய், ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாய், ஏழரைக் கோடி தமிழக மக்களின் இதயத் துடிப்பாய், 125 கோடி இந்திய மக்களின் நாளைய எதிர்பார்ப்பாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 19

**282—**

**நூலகக் கட்டடம் புதுப்பித்தல்**

***19009—திரு. இரா. அண்ணாதுரை:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை, 35–வது வார்டு, மதிச்சியத்திலுள்ள நூலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மேற்கண்ட நூலகக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இடைபட்ட இக்காலகட்டத்தில் மதுரை மாநகர் 35–வது வார்டு 32–யூ, ஜவஹர் வீதி, காந்தி நகரில் அமைந்துள்ள ஷெனாய் நகர் கிளை நூலகமானது மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகை இல்லாமல் இலவசமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த மேற்படி கட்டடம் புதுப்பிக்கப்படுவதற்காக நம்முடைய மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அணணாதுரை அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6,00,000/– வழங்கியுள்ளார். அவற்றோடு நூலக ஆணைக் குழு தன்னுடைய பங்காக ரூ.1,80,000–ம் வழங்கி, ஆக மொத்தம் ரூ.7,80,000 மதிப்பீட்டில் அந்தக் கட்டடம் ஒரு புதிய கட்டடமாக உருவாக்கப்பட்டு வருகிறது. மிகவிரைவில் அந்தக் கட்டடப் பணி முடிவடைகிற தருவாயிலே உள்ளது. முடிவடைந்தவுடன் திறப்பு விழா நடத்தப்படும் என்பதை மாணபுமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு இரா. அண்ணாதுரை அவர்கள்.*

**திரு. இரா. அண்ணாதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை ஷெனாய் நகரிலுள்ள கிளை நூலகம் 1964 முதல் செயல்பட்டு வருகிறது. 22,213 நூல்கள் அதிலிருக்கின்றன. 2,500 வாசகர்கள் இருக்கிறார்கள். தினசரி 70 லிருந்து 100 பேர் வரையிலும் வந்து செல்கிறார்கள். பணியாளர்கள் இரண்டு பேருக்கு ஒருவர்தான் இருக்கிறார். டேபிள் இரண்டுக்கு ஒன்றுதான் இருக்கிறது, 50 சேர் தேவைப்படும் இடத்தில் பத்துதான் இருக்கிறது. அதுவும் ரிப்பேராக இருக்கிறது. கம்ப்யூட்டர் வசதியென்பது இல்லை. மாடியிலே ஒரு கட்டடம் எழுப்பினால் வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கு வசதியாக இருக்கும். மாணவ மாணவிகள் பாடக்குறிப்பெடுப்பதற்கு வாய்ப்பு கேட்கிறார்கள். அதேபோல காம்பவுண்டு சுவரை இன்னும் இரண்டடி உயர்த்திக் கட்டினால் அந்தப் பகுதி பாதுகாப்பாக இருக்கும் என்று கருதுகிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் 6 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், இன்னமும் இரண்டு இலட்சம் ரூபாய் இருந்தால் இதுபோன்ற வசதிகள் செய்யமுடியும் என்று கருதுகிறார்கள். அதற்கான வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணுகுண்டு போட்டால் ஒருமுறைதான் வெடிக்கும். ஆனால் புத்தகத்தைத் திறக்கிறபோதெல்லாம் ஒவ்வொரு முறையும் வெடிக்கும் என்று எழுத்தாளர்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு மகத்தான நூல் நிலையத்திற்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.6 இலட்சத்தை வழங்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சுவர் கட்டுவது, டேபிள் சேர் அளிப்பது, கம்ப்யூட்டர் வைப்பது, வேலையாட்களை அமர்த்துவது என்று ஒரு நீண்ட பட்டியலை அவர் வாசித்தார். ஆனால், அவர் கொடுத்திருக்கிற தொகை 6 இலட்சம் ரூபாய். நீண்ட பட்டியலை வாசித்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் அதிகமாக நிதி தர வேண்டுமென்கிற எண்ணம் எழவில்லையே என்கிற

[2013 ஏப்ரல் 19

வருத்தம் எங்களுக்குள்ளே இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கனிவுடனும், பரிவுடனும் மாண்புமிகு அம்மா அவர்கள் பரிசீலிப்பார்கள். ஏனென்று சொன்னால், நூல்களைப் பற்றி அதிக உணர்வு மிக்கவர்கள், நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வாசிக்காத நூல்களே இல்லை. அவர்கள் படிக்காத நூல்களே இல்லை. தினமும் ஒரு நூலாவது வாசித்து விட்டுத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள், தன்னுடைய பணியை முடிப்பார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட ஒரு கருத்துலக மேதையாக, கருத்துலகத்தினுடைய காப்புப் பெட்டகமாக, ஒரு களஞ்சியமாக, அறிவுலக மேதையாக (மேசையைத் தட்டும் ஒலி) திகழ்கிறவர்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள். அப்படிப்பட்ட அந்த அறிவுலக மேதை, கருத்துக் களஞ்சியம், நம்முடைய காப்புப் பெட்டகமாக விளங்குகிற அம்மா அவர்கள் நமக்குக் கிடைக்கவில்லையென்று சொன்னால், நாங்கள் எல்லாம் நாதியற்றுப் போய் இருப்போம். அப்படிப்பட்ட தலைசிறந்த முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மேலும் தொகை ஒதுக்குவதற்குத் தயாராய் இருக்கின்றேன். அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை இந்த மாமன்றம் அறிய வேண்டுமென்பதற்காகத்தான் அதை இங்கே குறிப்பிட்டேன் என்பதைத் தெரிவித்து, 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூலகங்கள் தமிழ்நாட்டிலே இருந்து வருகின்றன. நூலகங்களை மக்கள் பயன்படுத்த வேண்டும். கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களைக் கொண்ட வாசகர் வட்டம் பல நூலகங்களுக்கு இல்லாத நிலைமை இருக்கிறது. அதை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சொந்தக் கட்டடம் இல்லாத நூலகங்கள் எத்தனை



2013 ஏப்ரல் 19]

இருக்கின்றன என்பதையும், அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூல்கள் என்பன கருத்துக் கருவூலங்கள். ஒருவரது உள்ளத்தில் கருவான எண்ணங்களால் உருவான வளமான சிந்தனைகளை சொற்களால் வடித்தெடுத்து படிக்கின்ற மக்கள் ஆற்றல் பெற்றவர்களாக மாற்றுகின்ற வல்லமை தரக்கூடியவையாக நூல்கள் விளங்குகின்றன. காயம்பட்டவனுக்கு மருந்தாகவும், அறிவுப் பசி எடுப்பவனுக்கு விருந்தாகவும் நூல்கள் அமைகின்றன. அந்தவகையில் நம்முடைய பொது நூலகத் துறையின்மீது அவாவும், ஆசையும் வைத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, நான் பொறுப்பேற்றதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு வாசகர் வட்டம் சின்ன வட்டமல்ல; ஒரு பெரிய வட்டத்தை ஏற்படுத்துகிறவிதத்திலே சம்பந்தப்பட்டிருக்கிற அந்த மாவட்டத்திலே உள்ள எழுத்தாளர்களை அழைத்து அவர்களைக் கவுரவிக்கும்விதத்திலே ஒரு மிகப் பெரிய ஒரு வாசகர் வட்டத்தை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டதன்பேரில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிறகு சொந்தக் கட்டடங்கள் இல்லாத இடங்களில் எல்லாம் சொந்தக் கட்டடம் எழுப்பப்படுமா என்ற கோரிக்கையும் வைத்திருக்கிறார். அதுசம்பந்தமாக மொத்தமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகக் கட்டடம் குறித்து பேசிய திரு. அண்ணாதுரை அவர்களுடைய பெயரிலும் அண்ணா இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அண்ணா நூலகத்தைப் போன்று

அறிவார்ந்த பதில்களை இங்கே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் கிராமப்புற நூலகங்களில் நூலகர்கள் அமர்த்தப்பட்டிருப்பது மிகவும் வரவேற்புக்குரிய விஷயம். நிறைய இளம் பெண்கள், இளைஞர்கள் இந்த வேலைவாய்ப்பை இப்போது தமிழக ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள். அதில் இளம் பெண்களுக்கான பிரசவ கால விடுமுறையில் அரசுச் சலுகை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து பரிசீலித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அந்த உரிமையை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இளம் பெண்களுடைய பிரசவ காலத்திற்கு விடுப்பு அளிக்கப்படுமா என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இது நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்பட்டு அதற்கு உரிய முறையிலே தீர்வு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**268—**

### துணை மின் நிலையம்

***22847—திருமதி செல்வி இராமஜெயம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) புவனகிரி தொகுதி, ஒரத்தூரில் 110 KV திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, ஒரத்தூரில் தற்போது மின்பளு 5.33 எம்.வி.ஏ. என்ற அளவிலேதான் இருக்கிறது. ஆகையால், 110/11 கே.வி. திறனுடைய துணை மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்தும் கடல் சூழ்ந்த கன்னித் தமிழ்நாட்டின் முத்துநிகர் முதல்வரே, முத்தமிழின் காவலரே, நீலக்கடல்போல நீடுபுகழ் கொண்டவரே, எங்கள் மாதர்குல மாணிக்கமே, தமிழ் மண் போற்றும் எங்கள் மாதவமே, சந்தியா தாய் பெற்றெடுத்த சந்தத் தமிழ் மகளே, (மேசையைத் தட்டும் ஒலி) சந்தனத் தமிழின் நறுமணமே, விந்தைமிகு எங்கள் அம்மாமே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதி மற்றும் காட்டுமன்னார்குடி தொகுதிவாழ் மக்கள், விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதியும், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டும், வீராணம் ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்துவதற்காக ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், புவனகிரி தொகுதி விவசாயிகளின் விளைநிலங்களுக்குப் பாசனத்திற்காகப் பயன்பட்டுவரும் சிதம்பரம் வட்டம் வெள்ளாற்றின் குறுக்கே அமைந்துள்ள சேத்தியாத்தோப்பு அணைக்கட்டினை 19.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்தும், புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரியாகுறிச்சி ஊராட்சியில் பொதுமக்களின்

[2013 ஏப்ரல் 19

*நலன் கருதி நவீன வசதிகளுடன்கூடிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணையிட்டுள்ள இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது தொகுதிவாழ் மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்பகுதியில் மின் பற்றாக்குறை அதிகம் உள்ள காரணத்தினாலும் அங்கு மின்அழுத்தம் ஏற்படுகின்ற காரணத்தினாலும், அடிக்கடி அப்பகுதிகளில் உள்ள குடிசை வீடுகள் எல்லாம் பற்றி எரிகின்றன. எனவே, மறுபரிசீலனை செய்து, அப்பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு, 110 கே.வி. திறன் கொண்டது இல்லை என்றாலும் வேறு மாற்று வழி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதி, ஒரத்தூருக்குத் தேவையான 5.33 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்பளுவை அந்தப் பகுதிக்கு 3 துணை மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. 9 கி.மீ. தொலைவிலுள்ள கீரப்பாளையம் 33/11 எம்.வி.ஏ. திறன்கொண்ட துணை மின் நிலையத்திலிருந்தும், 7 கி.மீ. தொலைவிலுள்ள சேத்தியாத்தோப்பு 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்தும் மற்றும் 13 கி.மீ. தொலைவிலுள்ள தி.நெடுஞ்சேரி 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்தும், அந்தப் பகுதிக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிவுடன் ஏற்று, வளர்ந்துவரும் ஒரத்தூர் பகுதிக்குத் தேவையான 5.33 எம்.வி.ஏ. திறன்கொண்ட அளவிற்கு மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வந்தாலும்கூட, அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் பெருகிவரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் செல்வி இராமஜெயம் அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஒரத்தூர் பகுதியில் இல்லை



2013 ஏப்ரல் 19]

என்றாலும்கூட, அதற்கு பக்கத்தில் 2 கி.மீ. தொலைவில் உள்ள மதுராந்தகநல்லூர் கிராமத்தில் 33/11 கே.வி. திறன்கொண்ட ஒரு 8 எம்.வி.ஏ. மின்மாற்றி உள்ளடக்கிய புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அந்தப் புதிய துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு சர்வே எண் 114–ல் 1 ஏக்கர் அளவிற்கு தனியாருக்குச் சொந்தமான நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த நிலம் கையகப்படுத்துகின்ற பணிகள் முடிவடைந்ததற்குப் பின்பு, ஒரத்தூருக்கு பக்கத்தில் உள்ள மதுராந்தகநல்லூரில் 33/11 கி.வோ. திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்கப்படுவதன் மூலமாக பக்கத்தில் உள்ள ஒரத்தூர் பகுதியும் பலனடையும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கையை எடுத்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி இராமஜெயம் அவர்கள்.*

**திருமதி செல்வி இராமஜெயம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகநல்லூரில் ஒரு கூடுதல் மின் மாற்றி அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*புவனகிரி தொகுதி மற்றும் கம்மாபுரம் ஒன்றியம், கீழப்பாளையூரில், 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட ஆள் இல்லாத துணை மின் நிலையம் இயங்கிவருகிறது. இப்பகுதியில் 4,000–க்கும் மேற்பட்ட விவசாய மின் இணைப்புகள் உள்ள காரணத்தால் மின் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படுகிறது. அதனால், கூடுதலாக 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட ஆள் உள்ள துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.*

[2013 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கீழப்பாளையூரிலே, இன்றைக்கு இருக்கின்ற 33/11 கே.வி. திறன்கொண்ட மின் நிலையத்திலே, 8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி அங்கே இல்லை. மாறாக 5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின்மாற்றிதான் அங்கு இருக்கின்றது.. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே வளர்ந்து வரும் மின் தேவையைக் கருத்தில்கொண்டும், 5 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியை மாற்றி, 8 எம்.வி.ஏ. திறன்கொண்ட மின் மாற்றியாக மாற்றுவதற்கு அல்லது தேவையின் அடிப்படையிலே அங்கே செய்கின்ற ஆய்வின் அடிப்படையிலே, மின் தேவை எவ்வளவு என்பதைக் கருத்தில்கொண்டு, தேவையான அளவுக்கு திறன்கொண்ட மின்மாற்றியை கூடுதலாக அமைத்து அந்தப் பகுதியினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**269—**

## பேருந்து நிலையம்

***516—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆலங்குளம் தொகுதி, முக்கூடல் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

*முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில், புதிய பேருந்து நிலையம் திருநெல்வேலி–கடையம் மாநில நெடுஞ்சாலையில், பேரூராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலத்தில், 3 ஏக்கர் பரப்பளவில், உள்கட்டமைப்பு இடைவெளியை நிரப்பும் நிதியின்கீழ், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் நித்தம் நித்தம் புதுத் திட்டம், தமிழக மக்களுக்கெல்லாம் கொண்டாட்டம், இங்கே எதிர்க்கட்சிகள் எல்லாம் திக்குமுக்கு திண்டாட்டம் என்று நாள்தோறும், (மேசையைத் தட்டும் ஒலி) திட்டங்களை அள்ளித் தரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, முக்கூடல் பேரூராட்சி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஆலங்குளம் தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**270—**

## நிலங்கள் ஒப்படைப்பு

***7368—திரு. எம். ஆறுமுகம்:**

*மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2013 ஏப்ரல் 19

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை நில உரிமையாளர்களுக்குத் திரும்ப வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வசம் உள்ள பயன்பாடு இல்லாத நிலங்களில், வீட்டு வசதித் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இந்நிலங்களை நில உரிமையாளர்களுக்கு வழங்கும் உத்தேசமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகமாக, கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளுக்கும் மேலாக தரிசாகவே கிடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது அதைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகச் சொன்னார்கள். பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் பரவாயில்லை. இல்லையென்று சொன்னால், 10, 15 ஆண்டுகளாக அந்த நிலங்களைக் கையகப்படுத்திய காரணத்தினாலே, சாதாரண விவசாயிகள் ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம்கூட இன்னும் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்று பணம் கொடுப்பதற்காகவோ அல்லது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டுவதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் கையகப்படுத்திய அனைத்து நிலங்களுக்கும், நில உரிமையாளர்களுக்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. நில உரிமையாளர்கள் பணத்தைப்பெறாமல், நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள், நிச்சயமாக யாருக்காவது பணம் கிடைக்கவில்லையென்று சொன்னால், வாரியம் உடனடியாக அவர்களுக்கு வழங்கும். மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டம் 2023 இல் 75 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் 25 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் வாரியம் கையகப்படுத்திய நிலங்களைத் திருப்பி ஒப்படைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்கெட் விலை நிர்ணயத்திற்கேற்ப விலை கிடைக்காத காரணத்தினாலே, சம்பந்தப்பட்ட விவசாயிகள் அதை பெறாமல் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைய மார்க்கெட் நிலவரத்திற்கேற்ப விலையைக் கொடுப்பார்களேயானால், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். எனவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் கையகப்படுத்திய இடங்களின் நில மதிப்பு போதவில்லை என்ற வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின்படி நில உரிமையாளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு, வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த நில உரிமையாளர் பணம் வாங்காமல் இருக்கின்றார், இல்லை வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அவருக்கு வேண்டிய உதவிகளை வாரியம் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

[2013 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**272—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

****7079—திரு. செ. காமராஜ்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

**திரு. செ. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழு கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கும் தாயாக, தலைவராக இன்றைக்குத் தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) பாரதத்தினுடைய வருங்கால பிரதமர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியால் தமிழகத்தை இந்தியாவிலேயே வேளாண்மைத் துறையில் முதன்மை மாநிலமாக உருவாக்கி, உலக சாதனை படைத்த காவேரித் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*



2013 ஏப்ரல் 19]

*கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உப்பிடமங்கலத்தில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க, அப்பகுதி விவசாயப் பொது மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் 7 கி.மீ. தொலைவில் கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும், 15 கி.மீ. தொலைவில் இரும்பூதிபட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் மற்றும் 25 கி.மீ. தொலைவில் குளித்தலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் செயல்பட்டு வருகிறது. உப்பிடமங்கலத்தில் பயிர் சாகுபடி செய்யப்படும் பரப்பளவு மிகவும் குறைவாகவே உள்ளது. அதனால் தனியாக உப்பிடமங்கலத்திற்கென ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, உப்பிடமங்கல பகுதி விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கரூர், இரும்பூதிபட்டி, குளித்தலை ஆகிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

**திரு. செ. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடியேனின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வுப் பணி செய்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

[2013 ஏப்ரல் 19

# 2. விதி 110–ன்கீழ் அறிக்கை

## டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வறட்சி நிவாரணம் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை இன்னல்களாகிய வறட்சி, புயல், வெள்ளம் ஆகியவற்றிலிருந்து மக்களைக் காக்கும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வதிலும், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை அளிப்பதிலும், முனைப்புடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளின் நலன்களுக்காகவும், விலைவாசியைக் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காகவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி; வெளிச்சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து 25 கோடி ரூபாய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு; அரிசி விலையை உடனடியாகக் கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள்மூலம் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்; (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வெளிச்சந்தையில் 57 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், 76 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்கப்படும் உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டம் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.



2013 ஏப்ரல் 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதுமட்டுமல்லாமல், உரங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியும், சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரியும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 200 மலிவு விலை உணவகங்கள் சென்னை மாநகராட்சியால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை இயல்பைவிட குறைவாகப் பெய்ததாலும், இடர்ப்பாடு பங்கீட்டு முறையின்படி காவேரியில் நமக்குரிய பங்கினை அண்டை மாநிலமான கர்நாடகம் திறந்து விடாததாலும், சம்பா சாகுபடி பாதிப்பு ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து, சம்பா சாகுபடி பாதிப்பைக் குறைக்கும் வகையில் 68 கோடி ரூபாய் செலவில் புதிய உத்திகளைக் கையாளும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்தது. இதுமட்டுமல்லாமல், 69 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் தொடர்ச்சியாக, டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் கள ஆய்வு மேற்கொண்டு, தனது அறிக்கையை அரசுக்கு 31–1–2013 அன்று சமர்ப்பித்தது.

உயர் மட்டக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில், சென்னையைத் தவிர இதர 31 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்றும், இந்த மாவட்டங்களில் நிலவரி முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும் என்றும், டெல்டா மாவட்டங்களில் 50 விழுக்காட்டிற்கும்மேல் மகசூல் பாதித்துள்ள டெல்டா விவசாயிகளின் 3.61 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதி, பயிர்க் காப்பீட்டு நிவாரணம் மற்றும் காவேரி சிறப்புக் கூடுதல் நிவாரணம் என மொத்தமாக ஏக்கர் ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வழங்கப்படும் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தேன். இதற்கென 541 கோடியே 50 இலட்சம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 19

ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதில், 524 கோடியே 25 இலட்சம் ரூபாய் 3,52,613 விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இது தவிர, விவசாயிகள் தங்கள் கடனைத் திரும்பச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினைக் கருத்தில்கொண்டு, அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றியமைக்கப்படும். அதாவது reschedule செய்யப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1,517 கோடி ரூபாய் அளவிற்கு வேலைவாய்ப்பு தரும் பணிகளைச் செயல்படுத்த நான் உத்தரவிட்டேன். டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கால்நடைத் தீவனப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் 47 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் மேற்கொள்ள உத்தரவிட்டதோடு, தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் சென்னை தவிர, இதர 31 மாவட்டங்களிலும் தற்போதுள்ள 100 நாட்கள் என்ற பணி வரம்பை, 150 நாட்கள் என உயர்த்தவும் ஆணையிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன.

முற்பகல் 11–25

இதன் தொடர்ச்சியாக, டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு 18 மாவட்டங்களில் தனது ஆய்வினை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் விவசாயிகள் மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடனும், மாவட்ட அலுவலர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தது.

மேற்கண்ட குழுவினரின் ஆய்வு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட வறட்சி தொடர்பான



2013 ஏப்ரல் 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அறிக்கைகளின் அடிப்படையில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் நெற்பயிர் உள்ளிட்ட பயிர் வகைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், டெல்டா அல்லாத மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சலுகைகளை நான் இந்த மாமன்றத்தில் அறிவிக்க விழைகின்றேன்.

1. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். எனினும், 50 விழுக்காட்டிற்கு மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் பாதித்துள்ள சுமார் 6,25,481 விவசாயிகளின் 6,25,786 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000/– ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு 312 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டு நிவாரணத் தொகையைப் பொறுத்தவரையில், டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை அரசே செலுத்தியதால், முழு நிவாரணத் தொகையை முன்கூட்டியே தமிழக அரசு வழங்கியது. இந்தத் தொகை பின்னர் காப்பீட்டு நிறுவனங்களால் அரசுக் கணக்கில் செலுத்தப்படும். டெல்டா அல்லாத இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை, பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையை நேரடியாக வழங்கும்.

3. பாசன ஆதாரமுள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்தவரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 2,429/– ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4,000/– ரூபாய்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 ஏப்ரல் 19

வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, பாசன ஆதாரமுள்ள நிலங்களில் நெற்பயிர், நீண்ட கால மற்றும் மல்பெரி அல்லாத பயிர்களை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள சுமார் 1,01,802 விவசாயிகளின் 1,25,386 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000/– ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 50 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. பாசன ஆதாரமற்ற நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்தவரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மாநிலப் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 1,215 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3,000/– ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, பாசன ஆதாரமற்ற நிலங்களில் நெற்பயிர், நீண்ட கால மற்றும் மல்பெரி அல்லாத இதர பயிர்களை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள 10,05,549 விவசாயிகளின் 14,14,126 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000/– ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு 424 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

5. தென்னை உள்ளிட்ட நீண்ட காலப் பயிர்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,239 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள தென்னை உள்ளிட்ட நீண்ட காலப் பயிர்களை சாகுபடி செய்த 50,908 விவசாயிகளின் 1,08,383 ஏக்கர்



2013 ஏப்ரல் 19] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 43 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இதேபோன்று, மல்பெரி அதாவது முசுக்கொட்டை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 1,296 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள மல்பெரி சாகுபடி செய்த 10,602 விவசாயிகளின் 15,262 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 4 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மொத்தத்தில், தமிழகத்தில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17,94,342 விவசாயிகளுக்கு 835 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. இது தவிர, வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடைத் தீவன பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 6 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு பசுந்தீவனம், 18 கோடியே 40 இலட்சம் ருபாய்க்கு உலர்தீவனம் என 24 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. வறட்சி காரணமாக டெல்டா அல்லாத ஏனைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில், முதல் கட்டமாக 40 கோடி ரூபாய் மதிப்பில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்மூலம் நகராட்சிகளிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் பேரூராட்சிகளிலும், 40 கோடி ரூபாய் மதிப்பில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்

துறையின்மூலம் கிராமப் புறங்களிலும், 25 கோடி ரூபாய் மதிப்பில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்மூலம் சென்னையிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமும், ஆக மொத்தம் 145 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–35

10. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 பண்ணைக் குட்டைகள் டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

டெல்டா அல்லாத இதர மாவட்டங்களுக்கென தற்போது 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகளை நான் அறிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வறட்சிக்காக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது இதுதான் முதன்முறை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவன்றி, வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum ஒன்று மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பப்படும். இந்த வறட்சி கோரிக்கை மனுவில் வேளாண்மைத் துறையில் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதற்காக 9,286 கோடியே 20 இலட்சம் ரூபாய்; விவசாயிகள் பெற்ற கூட்டுறவுக் கடன்களை மாற்றியமைத்த வகையில் கூட்டுறவுத் துறைக்கு 182 கோடியே 10 இலட்சம் ரூபாய்; விவசாயிகளுக்குப் பயிரிழப்பு நிவாரணம் வழங்கிய வகையில் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவினத்திற்காக 1,376 கோடியே 71 இலட்சம் ரூபாய்; வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுக்காக 2,424 கோடியே 47 இலட்சம் ரூபாய்; தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீடாக 2,661 கோடியே 32 இலட்சம் ரூபாய்; வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக 5 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் பணிகளுக்காக 1,195 கோடியே 79 இலட்சம் ரூபாய்; கால்நடை பராமரிப்புத் துறைக்கென 247 கோடியே 16 இலட்சம் ரூபாய்; பண்ணைக் குட்டை, மீன் வளர்ப்புக்கென 12 கோடியே 47 இலட்சம் ரூபாய்; பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பிற்கென 1,390 கோடியே 31 இலட்சம் ரூபாய்; ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் உள்ள குழந்தைகளுக்குக் கூடுதல் சத்துணவு வழங்க 333 கோடியே 60 இலட்சம் ரூபாய்; பொது விநியோகத் திட்டத்திற்கென 7.92 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் 550 கோடி ரூபாய் என மொத்தம் 19,665 கோடியே 13 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண கோரிக்கைகள் அடங்கும்.





மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வறட்சி நிவாரணம்– முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் 110 விதியின்கீழ் தமிழகத்திற்கான ஒரு புதிய விடியலை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார். அம்மா அவர்களுடைய சிந்தனையிலே உதிக்கின்ற ஒவ்வொரு துளியும் ஏழை, எளியோர்களின் ஏக்கம் போக்கும் ஏணியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் ஒவ்வொரு பார்வையும் தமிழகத்தை முன்னின்று நடத்திச் செல்கின்ற ஒரு புதிய பாதையாக இருக்கும். அவருடைய வாயசைவு வாழ்விழந்து கிடக்கின்ற கோடானு கோடி மக்களுக்கு வாழ்க்கையாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலேதான் இந்த அவையில் ஒவ்வொரு நாளும் விதி 110–ன்கீழ் அவர்கள் தருகிற அறிக்கை இருக்கிறதே, தாழ்ந்து, வீழ்ந்து கடந்த காலங்களிலே ஒதுங்கிக் கிடந்த தமிழகத்தை உயரத்திலே, உலகத்தின் உச்சிக்கே கொண்டு செல்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அணி அணியாய் அணி வகுத்து நிற்கின்ற நலத் திட்டங்களின் அணிவகுப்பாக இந்த அறிக்கைகள் இருக்கின்றன. சென்னையைத் தவிர அனைத்து 31

மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்தது புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில்தான். தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எப்போதும் தமிழகத்திலே இல்லாத அளவிற்கு 31 மாவட்டங்களையும், சென்னை மாநகரத்தைத் தவிர வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையிலே ஓர் உயர் மட்டக் குழுவை உருவாக்கி, அந்த உயர் மட்டக் குழு 18 மாவட்டங்களிலே பயணம் செய்து, விவசாயிகளை நேரிலே சந்தித்து, அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது இன்றைக்கு 1,754 கோடிக்கு மேலே. . .

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையில் சென்ற உயர் மட்டக் குழு, மொத்தம் 26 மாவட்டங்களுக்குச் சென்று வந்தது. டெல்டா மாவட்டங்கள் 8, டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்கள் 18, இரண்டையும் கூட்டினால் 26 மாவட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் எவ்வளவு ஆற்றல் படைத்தவர்கள், ஒரு சின்ன நெருடல், சின்ன குறை, கணக்கிலே ஒரு பிழை என்றால்கூட, (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் துல்லியமாகச் சொல்லக்கூடிய பேராற்றல் பெற்றவர்கள் என்பதை நாம் இந்த மாமன்றத்திலே அறிந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தத் தவறை நான் திருத்திக் கொள்கிறேன். 26 மாவட்டங்களிலே பயணம் செய்திருக்கின்ற அந்தக் குழு, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் தந்திருக்கின்ற அந்த அறிக்கையின் பேரிலே இன்றைக்கு 1,700 கோடி ரூபாய்க்கு மேலே தமிழகத்திற்கு, தமிழக விவசாயப் பெருமக்களுக்கு வளமும், நலமும் கிடைத்திருக்கிறது. "வாடிய பயிர்களைக் கண்டபொழுதெல்லாம் வாடினேன்" என்று சொன்ன வள்ளலாரின் வாரிசாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வறட்சி இயற்கையின் சீற்றத்தால் அமையலாம். ஆனால், அந்த இயற்கையின் சீற்றத்தைக்கூட கட்டுப்படுத்துகிற பேராற்றல், சுட்டெரிக்கும் சூரியனையும் இரட்டை விரல் காட்டி கட்டுப்படுத்துகிற ஆற்றல், (மேசையைத் தட்டும் ஒலி) விரலைக் காட்டினாலே அது ஒடுங்கிப் போகும் என்கிற அளவிற்கு பேராற்றல் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. வறட்சி வெளியே இருக்கலாம், அது இயற்கையின் சீற்றத்தால் இருக்கலாம். ஆனால், எப்போதும் வறண்டு போகாத ஜீவ நதியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உள்ளம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிலைத்து நிற்கக்கூடிய, எப்போதும் வழிந்து ஓடிக் கொண்டிருக்கின்ற நீர்வீழ்ச்சியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணமும், இதயமும் இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதே இந்த நலத் திட்டங்களின் அணிவகுப்பு. அது தென்னை விவசாயியானாலும், மல்பரி விவசாயியானாலும், நெல் விளைவிக்கின்ற விவசாயியானாலும், எந்த விவசாயியானாலும் அனைத்து விவசாயிகளும் 50 சதவீதத்திற்கு மேலே இழப்பு பெற்றவர்களானாலும், 50 சதவீதத்திற்கு உள்ளே இழப்பு பெற்றவர்களானாலும், தமிழகத்திலே கடைக் கோடியிலே கால் ஏக்கர் நிலத்தோடு இருக்கிற அந்த விவசாயிகூட எந்த வகையிலும் சோர்ந்து போகாத வகையிலே இன்றைக்கு 1,700 கோடி ரூபாய்க்கு மேலே படிப்படியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 3 ஆயிரம் ரூபாய், 4 ஆயிரம் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய் என இருக்கின்ற அந்த எல்லைகளையும், மரபுகளையும் உடைத்து, அதற்கு மேலே வாரி வழங்கியிருக்கின்ற அந்த உள்ளத்தை, தமிழக விவசாயிகளின் கடைசி விவசாயிகூட (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியோடு பாராட்டுவான் என்கின்ற வகையிலே நன்றி பாராட்டி அமைகிறேன். வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கடைசி மனிதனின் மிக மென்மையான முனகல் கோரிக்கை என்று சொல்லக்கூடிய ஒரு கோரிக்கையாக, கடைசியாக வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கோரிக்கை வைத்து கேட்ட

[திரு. உ. தனியரசு] [2013 ஏப்ரல் 19

விவசாயிகள் டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் அம்மா அவர்கள் தாராளமாகக் கொடுத்தார்கள், வரலாற்றில் இதுவரை வெள்ளத்தால், வேறு இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வழக்கமாகப் பெற்றுக் கொண்டிருந்த உதவித் தொகையை வறட்சியால் ஒரு விவசாயி பாதிக்கப்பட்டபோதுகூட அவர்கள் எந்த வகையிலும் சோர்ந்து போய்விடக் கூடாது என்று ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாயைத் தந்து ஒரு மிகப் பெரிய புதிய சரித்திரத்தை *(மேசையைத் தட்டும் ஒலி)* விவசாயிகளுக்காகப் பதிவு செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகள் வகைவகையான பயிர்களை, உணவுப் பொருட்களைத் தயார் செய்கின்ற விவசாயிகளையும் கணக்கெடுத்துள்ளார்கள்.

*முற்பகல் 11–45*

நேற்றுகூட விவசாயப் பிரதிநிதிகளை, விவசாயிகளை நாங்கள் சந்தித்துப் பேசுகின்றபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏனைய மாவட்ட விவசாயிகளுக்கு ஏதாவது தருவார்களா, அதுகுறித்து என்ன நடக்கிறது என்று கேட்டார்கள். அப்போது நான் அவர்களிடத்திலே சொன்னேன். வகை வகையான, நூற்றுக்கணக்கான பயிர்களை விவசாயம் செய்கிறபோது, அரை ஏக்கரில் ஒரு விவசாயி ஒரு பயிரைப் பயிர் செய்கிறார், பக்கத்து விவசாயி வேறு ஒரு வகையில் பயிர் செய்கிறார். எவர் எதைச் செய்கிறார் என்று உள்ளூர் வருவாய் அதிகாரிகள் கணக்கிடுவதே சிரமம். ஒருவர் விவசாயமே செய்யாமல் இருக்கிறார்; இந்தச் சூழ்நிலையில் அரசிடம் நாம் எதை முறையிட்டு வலியுறுத்துவது என்று நான் அவர்களிடம் வினவியபோது, அவர்களாலேயே அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. நேற்று இரவு 9–00 மணிக்குப் பேசினோம். இன்றைக்குக் காலையில் 11–00 மணிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவிப்புச் செய்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* விவசாயிகளுக்கே தெரியாது, எந்தெந்த வகையில் வகைப்படுத்தப்பட்ட விவசாயிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள் என்பது சக விவசாயிகளுக்கே தெரியாது. அப்படி வகை, வகையான விவசாயிகளைக் குறித்து, அவர்களுடைய பயிர் சாகுபடிக்கேற்ப நிதி உதவியைத் தந்த ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சிறு, குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய், தென்னை விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் நிவாரணத் தொகை



2013 ஏப்ரல் 19] [திரு. உ. தனியரசு]

வழங்கி பாகுபாடற்ற உதவி செய்திருக்கிறார்கள். இதுவரை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலே வறட்சி நிவாரணத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்குத் தந்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நேற்றைக்குக்கூட எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் தொலைக்காட்சி விவாதத்திலே கலந்துகொண்டு பேசும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சிகள் கேட்டுத் தருகிற அளவிற்குப் பலவீனமாக இல்லை; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் மனதிற்குள் நினைப்பதை அள்ளித் தருகிற ஒப்பற்ற முதல்வர் என்று நான் சொன்னேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மகாபாரதத்திலே குந்தி தேவியார் குறிப்பறிந்து பணி செய்வதிலே வல்லவர். துருவாச முனிவர் ஒரு மிகப் பெரிய கோபக்கார முனிவர். யாருமே அவரைத் திருப்திப்படுத்த முடியாது. அவருக்கு அதிக கோபம் வரும். அவருக்கு கோபம் வந்தால், சாபம் கொடுத்துவிடுவார். அதனால் பயந்துபோய் அவரிடம் யாரும் போகமாட்டார்கள். அவர் அரண்மனைக்கு வந்தபோது, குந்தி தேவியார்தான் துணிந்து, அந்த மூத்த மகானுக்கு மகிழ்ச்சியுடன் பணிவிடை செய்ய ஒத்துக்கொண்டார்கள். பணிவிடை செய்வதற்கு ஒத்துக்கொண்டு, அவரது மனம் வருத்தப்படாத அளவுக்கு, அவர் விரும்பியதைவிட கூடுதலாக, அவருக்குத் தேவையான கடமைகளை மகிழ்வாகச் செய்தார்கள். தேவையான விருந்தோம்பலையெல்லாம் மிகச் சரியாகச் செய்ததால், அவரிடம் பரிசுபெற்ற ஒரே பெண்மணி குந்தி தேவியார்தான். குந்தி தேவியாரிடம் "நீ என்னவெல்லாம் வேண்டுமென்று நினைக்கிறாயோ, அதையெல்லாம் கொடுப்பேன்" என்று துருவாச முனிவர் சொன்னாராம். அன்னை தமிழகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய மனம் அறிந்து, அவர்களுடைய குறிப்பறிந்து, எவரொருவரும் கேட்பதற்கே வாய்ப்புத் தராமல், ஒவ்வொரு துறையிலும், நிலுவையிலுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றும்வகையில் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அலாதியான அறிவிப்பு என்பது தினமும் வந்து கொண்டேயிருக்கிறது. உலக ஆட்சியாளர்களில் இதுவரை எவரொருவரும் இப்படி குறிப்பறிந்து, மக்களின் தேவையறிந்து,

உடனுக்குடன் உதவி செய்து கடமையாற்றியதாக வரலாறே கிடையாது. எந்த ஆட்சியிலும் இதுபோன்ற ஓர் ஒப்பற்ற ஆட்சியாளரை நாம் எங்கும் பார்க்க முடியாது. எவ்வளவு ஆட்சியாளர்கள் வேண்டுமானாலும் வரலாம், எத்தனைக் கட்சிக்காரர்கள் வேண்டுமானாலும் வரலாம். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குக்கூட நீங்கள் ஓர் ஆட்சியாளரைக்கூடச் சொல்ல முடியாது. அப்படிக் குறிப்பறிந்து, குறிப்பறிந்து, கடைசி மனிதனுடைய உணர்வைக்கூட மதித்து அப்பழுக்கில்லாமல் செயல்படுகிற ஒரே முதல்வர் அம்மா அவர்கள்தான். பேரிடர் நிவாரணமாக 2,400 ரூபாய் மத்திய அரசு கொடுத்தது என்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கேட்கிறவர்களே அசந்துபோகிற அளவுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள். அப்படியொரு கொடையுள்ளம், அப்படியொரு ஆட்சி அதிகாரம், நிருவாகத் திறமை படைத்தவர்கள் அம்மா அவர்கள். சாதி, மதம் கடந்து, பாகுபாடில்லாமல் வகை, வகையாக இருக்கும் விவசாயிகளுக்குள் அப்படி ஒரு வேதனை, கருத்து மாறுபாடு வந்துவிடக்கூடாது என்பதற்காக நிவாரண உதவியை அனைவருக்கும் வழங்கியவர் அம்மா அவர்கள். 24 மணி நேரமும் துறைகளையெல்லாம் கவனமாகக் கண்காணிக்கின்ற ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னைத் தமிழகத்தினுடைய விவசாயிகள், உலகத்திலேயே மிக உயர்வான உலகம் போற்றுகின்ற, மானுடம் போற்றுகின்ற, தொழில் உழவுத் தொழில் என்று திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்து மானுடர்களுடைய உயிரைக் காக்கின்ற உணவைத் தருகின்ற ஒப்பற்ற விவசாயிகள் 'அவர்கள் வேதனைபடவே கூடாது என்று, அவர்களுடைய வேதனையை மாற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'கடல்மேல் பிறந்தான், கண்ணீரில் வாழ்கிறான்' என்கின்ற கடல்வாழ் மீனவர்களுடைய சரித்திரத்தை மாற்றியவரும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். நிலத்திலே உழவுத் தொழிலிலே ஈடுபடுகின்ற உழவர் சமூகம் இன்புற்று மகிழ்வோடு வாழ்வதற்காக ஆயிரம், ஆயிரம் கோடி ரூபாய்களைத் தந்து அரசு நிருவாகத்திலும், ஆட்சித் துறை





வரலாற்றிலும் புதிய சரித்திரத்தைப் படைத்திருக்கின்ற ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அறிவிப்புகளை நான் மனமார வரவேற்றுப் பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி, வெள்ளம், இயற்கைச் சீற்றங்கள் போன்ற காரணங்களால் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கின்றன. சந்தையிலே அரிசியின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது; அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டு, அரசே 1 கிலோ நல்ல தரமான அரிசியை 20 ரூபாய்க்குத் தரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விற்பனையைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று துவரம் பருப்பு போன்ற பொருட்களெல்லாம் சந்தையிலே விலை அதிகமாக இருப்பதை அறிந்து, எப்படியும் அவற்றின் விலையைக் கட்டுப்படுத்தியே தீரவேண்டுமென்றும், அவற்றை மக்களுக்குக் குறைவான விலையில் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும் தமிழக அரசு போடுகின்ற மதிப்புக் கூட்டு வரியைக் குறைத்துக் கொண்டதோடு, அனைத்துப் பகுதிகளிலும் 'அம்மா உணவகம்' உருவாக்கி, விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுத்திருக்கும் முதல் முயற்சிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நாங்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

வறட்சி நிவாரணம் பற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருந்தார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். வேறு பகுதியிலுள்ள மக்களுக்கும் நிவாரணத் தொகை அறிவிக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்று விதி 110—ன்கீழ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற 26 மாவட்ட விவசாயிகளின்

[திரு. பி.வி. கதிரவன்] [2013 ஏப்ரல் 19

மனதையும், குளிர்விக்கும் விதத்திலே நிவாரண உதவியை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொருவரும் உண்மையிலேயே பாராட்டக்கூடியவகையிலே, 31 மாவட்டங்களுக்குப் பல்வேறு வறட்சி நிவாரணங்களை அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதை உண்மையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த வறட்சிப் பகுதிகளிலே குடிதண்ணீர்ப் பற்றாக்குறை வந்துவிடக்கூடாது என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.145 கோடியை உடனடியாக ஒதுக்கி, தமிழகத்தில் எங்கும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கக்கூடாது என்பதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) ரூ.145 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்த நேரத்திலே செய்யப்பட வேண்டிய ஒன்றை குறிப்பறிந்து செய்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை நிச்சயமாகப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கையைப் படித்த பிறகு, எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். இப்படியெல்லாம் செய்யலாமா என்று எதிர்க்கட்சிகள் நடத்தும் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது, பார்த்தோம். தமிழக மக்களுடைய உண்மை நிலையை அறிந்து, தமிழக மக்களுக்கு என்ன தேவைப்படும் என்பதை அறிந்து, அதற்காக ஒவ்வொரு நாளும் திட்டமிட்டு, இந்த மக்களைப் பாதுகாக்கின்ற ஒரு காவலனாக விளங்குகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக எதிர்கட்சியிலே இருக்கின்ற தலைவர்களெல்லாம் பாராட்டிக்கொண்டே இருப்போம் என்பதை இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்லி, எங்களுடைய அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டி வரவேற்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், தமிழகமே மிகப்பெரிய



2013 ஏப்ரல் 19] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பாதிப்புக்கு ஆளாகி, விவசாயத்தையே உயிர் நாடியாகக் கருதிய விவசாயிகள் பெரிய பாதிப்புக்கு ஆளாகி, அடுத்த முறை தாங்கள் எப்படி விவசாயம் செய்வது என்ற கவலையோடு இருந்தார்கள். வாங்கிய கடனை எப்படி அடைப்பது என்ற நிலையிலே வாடிக் கொண்டிருந்த டெல்டா மாவட்ட விவசாயிகளின் துயரைப் போக்கக்கூடியவகையில், அவர்களுக்கு ஏக்கருக்கு ரூ.15,000 என்று நஷ்ட ஈட்டை ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்திருந்தார்கள். தென் தமிழகம் மற்றும் மேற்கு தமிழகத்திலே ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே விவசாயம் செய்யக்கூடியவர்கள் பெரும்பாலான விவசாயிகள். நெல் மற்றும் பிற விவசாயப் பயிர் வகைகளையும், பயறு வகைகளையும் மிக அதிகமாக விளைவிக்கக்கூடியவர்கள் தென் தமிழகத்தில் இருக்கக்கூடியவர்கள். மேற்கு மாவட்டத்தில் தென்னையை நம்பியிருக்கக்கூடிய விவசாயிகள்தான் அதிகம். அந்த விவசாயிகளும் நமக்கும் நஷ்ட ஈடு கிடைக்காதா என்ற பெரிய ஏக்கத்தோடு இருந்தார்கள். அதற்காக இந்தச் சட்டமன்றத்திலே நாங்களெல்லாம் குரல் கொடுத்திருந்தோம். இப்பொழுது அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர்களை உள்ளடக்கிய குழு ஆய்வு செய்து வழங்கிய அறிக்கையின் அடிப்படையில், டெல்டா அல்லாத மாவட்ட விவசாயிகளுடைய துயரையும் போக்கக்கூடிய வகையிலே இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்டு பாதிப்புக்கு ஆளாகி இருக்கக்கூடிய அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்ட ஈடு வழங்கக்கூடிய வகையில், ஏக்கருக்கு ரூ.5,000/–, ரூ.3,000/– ரூ.2,000/– என்று தென்னை மற்றும் முந்திரி போன்ற பணப் பயிர்கள் உட்பட அனைத்துப் பயிர்களுக்கும் நஷ்ட ஈடு அறிவித்திருக்கிறார்கள். இது விவசாயிகளுடைய வாழ்விலே ஒரு நம்பிக்கையை ஊட்டக்கூடியது. இனிமேல் வறட்சியாக இருந்தாலும் அல்லது வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்டாலும், காப்பாற்றுவதற்கு ஓர் அரசு இருக்கிறது என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் நிச்சயமாக (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய தொழிலைச் செய்ய முடியும்.

முற்பகல் 11–55

அந்த வகையில், இன்று விதி 110–ன்கீழ் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு மட்டுமின்றி, எதிர்வரக்கூடிய வறட்சியை சமாளிக்கக்கூடிய வகையில், குடிநீர்ப் பஞ்சத்தையும் போக்கக்கூடிய வகையில் 1,750 கோடி ரூபாய் அளவிலே பல்வேறுவிதமான திட்டங்களை

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2013 ஏப்ரல் 19

அறிவித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இந்த வறட்சியின் காரணமாக தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ரூ.19,000 கோடி இழப்பை மத்திய அரசு சரி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக, பிற மாநிலங்களுக்கு மத்திய அரசு செய்யக்கூடிய உதவியைப்போல, தமிழ்நாட்டின் கோரிக்கையையும் ஏற்று செவி சாய்க்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்த்தி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சுனாமியைப் பார்த்துவிட்டார்கள். அது ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. முதலில் சுனாமி வந்தது. பிறகு ‘தானே’ புயல் கடலூருக்கு வந்து, அதுவும் போய்விட்டது. அதன்மூலம் இந்த அரசுக்குக் கெட்ட பெயர் வருமா என்று எதிர்பார்த்தார்கள்; முயற்சி செய்தார்கள். ஆனால், அதிலும் அம்மா அவர்கள் வெற்றியடைந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளத்தைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். அதனால் நிறைய சேதாரங்கள் ஏற்படும். அதை முதலமைச்சர்கள் சென்று பார்த்துவிட்டு நிவாரணம் வழங்குவார்கள். ஆனால், இந்தியாவிலேயே இந்த மாநிலத்தில்தான் வறட்சியின் மூலமாக பாதிக்கப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. வீட்டிலே டி.வி—யை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இன்று மிகவும் சந்தோஷமாக இருப்பார்கள். இந்த நிகழ்ச்சி டி.வி.—யில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும். முதலில் டெல்டா மாவட்டம் என்று சொல்லிகொண்டிருந்தார்கள். இப்போது எல்லா மாவட்டங்களுக்கும் நிவாரணம் தருகிறார்கள். அன்றைக்கு எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அத்தனை மாவட்டங்களையும் மாண்புமிகு அமைச்சர்கள் அடங்கிய குழு பார்வையிட்டது. அவர்கள் பார்வையிட்டுச் செல்லும்போது, சில பேர், அவர்கள் நமக்குச் செய்வார்களா என்று வினவிக் கொண்டிருந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். நாட்டை ஆளுகின்ற மாண்புமிகு



2013 ஏப்ரல் 19] [திரு. ஆ. நாராயணன்]

முதல்வர் அவர்கள் கடவுள் ரூபத்தில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கு என்ன தேவை என்று தெய்வத்திற்குத்தான் தெரியும். மத்திய அரசு தமிழகத்தை எவ்வளவு வஞ்சித்தாலும்கூட, இன்றைக்கு விதி 110—ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்கள் நிவாரண உதவியை அறிவித்திருக்கின்றார்கள்.

ஒரு கிலோ அரிசி ரூ.20/—க்கு எந்த நாட்டிலும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை மக்களுக்கு விலையில்லா அரிசி கொடுத்தார்கள். நடுத்தர மக்கள் முதல் பணக்காரர்கள் வரை கடையில் சென்று வாங்கிக்கொள்ளுங்கள் என்கிற அளவிற்கு இன்றைக்கு ரூ.20/—க்கு ஒரு கிலோ அரிசியை எல்லோரும் சாப்பிடலாம் என்று கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இரண்டாகத் தரம் பிரிக்க வேண்டும்? இரண்டாகத் தரம் பிரிக்கிறார்களே என்று அவர்களுக்கும் கொடுத்தார்கள். விவசாயிகளில் நிறைய பாதிக்கப்பட்டவர்கள், நடுத்தரமாக பாதிக்கப்பட்டவர்கள் அனைவருமே அதை வாங்கிச் சாப்பிடலாம். ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவரையும் ஒன்றாகப் பார்க்கின்ற ஓர் அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, ரேஷன் கடைகளில் பாமாயிலிலிருந்து உளுந்து மற்றும் துவரம் பருப்பு போன்ற ஏழை மக்களுக்குத் தேவையான அனைத்தையுமே மானிய விலையிலே வழங்கி, இந்த தமிழ்நாட்டு மக்களை சந்தோஷமாக வைத்திருக்கிறார்கள். பல கோடி ரூபாய் திட்டங்களை மக்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மனிதர்களுக்கு மட்டுமல்ல, மாடுகளுக்கும் தீவனங்கள். நம் வயிறு மட்டும் நிறைந்தால் போதுமா, மாடுகள் என்ன செய்யும், அவற்றையும் விட்டுவிடக் கூடாது என்று அந்த பசு மாடுகளையும் வளர்க்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அளவிற்கு ஒரு பெரிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

புதியதோர் உலகம் செய்ய புறப்பட்டிருக்கும் புரட்சித் தலைவியே, கெட்டவரிடமிருந்து உலகத்தை வேரோடு மீட்கும் அஞ்சா நெஞ்சமே, (மேசையைத் தட்டும் ஒலி) தொடரும் வெற்றிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்; வெற்றியின் முகவரியே! (மேசையைத் தட்டும் ஒலி) தென்றல் கண்டு துயில்வதும் இல்லை; புயலைக் கண்டு புறமுதுகு காட்டுவதுமில்லை

[திரு. ஆ. நாராயணன்] [2013 ஏப்ரல் 19

*(மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரே சிந்தனையுடன் சாதனை படைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், எங்கள் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்தி அமர்கிறேன். நன்றி.*

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை பொய்த்ததால், வாழ்வின் விடியலை இழந்து நிற்கக்கூடிய தமிழக விவசாயிகளுக்குப் புதிய விடியலைத் தரக்கூடிய வகையிலே, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு முதன்முறையாக வறட்சி நிவாரணத்தை டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு, ஆளுநர் உரைக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.*

*அந்தக் கூட்டத் தொடருக்குப் பிறகு, நான் என்னுடைய தொகுதிக்குச் சென்றேன். இராமநாதபுரம் தொகுதி, திருப்புல்லாணி ஒன்றியத்திலுள்ள விவசாயிகள் பல்வேறு வகையான பயிர்களை விவசாயம் செய்கின்றார்கள்; தென்னை, நெல், மிளகாய், மல்லி போன்றவற்றை விவசாயம் செய்கின்றார்கள். அந்தப் பகுதிகளை நான் ஆய்வு செய்தபோது, அங்குள்ள விவசாயிகள் "டெல்டா விவசாயிகளுக்கு மட்டும்தானா இந்த வசந்தம், எங்களுக்குக் கிடையாதா?" என்று ஏக்கத்துடன், காய்ந்துபோன பயிர்களையெல்லாம் காட்டி என்னிடம் முறையிட்டார்கள். அப்போது, நான் அவர்களிடம், "சற்று பொறுத்திருங்கள், மழை பொய்த்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வசந்தம் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு விரைவிலே வரும், அதற்கான அறிவிப்பு வரும்" என்று சொன்னேன். அந்த அடிப்படையில், இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரவை விதி 110–ன்கீழ், பல்வேறு வகையான விவசாயிகள், பாசன ஆதாரமுள்ள, பாசன ஆதாரமற்ற நிலங்களில் விவசாயம் செய்யக்கூடிய 17,94,342 விவசாயிகளுக்கு, 835.21 கோடி ரூபாயை நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள். "இயற்கை பொய்த்தாலும் இந்த அரசு பொய்க்காது, இந்த அரசு மக்களுடைய, விவசாயிகளுடைய வாழ்வை (மேசையைத் தட்டும் ஒலி)*



2013 ஏப்ரல் 19] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

*வளமாக்கும்" என்பதை பறைசாற்றும் வகையில் செய்த இந்த அறிவிப்புக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*விவசாயிகள் மட்டுமல்ல, வாயில்லா ஜீவராசிகளையும் இந்த அரசு கவனமாக, கனிவாக கருத்தில் கொண்டிருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே, தீவனங்களுக்காக 24.65 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்ததற்காகவும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மிகக் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இந்தக் கோடையிலே தமிழக மக்களை வாட்டி எடுக்குமோ என்ற ஒரு அச்சம் நிலவக்கூடிய சூழலில், கிராம ஊராட்சி முதல் பேரூராட்சி, நகராட்சி, சென்னை மாநகராட்சி வரை குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்க 145 கோடி ரூபாயை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழகம் இந்தியாவிலேதான் இருக்கின்றது; தமிழகத்தில் வாழக்கூடிய மக்களும் இந்தியக் குடிமக்கள்தான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசாங்கத்திடம் 19,665.13 கோடி ரூபாய்க்கு* drought memorandum, *அதாவது வறட்சிக் கோரிக்கை மனுவை அளிக்கவிருக்கின்றோம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மத்திய அரசு தன்னுடைய பங்களிப்பையும் தமிழகத்திற்குச் செய்வதற்கு முன்வர வேண்டுமென்று சொல்லி, ஒட்டுமொத்தமாக விவசாயிகளுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இன்றைய அறிவிப்பை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக நெஞ்சார வரவேற்று, நன்றி சொல்லி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

****திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவமழை பொய்த்துவிட்டது, விவசாயிகளெல்லாம் கஷ்ட, நஷ்டத்திற்கு ஆளாகிவிட்டார்கள் என்ற சங்கடத்தைப் போக்கும்வகையில், 31 மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்*

[திரு. ஜேஜி. பிரின்ஸ்] [2013 ஏப்ரல் 19

தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு 26 மாவட்டங்களில் பார்வையிட்டு, விவசாயிகளின் நலன் கருதி, அவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன; அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தத் தரப்பு மக்கள் பாதிக்கப்பட்டாலும், விவசாயிகள், அடிமட்ட மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, அவர்களும் வாழ்ந்து, நல்ல வாழ்க்கை நடத்த வேண்டும், தமிழகத்தில் பட்டினி இல்லாமல் வாழ வேண்டும் என்பதற்காக அவர்களுடைய பாதிப்பை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில், கண்ணும்கருத்துமாக கரிசனையோடு எடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன்.

பிற்பகல் 12–05

வறட்சியிலே, கால்நடைகள்கூட பாதிக்கப்படக்கூடாது என்று அதற்கும் உதவித் தொகை கொடுத்திருக்கிறார்கள். டெல்டா மாவட்டங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதற்கும் பரிகாரம் செய்திருக்கிறார்கள். 200 மலிவு விலை உணவகங்களை அமைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை மக்களுக்குக் கொடுத்திருப்பதை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இங்கே அன்புக்குரிய நண்பர் பேசுகின்றபோது மத்திய அரசுக்கு கரிசனை இல்லை, பார்க்கவில்லை என்று சொன்னார்கள். ஏனென்றால், மத்திய அரசைப் பொறுத்தமட்டிலும், அனைத்து மாநிலங்களையும் பாரபட்சமில்லாமல் பார்க்கிறது என்பதுதான் உண்மை. (குறுக்கீடு) இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19 ஆயிரத்து 665 கோடியே 13 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப் போவதாகக் கூறி இருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலே நாங்களும் உடன் இருப்போம், தமிழகம் வாழ வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது. ஆகவே, நாங்களும் உங்களுடன் ஒத்துழைப்போம். இந்தத் தொகையைப் பெற்று தமிழகம் வளமாக நிறைவாக வாழட்டும் என வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.



2013 ஏப்ரல் 19]

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து 110 விதியின்கீழ் மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களை, அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோணத்திலே நாங்கள் வரவேற்றிருக்கிறோம், ஆதரித்து இருக்கிறோம், பாராட்டி இருக்கிறோம். ஆனால், இன்றைக்கு அறிவித்திருக்கிற 110 விதி என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற விவசாய மக்களுக்கான ஒரு புதிய விதியை, தலை விதியை மாற்றி அமைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னதுபோல, இதுவரை 65 ஆண்டு சுதந்திர இந்தியாவில் இந்திய நாடு எத்தனையோ வறட்சியை எதிர்நோக்கி இருக்கிறது. ஏன், இன்னும் சொல்லப்போனால், செந்தமிழ் நாடு என்று புகழக்கூடிய தமிழ்நாட்டில்கூட கடந்த காலங்களில் கடுமையான வறட்சி ஏற்பட்டு, மக்கள் எல்லாம் நாள்தோறும் ஒரு படி அரிசி அல்லது ஒரு கிலோ அரிசி கிடைக்காமல், கோதுமைக்கும், மக்காச் சோள மாவிற்கும் அலைந்து, வயல்வெளிகளில் ஊரணிகளில் இருந்த தண்ணீர் வற்றியதற்குப் பின்னாலே இருந்த தாமரைக் கிழங்குகளையெல்லாம் தோண்டி எடுத்து சாப்பிட்டு, மறைந்தும் மறையாமலும் இருக்கிற மாபெரும் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் அவர்களால் கஞ்சித் தொட்டி திறக்கப்பட்ட காலமும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட காலத்தில்கூட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் என்று அறிவிக்காத நிலையில், இன்றைக்கு இந்தியாவிலேயே விவசாயிகளுடைய போராட்ட வாழ்க்கையில் ஒரு மறுசிந்தனையாக, ஒரு திருப்புமுனையாக தமிழகத்திலே முதல்முறையாக இந்த வறட்சி நிவாரணம் அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணம்கூட ஒவ்வொரு முறையும் எந்தவொரு மாநிலமாக இருந்தாலும், வெள்ளமாக இருந்தாலும், வறட்சியாக இருந்தாலும், புயலாக இருந்தாலும் அதை மதிப்பீடுகள் செய்து, மத்தியக் குழு வருகை தந்து, மீண்டும் மதிப்பீடுகள் செய்து, மத்திய அரசு என்ன சொல்கிறது என்று கேட்டு, அவர்கள் அறிவிப்பை ஒட்டி நிவாரணங்கள் வழங்குவது என்பது இயல்பாக, இயற்கையாக கடந்த காலங்களில் நடந்தது.

[திரு. சு. குணசேகரன்] [2013 ஏப்ரல் 19

ஆனால், இந்த முறை தமிழ்நாட்டில் காவேரி டெல்டா பகுதி உட்பட தமிழகம் முழுவதும் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் இன்னும் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசு, மத்திய அரசிடம் நிதி கேட்காமல், மத்திய அரசு குழு வருகை தராமல் இருக்கிறதே என்று நாங்களும் விவசாயச் சங்கங்களும் நினைத்துக்கொண்ட நேரத்தில், கடந்த கூட்டத் தொடரில் மத்திய அரசு பாராமுகமாக இருக்கிறது; ஆனாலும், நான் இருக்கிறேன், எத்தகைய நிதி நெருக்கடிகள் இருந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுகிற நேரத்தில், ஆபத்பாந்தவனாக நான் கைகொடுக்க, உதவி செய்ய இருக்கிறேன் என்ற அடிப்படையில், மத்திய அரசாங்கத்தினுடைய நிதியை எதிர்பார்க்காமல் காவேரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிவாரணத்தை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், நாங்கள் எதிர்பார்க்காத நேரத்திலே சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவிப்பதற்கு மிகப் பெரிய போராட்டங்கள் எல்லாம் நடத்த வேண்டுமோ என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில், உங்களுடைய எண்ணத்தை நான் புரிந்திருக்கிறேன் என்று சொல்லி, யாரும் எதிர்பாராத நிலையில் சட்டமன்றத்திலே சென்னை நீங்கலாக மற்ற 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, கூடுதலாக நில வரியையும் தள்ளுபடி செய்து, இன்றைக்கு இப்படிப்பட்ட நல்ல அறிவிப்புகளையெல்லாம் வெளியிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, பாசனமற்ற விவசாயிகளுக்கு 50 விழுக்காட்டுக்கு மேலாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூபாய் 5 ஆயிரம், அதைப்போல பாசனம் உள்ளவர்களுக்கு ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய், தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.4,000, மல்பரி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.3,000 அதைப்போல கால்நடைகளுக்கும் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–10

வறட்சி என்று சொன்னால், மக்களுக்கு, விவசாயிகளுக்கு பாதிப்பு என்று சொன்னால், பொது மக்களுக்கு குடிதண்ணீர் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக மாறும். இன்றைக்குக் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி பலமுறை நிதியொதுக்கீடுகளைச் செய்திருந்தாலும் ஏற்கெனவே இருக்கிற திட்டங்களோடு, சிறப்புத்



2013 ஏப்ரல் 19] [திரு. சு. குணசேகரன்]

திட்டமாக additional திட்டமாக இன்றைக்குக் கூடுதலாக 145 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

அதைப்போல தன்னுடைய உழைப்பை மட்டுமே மூலதனமாக வைத்திருக்கிற விவசாயத் தொழிலாளிகள் தங்கள் உழைப்பைச் செலுத்துவதற்கு வாய்ப்பாக 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழகம் முழுவதும் மழை நீரை சேகரிக்கக்கூடிய வகையில் 50,000 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். வறட்சி என்பது பல நேரங்களில் வரும். மழை இல்லாமல் அல்லது கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் எல்லாம் பச்சிளம் குழந்தைகளைப்போல் சாவதை ஒவ்வொரு வருடமும் விவசாயிகள் பார்த்து, ஏங்கித் தவித்து தன்னுடைய மனக் கண்ணாலே அழுது, வெம்பி வாழ்ந்த காலம் உண்டு. அப்படிப்பட்ட நிலையில்தான் எங்கெல்லாம் இந்தப் பண்ணைக் குட்டைகள் இருந்ததோ, அங்கெல்லாம் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி, அரைகுறையாக விளைந்து இருக்கிற பயிர்களை முழுமையாக விளைய வைப்போம் என்று வறட்சியைப் பார்வையிட வந்த அமைச்சர்களைக் கொண்ட குழுவிடம் இதைச் சுட்டிக்காட்டியவுடன், அமைச்சர் குழுவினர் ‘நமது மாண்புமிகு தமிழக முதல்வரிடம் எடுத்துச் சொல்லி, கண்டிப்பாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம்’ என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் விவசாயத் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் 750 கோடி ரூபாய் ஒதுக்கி, 50,000 பண்ணைக் குட்டைகளை உருவாக்குவது என்பது எதிர்காலத்தில் இயற்கையே பொய்த்தாலும் இந்தப் பண்ணைக் குட்டைகள் விவசாயிகளை வாழவைக்கும் என்ற அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தைத் தீட்டி இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நாங்கள் வரவேற்கிறோம். எனவே, அந்த அடிப்படையில் இந்தத் திட்டங்கள் எல்லாம் சிறப்பான அறிவிப்புகள் ஆகும். எங்களைப் பொறுத்தவரையில் கோரிக்கைகள் வேறாக இருந்தாலும், இந்த அறிவிப்புகளை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம்.

ஒரு குடும்பத்தில் 5 குழந்தைகள் இருந்தார்கள் என்றால், ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தேவை இருக்கும். அல்லது பசியினுடைய அளவில் வித்தியாசம் இருக்கும். ஒரு குழந்தை 3 இட்லி சாப்பிடும், ஒரு குழந்தை 2 இட்லி கேட்கும், ஒரு குழந்தை

[திரு. சு. குணசேகரன்] [2013 ஏப்ரல் 19

5 இட்லி சாப்பிடும். அந்த எண்ணிக்கையில் 30 இட்லிகள் ஒரு குடும்பத்திற்குத் தேவைப்பட்டு, 15 இட்லிகள்தான் இருக்கிறது என்றால், ஒரு தாய் 15 இட்லியையும், குழந்தைகளுடைய தரம் பார்த்து கொடுப்பதைப்போல, இருக்கக்கூடிய நிதியை (மேசையைத் தட்டும் ஒலி) பாசன விவசாயிகள், பாசனம் இல்லாத விவசாயிகள் என்று பிரித்து, அவர்களின் தேவைகளுக்கேற்ப கொடுத்திருப்பதை மனதார இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்கிறோம்.

கடைசியாக மத்திய அரசிடம் 19,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி கேட்டு, இன்றைக்கு இந்த திட்டங்களுக்கான நிதியை எதிர்ப்பார்த்து கோரிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். கண்டிப்பாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நாங்கள் முன்வைத்தாலும், கடந்த கால அனுபவங்கள் மத்திய அரசிடம் நாம் கேட்பதில், பாதியளவு அல்லது கால்வாசி அளவுகூட அல்ல, கேட்டதற்கும், கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லாமல்தான் நிதியை அவர்கள் ஒதுக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

“தானே” புயல் கடலூர் மாவட்டத்தைத் தாக்கியது. அந்தத் தாக்குதலுக்குப்பின் விவசாயிகள் உயிரோடு இருக்கின்றார்கள், மனிதர்கள் உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் வாழ்வு செத்துப்போனது. அப்படிப்பட்ட நிலையில் 25,000 கோடி ரூபாய் நிதியை மாநில அரசு கேட்டு, வெறும் 500 கோடி ரூபாயை மட்டுமே மத்திய அரசு ஒதுக்கிக் கொடுத்தது. தமிழ் மாநிலத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு துறைகளின்மூலம் கலால் வரி, சேவை வரி அல்லது வங்கிகள்மூலம் வருமான வரி என்று 80,000 கோடி ரூபாய்களைப் பெறக்கூடிய மத்திய அரசு 20,000 கோடி ரூபாயைத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி கேட்டுக்கொள்கிறது.

மாநில அரசுகள் எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளுக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உங்கள் கரத்தோடு இணைந்து இருக்கும், உங்கள் கருத்தோடு உடன்பட்டு இருக்கும் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.



2013 ஏப்ரல் 19]

பிற்பகல் 12–15

*__திரு. க. பாலகிருஷ்ணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியினாலே மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிற டெல்டா அல்லாத இதர மாவட்டங்களைச் சார்ந்து இருக்கின்ற 17,94,342 விவசாயிகளுக்கு 835.21 கோடி ரூபாய் நிவாரணத்தை வழங்குகிற முறையில், இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்புகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே, கர்நாடக அரசாங்கத்தினுடைய வஞ்சகத்தாலும், இயற்கை பொய்த்துப் போனதாலும், டெல்டா மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டது. அப்படி டெல்டா மாவட்டங்கள் பாதிக்கப்பட்ட அந்த நேரத்தில், அவர்கள் வாழ்வையே இழந்து இருட்டிலே தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர்களுக்கு ஒளியேற்றுகிற முறையிலே டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிவாரண உதவியை அறிவித்தார்கள். அந்த அறிவிப்புகளுக்கு நன்றி செலுத்துகின்றபோதே, வரலாற்றில் வறட்சி ஏற்பட்டபோது முதன்முறையாக இந்த அரசுதான், நம்முடைய மாண்புமிகு முதல்வர்தான் வறட்சி நிவாரணத்தை அறிவித்திருக்கிறார்கள் என்று அன்றைக்கே நாங்கள் சுட்டிக்காட்டினோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அறிவித்ததையொட்டி, இதர மாவட்டங்களிலே இருக்கிற விவசாயிகள் தங்களுக்கும் நிவாரணம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, அதற்கான ஒரு அறிவிப்பினை நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட இருக்கிறார்கள் என்று சொன்ன செய்தி எல்லோருக்கும் ஒரு ஆறுதலாக இருந்தது. அந்த ஆறுதலை அளிக்கின்ற முறையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிவாரணம் அறிவித்திருக்கிறார்கள். பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதுமட்டுமல்ல; இந்த நிவாரண உதவியை அறிவிக்கிறபோது அனைத்துப் பகுதி விவசாயிகளும் விடுபடாமல்

அறிவித்திருப்பதுதான் உண்மையிலேயே பாராட்டக்கூடியது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கமாக பாசன வசதி இருக்கிற நிலங்கள் பாதிக்கப்படுகிறபோது நிவாரணத்தை நாம் வழங்குவோம். ஆனால், பாசன வசதியற்ற நிலங்களுக்குக்கூட இந்த முறை நிவாரண உதவி வழங்கியிருப்பது உண்மையிலேயே புதியது என்பது மட்டுமல்ல, எதிர்காலத்திலே அந்த விவசாயிகளுக்கு நம்பிக்கையை அளிக்கக்கூடியது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, குறுகிய காலப் பயிர்களுக்கு மட்டுமே நிவாரணம் அளித்து வந்த இந்த நேரத்தில் நீண்ட காலப் பயிர்களாக இருக்கிற தென்னை, மல்பெரி என்கிற அத்துணை விவசாயிகளுக்கும்கூட இன்றைக்கு நிவாரண உதவி அளிக்கப்பட்டிருப்பது நல்ல செய்தி என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒருபக்கம் ஏற்பட்டிருக்கிற இழப்பு மிகப் பெரிய இழப்பு என்று சொன்னாலும், அந்த இழப்பை முழுவதுமாக ஈடுசெய்வது ஒரு மாநில அரசினால் எந்தச் சூழ்நிலையிலும் இயலாது என்று சொன்னாலும், பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டுமென்கிற முறையிலே, உதவிக்கரம் நீட்டுகிற வகையிலே, இந்த நிவாரண அறிவிப்புகளை அறிவித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல, பயிர்க் காப்பீடு செய்திருக்கிற விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு நிவாரணத்தை அவர்கள் தனியாகப் பெற்றுக்கொள்வதற்கும் இங்கே வழி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கடைசியாக, நம்முடைய மொத்த இழப்பை ஈடுசெய்கிறவகையில், 19 ஆயிரத்து 665 கோடி ரூபாய்க்கு மத்திய அரசிடம் நம்முடைய மாநில அரசு நிவாரண உதவிகளைக் கேட்டிருக்கிறது. ஆனால், கல் நெஞ்சம் படைத்திருக்கிற மத்திய அரசு, ஏற்கெனவே நமக்குக் கொடுக்க வேண்டியதையே கொடுக்காமல் இருக்கிற மத்திய அரசு இதிலே எப்படி செயல்படப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. வழக்கமாகக் கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் யானைப் பசிக்கு சோளப் பொறியிட்டதைப்போல்தான் மத்திய அரசாங்கத்தினுடைய நிவாரண உதவிகள் அமைந்திருக்கின்றன. ஆகவே, தமிழக மக்களுடைய இந்தத் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த முறையாவது இந்த நிதியை தமிழக





மக்களுக்கு அளித்து வாழ்வளிப்பதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். ஒருவேளை மத்திய அரசு இதைப் புறக்கணிக்குமென்று சொன்னால், அந்த மத்திய அரசை மக்கள் புறக்கணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அப்படி மத்திய அரசு நிதி அளிக்கிற சூழ்நிலையில் விவசாயத் தொழிலாளிகளுக்கு இங்கே 100 நாள் வேலை என்பதை 150 நாட்களாக உயர்த்தி அவர்களுக்கு அந்தச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிற அறிவிப்புகள் எல்லாம் இருக்கின்றன. அவர்களுடைய அந்த உழைப்பைப் பயன்படுத்தி எதிர்கால சமூக நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே நீரைத் தேக்குகிற முறையிலே 50,000 பண்ணைக் குட்டைகளை வெட்டுவோம் என்கிற அறிவிப்பு இந்த வறட்சிக்கு மட்டுமல்ல; இனி எப்போதுமே வறட்சி வராது என்கிற அந்த நிலையை உருவாக்குகிற முறையிலே, இயற்கை வளத்தைப் பலப்படுத்துகிற முறையிலே இந்தப் பண்ணைக் குட்டைகள் அமைக்கிற திட்டம் அமைந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளிகளுக்கு வேலை, சம்பள உயர்வெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிற அதே நேரத்தில் மத்திய அரசு இந்த நிதியைக் கொடுக்கிறபோது, எப்படி அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் நாம் நிவாரணத்தை அளித்திருக்கிறோமோ, அதைப்போல விவசாயத் தொழிலாளிகளுக்கும் குறைந்தபட்ச நிவாரணத்தை அளிப்பதற்கு இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் தலைமையிலான குழு அனைத்து அம்சங்களையும் பரிசீலித்து சிபாரிசு செய்திருக்கிறது. அவற்றையெல்லாம் மிகத் துல்லியமாகக் கணக்கிட்டு ஒரு பகுதி விவசாயிகள்கூட விடுபடாமல் நிவாரணத்தை வழங்கியிருக்கிற, வரலாற்றிலேயே முதல்முறையாக இப்படிப்பட்ட நிவாரணத்தை வழங்கியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நன்றி தெரிவித்து, விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கைகளையும் பரிசீலிக்க வேண்டும் எனக் கேட்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 19

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்றும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு தமிழ்நாட்டுக்கு வறட்சியென்பது மிகப்பெரிய சோதனையாக வந்துள்ளது. இயற்கை மழையும் பொய்த்துவிட்டது. செயற்கையில் அண்டை மாநிலங்களும் வஞ்சித்துவிட்டன. இந்தச் சூழ்நிலையிலே வருகின்ற கோடைக்காலத்தை எப்படி எதிர்கொள்ளப்போகிறோம் என்று விவசாயிகளும், குறிப்பாக ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த தாய்மார்களும் கலங்கிக்கொண்டிருக்கின்ற நேரம். குடத்தை எடுத்துக்கொண்டு குடிதண்ணீருக்குக்கூட காசு கொடுத்து வாங்கவேண்டி வருமோ என்று அலைக்கழிக்கப்படுகின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய நிதிநிலை எந்த அளவிற்கு தாக்குப்பிடிக்குமோ அதைக் கருத்தில்கொண்டு, அவரால் இயன்ற அளவிற்கு நிவாரணத்தை அளித்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு, தமிழ்நாடு அரசு மட்டுமல்ல, புது டில்லியிலும் ஒரு அரசு உண்டு. நிதி மிகுந்தவர் பொற்குவியல் தாரீர் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள். நம்மிலும் நிதி மிகுந்தது டில்லி அரசு. சுமார் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு தமிழக அரசின் சார்பிலே வறட்சி நிவாரணத்திற்கு இந்தியப் பேரரசு உதவி செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். இது அவர்களுக்கு மிகச் சாதாரணத் தொகை. வங்கிகள் மூலமாக பகாசுர கம்பெனிகளுக்கு அவர்கள் வழங்கியுள்ள கடன் வாராமல் இருப்பதே சுமார் இரண்டு இலட்சம் கோடி. வங்கிகளில் போட்ட முதலுக்கே மோசம். அதனால் அண்மையில் முதலுக்கு ஈடு செய்வதற்கு 10,000 கோடி ரூபாயை இந்திய அரசு வழங்கியிருக்கிறது. நாம் எப்போதெல்லாம் நிதி கேட்கிறோமோ, அப்போதெல்லாம் நிதி அமைச்சரைத் தருகிறார்களேயொழிய, நிதியைத் தரவில்லை. இந்த 20,000 கோடி ரூபாய் என்பது அவர்களுக்குப் பெரிது அல்ல. ஆனால் இங்கே இருக்கின்ற மக்கள் இந்தக் கோடைகாலத்திலே அதுவும் வருகிற சித்திரை, வைகாசி போன்ற மாதங்களில் தாக்குப்பிடித்து வாழவேண்டிய கஷ்டத்தை அவர்கள் உணர வேண்டும். வாக்குகள் கேட்பதற்கு மட்டும் டில்லியிலிருந்து நீளுகிற கை, வறட்சி நிவாரணத்திற்கு எவ்வளவு நீளுகிறது என்பதையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். அது எந்த அளவிற்கு நீளுகிறதோ, அந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்கள் பாடம் தரத் தயாராக உள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் கூறி அமைகின்றேன்.



2013 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு நாளும் 110 விதியின்கீழ் இந்த நாட்டு மக்களுக்கு வெவ்வேறு அர்ப்பணிப்புத் திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே இன்று 110 விதியின்கீழ் அறிவிக்கப்பட்ட இந்த நிகழ்வு, இந்தியத் திருநாட்டிலுள்ள மக்களை நேசிக்கின்ற தலைவர்களில் இன்று அறிவிக்கப்பட்ட இந்த நிகழ்வால் அனைத்துத் தலைவர்களிலும் முதன்மையான தலைவராக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்ந்து நிற்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

கடைகோடியில் இருக்கின்ற ஒரு விவசாயி, கால் ஏக்கர் வைத்திருக்கின்ற ஒரு விவசாயி, வெளி உலகத்திற்குத் தொடர்பில்லாத விவசாயி, அவன் வாழ்வு அஸ்தமனம் ஆகி அந்தக் கொட்டடியிலே முடங்கிக் கிடக்கின்ற விவசாயி, அந்த விவசாயினுடைய உணர்வுகளை, தேவைகளை அறிந்துகொண்டு இங்கே அதற்காகத் திட்டத்தைத் தீட்டி, நிதியாதாரத்தை எடுத்து, அந்த விவசாயிகளுடைய வயிற்றிலும் பால் வார்த்த ஒரே ஒரு தலைவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட உன்னதத் தலைவர், தொடர் நடவடிக்கையாக இந்த வறட்சிக் காலத்திலும், இந்த மக்கள் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் வாழவேண்டும் என்பதற்காக, பல்வேறு திட்டங்களை அளித்திருந்தாலும்கூட, இந்த வறட்சிக் காலத்தினுடைய குறுகிய காலகட்டத்தில், ஆங்காங்கே இடர்ப்பாடுகள் ஏற்படுகின்ற நிலையிலே, குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகின்ற சூழ்நிலையில், உடனடியாக நிவாரணம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்கும் 145 கோடி ரூபாய் ஒதுக்கி, எந்தச் சூழ்நிலையிலும் தம்மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நிலையிலும் குடிதண்ணீர் கிடைக்காமல் இருக்கக்கூடாது என்பதற்காக ரூ.145 கோடி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறோம்.

[திரு. கே.பி. முனுசாமி] [2013 ஏப்ரல் 19

அதோடுமட்டுமல்லாமல், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறு, குறு விவசாயிகளுக்கு உதவியதோடு அல்லாமல், விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதோடு, அறிவியல்பூர்வமான ஒரு திட்டம், அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேறுவிதமான வேலைகள்கூட கொடுத்திருக்கலாம், ஆனால் செய்கின்ற பணியிலேகூட, இன்னொருவருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், 50,000 பண்ணைக்குட்டைகளை நிறுவ வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து, அதற்காக ரூ.750 கோடி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பண்ணைக் குட்டை அமைப்பதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.1,50,000 ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே இயந்திரங்களிலே பணியாற்றினால் ரூ.25,000, ரூ.30,000/–ல் அந்தப் பண்ணைக் குட்டைகளை உருவாக்கிவிட முடியும். ஆனால், விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வு கொடுக்க வேண்டும் என்பதற்காக, பண்ணைக் குட்டையை அவர்கள் உடலுழைப்பாலேயே உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அந்த பண்ணைக் குட்டைகள் சாதாரண விவசாயிகளுக்கு, சிறு, குறு விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையில் ரூ.750 கோடி ஒதுக்கி, 50,000 பண்ணைக் குட்டைகளை உருவாக்குவதற்கு உதவியிருக்கிறார்கள். ஏற்கெனவே டெல்டா பகுதியில் 184 கோடி ரூபாய்க்கு 15,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க உத்தரவு பிறப்பித்து தற்போது பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, விவசாயிகள், தொழிலாளர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருடைய வாழ்க்கையும் மேம்படுவதற்கான நல்ல திட்டங்களை அறிவித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் மீண்டும் எனது பணிவான வணக்கத்தினைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இதுபோல் வறட்சிக்காக, விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படவில்லை. மத்திய அரசு மாற்றாந்தாய்



2013 ஏப்ரல் 19] [திரு. செ. தாமோதரன்]

மனப்போக்கில் இருந்தாலும்கூட நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையில், சிறு விவசாயி, பெரு விவசாயி என்று பாகுபாடு பார்க்காமல், காய்ந்த பயிரால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும், டெல்டா மாவட்டம் உட்பட 31 மாவட்டங்களின் விவசாயிகளின் துயரைத் துடைக்கின்ற வகையில், பாதிக்கப்பட்ட 21,46,955–க்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ரூ.1,376 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்தும், பண்ணைக் குட்டைகள் மற்றும் கால்நடைத் தீவனங்களுக்கு நிதியை அதிகமாக ஒதுக்கீடு செய்தும், தமிழக விவசாயிகளைக் காப்பாற்றியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வேளாண்மைத் துறையின் சார்பாகவும், தமிழக விவசாயிகளின் சார்பாகவும், கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டாலும், தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டாலும், கர்நாடகத்திலிருந்து நமக்குத் தர வேண்டிய காவேரி நீர் இன்றைக்கு மறுக்கப்பட்டுவிட்டாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு தமிழக விவசாயிகளுக்கு நிவாரணத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாடல் ஒன்று என்னுடைய நினைவுக்கு வருகிறது. நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் இங்கு தமிழகத்தில் விவசாயிகள் யாரும் வேதனை படமாட்டார் என்கிற அடிப்படையில், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு மாபெரும் நிவாரணத்தைத் தமிழக விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். இந்தியாவிலே எத்தனையோ முதலமைச்சர்கள் பல்வேறு மாநிலங்களில் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்கியிருக்கிறார்கள். இயற்கை இடர்ப்பாட்டிற்காக நிவாரண உதவி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை

வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை நிரூபிக்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிவாரணத்தை வழங்கியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–30*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஒரு உயர் மட்டக் கமிட்டியை அமைத்து, சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகின்ற நேரத்தில், விடுமுறை நாட்களிலே அந்தப் பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய நிலைகளைக் கண்டறிய வேண்டுமென்று சொல்லி, இன்றைக்கு முதற்கட்டமாக 3,61,000 ஏக்கர் பாசனப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தலா ரூபாய் 15,000 வீதம் டெல்டா பாசனத்திலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 541.50 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களிலும் நில வரியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் என்பதை 150 நாட்களாக உயர்த்தி, 148 ரூபாயாகக் கூலியை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, பல்வேறு காரணங்களால் உயிரிழந்த விவசாயிகளுக்கு, ஒரு விவசாயிக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் 9 விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகையைத் தந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கூட்டுறவுக் கடன்கள் திருத்தி அமைக்கப்படும் என்கின்ற ஓர் ஒப்பற்ற அறிவிப்பினையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு தந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 50 விழுக்காடுகளுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கின்ற நெல் விவசாயிகளுக்கு, 6,25,786 ஏக்கரிலே பயிரிடப்பட்டிருந்த 6,25,000 விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதமாக 312.89 கோடி ரூபாயைத் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மொத்தமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய சுமார் 17,94,342 விவசாயிகளுக்கு 835.21 கோடி ரூபாயை மாண்புமிகு





முதலமைச்சர் அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் ஒரு கருத்தை பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு இப்போது பாராமுகமாக இருந்தாலும்கூட, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்னதைப்போல, 'ஏய்ப்பவர்க்கே காலம் என்று எண்ணிவிடாதே, பொய் எத்தனை நாள் கைகொடுக்கும் மறந்துவிடாதே, ஒரு நாள் இந்த நிலைமைக்கெல்லாம் மாறுதல் உண்டு, அந்த மாறுதலைச் செய்வதற்குத் தேர்தல் உண்டு, நாடாளுமன்றத் தேர்தல் உண்டு' என்கின்ற ஒரு கருத்தை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இவ்வளவு பெரிய தொகைகளை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கிய நாங்கள் வழிபடக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களில் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை வருவாய்த் துறை சார்பாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், எங்கள் கால்நடைகளையும் மறக்காமல் தீவனத்திற்காக 24 கோடி ரூபாயை ஒதுக்கியதற்காக வாயில்லாத ஜீவன்கள் சார்பாகவும், எங்கள் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாகவும் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளை அவர்கள் பாதத்திலே வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தொகுதிக்குச் சென்றபோது, விவசாயிகள், 'மழை ராசி மகராசிக்கு உண்டே, வறட்சியாக உள்ளதே' எனக்கூறி வருத்தப்பட்டனர். 'மழை வராவிட்டால் என்ன? மகராசி, மகம் ராசிக்காரர் எங்களைக் காப்பாற்றுவார்' என நம்பிக்கையுடன் சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* டெல்டா அல்லாத மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்தியாவிலேயே முதல் முறையாக 1,785 கோடி ரூபாய் அளவிற்கு நிவாரண அறிவிப்புகளைச் செய்துள்ள

*வறட்சியைத் துரத்தி வாழ வைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் வள்ளல். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி. இன்றைக்கு ஸ்ரீராம நவமி, ஸ்ரீராமர் பிறந்த தினம். காந்தியடிகள் கனவு கண்டதைப்போன்று, இராம ராஜ்யத்தை தமிழகத்திலே அளித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் தினந்தோறும் சிறப்பான அறிவிப்புகளை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏரி இருக்கும் காலம் எல்லாம் அம்மாவின் பெயர் இருக்கும். உழவு நடக்கும் காலம் வரை, இந்த உலகம் இருக்கும் காலம் வரை அம்மாவின் புகழ் நிலைக்கும்; (மேசையைத் தட்டும் ஒலி) வயல் இருக்கும் காலம் வரை, வாய்க்கால் இருக்கும் காலம் வரை, உங்கள் வரலாறு நிலைக்கும் தாயே! வணக்கம், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–35*

## 4. கவன ஈர்ப்பு

### கேரள அரசு பவானி மற்றும் சிறுவாணி ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுவதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேரள அரசு பவானி ஆறு மற்றும் சிறுவாணி ஆற்றின் குறுக்கே புதிய அணைகள் கட்டுவதால், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களுக்கான நீர்வள ஆதாரம் பாதிக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து" மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*





***மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்றினை அவைமுன் வைத்துள்ளேன்.*

### அறிக்கை

*அட்டப்பாடி பள்ளத்தாக்கில் சிறுவாணி ஆற்றின் குறுக்கே 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட அணை ஒன்றைக் கட்ட கேரள அரசு உத்தேசித்திருந்தது. காவேரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில், பவானி படுகையில் கேரள அரசுக்கு ஒதுக்கீடு செய்துள்ள 6 டி.எம்.சி. அடி நீரில் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்துள்ளது. எனினும், கேரள அரசு உத்தேசித்திருந்த இத்திட்டத்தின் மொத்த நீர் உபயோகம் 4.5 டி.எம்.சி. அடி என்பதற்குப் பதிலாக 2.87 டி.எம்.சி. அடி எனக் குறைத்து காவேரி நடுவர் மன்றம் இத்திட்டத்திற்கு நீர் ஒதுக்கீடு செய்துள்ளது. கேரள அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததையடுத்து, இத்திட்டத்திற்கான முழு விவரங்களை அளிக்குமாறும் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை நடைமுறைக்கு வரும் வரையில் எந்தவொரு வகையிலும் அட்டப்பாடி திட்டத்தினை மேற்கொள்ளக் கூடாது என கேரள அரசை பிப்ரவரி 2012–ல் தமிழக அரசு கேட்டுக்கொண்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தில் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையின்மீது தாக்கல் செய்துள்ள சிவில் மேல் முறையீட்டு மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும், காவேரி நடுவர் மன்றத்தின்முன் நிலுவையில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும் மற்றும் நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படும் வரையில் கேரள அரசு, காவேரிப் படுகையில் எந்த ஒரு திட்டத்தினையும் எந்த வகையிலும் செயல்படுத்தக் கூடாது என 18–6–2012 அன்று கேரள அரசைத் தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்தியது.*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 21–6–2012 அன்று பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு வழக்குகளைத் தாக்கல் செய்தது என்றும், தமிழ்நாடு அரசும் ஒரு சில அம்சங்கள் குறித்து*

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2013 ஏப்ரல் 19

உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு வழக்கினைத் தாக்கல் செய்தது என்றும், மேலும், சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களும் காவேரி நடுவர் மன்றத்தின்முன் விளக்கங்கள் கோரும் மனுக்களை 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவா சட்டப் பிரிவு 5 (3)—ன்கீழ் தாக்கல் செய்துள்ளன. அந்த வழக்குகள் அனைத்தும் இன்னமும் நிலுவையில் உள்ளன. எனவே, சம்பந்தப்பட்ட மாநிலங்கள், காவேரிப் படுகை அல்லது அதன் உபபடுகைகளில் எந்த ஒரு புதிய திட்டத்தைத் துவங்குவதற்கு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படும் வரையிலோ அல்லது நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்படும் வரையிலோ காத்திருக்கவேண்டியது முறையானதாக இருக்கும் எனத் தெரிவித்து, சிறுவாணி ஆற்றின் குறுக்கே, கேரள அரசு அட்டப்பாடி பாசனத் திட்டம் அல்லது எந்த ஒரு திட்டத்தையும் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்குப் புறம்பாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்காமல் இருக்க கேரள அரசுக்கு அறிவுரை வழங்குமாறும் மற்றும் சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட உத்தேசித்துள்ளதற்கு மத்திய நீர்வள ஆணையம் (Central Water Commission) அதன் தொழில்நுட்ப இசைவினை அளிக்கக் கூடாது என அறிவுரை வழங்குமாறும் பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக 6–3–2013 அன்று கேரள அரசுக்கும் மத்திய அரசுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கேரளாவின் பாலக்காடு மாவட்டம், மன்னார்க்காடு வட்டம், சாவடியூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி பாசனத்திற்குப் பயன்படுத்தி வருகிறது என்று பத்திரிகை செய்திகளில் பிரசுரங்கள் வந்தவுடன், கேரள விவசாயிகளினால் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், பவானி ஆற்றின் நீர்வரத்தை மிகவும் பாதித்துள்ளது எனவும், கோயம்புத்தூர், ஈரோடு மாவட்ட மக்கள் பாசன மற்றும் குடிநீர்த் தேவைக்காக பவானி ஆற்று நீரையே பெரிதும் நம்பியுள்ளனர் என்றும் தெரிவித்து, கேரள விவசாயிகள் ஏற்படுத்தியுள்ள தடைகளை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 15–3–2013 அன்று கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு தடைகளை நீக்கினால், தங்குதடையின்றி பவானி ஆற்றில் நீர் செல்லும் எனவும் கேரள அரசுக்கு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2013 ஏப்ரல் 19] [திரு. கே.வி. இராமலிங்கம்]

மேலும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டபோதிலும், கேரள அரசு இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முடியாது. காவேரி மேலாண்மை வாரியம் (Cauvery Management Board) மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்ட பின்னர், அதன் ஒப்புதலையும் மற்றும் மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப ஒப்புதலையும் பெற்ற பின்னர்தான் இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

பவானி ஆற்று நீரையே ஆதாரமாகக் கொண்டுள்ள மக்களின் நலன்களைப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழகத்தின் நீலகிரி வனப் பகுதியில் உற்பத்தியாகி, மலைகளின் வழியாக கேரள மலைகளின் வழியாக கிட்டத்தட்ட 32 கி.மீ. தொலைவில் இருந்து, பவானிசாகர் அணைக்கட்டிற்கும் அதைப்போல சிறுவாணி அணைக்கட்டிற்கும் வந்து கொண்டிருக்கக்கூடிய இந்த ஆறுகளை கேரள அரசு இடைமறித்து, அணைகளைக் கட்டுவதனால், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு நிரந்தரமான குடிநீர் வழங்கிக்கொண்டிருக்கக்கூடிய சிறுவாணி அணையிலிருந்து கிடைக்கக்கூடிய தண்ணீரும் அதேபோல, பவானிசாகர் அணைக்கு வரக்கூடிய தண்ணீரும் நிறுத்தப்படுமேயானால், அங்கே தடுத்து நிறுத்தப்பட்டால், ஈரோடு மாவட்டம் பாசனப் பகுதியாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் விவசாய விளைநிலங்கள் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்டு பாலைவனமாகக் காட்சியளிப்பதற்கான சூழல் உருவாகும். எனவே, கேரள அரசு இந்த அணைகளைக் கட்டாமல் நிரந்தரமான குடிநீரைக் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளுக்கும் இதர பகுதிகளுக்கும் இருக்கக்கூடிய குடிநீர் ஆதாரத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையிலும், அதைப்போல விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய ஈரோடு மாவட்டம் இன்னும் இருக்கக்கூடிய திருப்பூர்

[திரு. எம். ஆறுமுகம்] [2013 ஏப்ரல் 19

*மாவட்டங்களுக்கான பாசனப் பகுதிகளையும் பாதுகாக்கக்கூடிய முறையில் அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, தமிழக அரசு, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, புதிய அணைக்கட்டு கட்டப்படாமல் தடுத்து நிறுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அட்டப்பாடி பள்ளத்தாக்கில் சிறுவாணி ஆற்றின் குறுக்கே 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட அணை ஒன்றைக் கட்ட கேரள அரசு உத்தேசித்துள்ளது. காவேரி நடுவர் மன்றம் அதன் இறுதி ஆணையில், பவானி படுகையில் கேரள அரசுக்கு ஒதுக்கீடு செய்துள்ள 6 டி.எம்.சி. அடி நீரில் இத்திட்டத்தை எடுத்துக்கொள்ள அனுமதித்துள்ளது. எனினும், கேரள அரசு உத்தேசித்திருந்த இத்திட்டத்தின் மொத்த நீர் உபயோகம் 4.5 டி.எம்.சி. அடி என்பதற்குப் பதிலாக 2.87 டி.எம்.சி. அடி எனக் குறைத்து காவேரி நடுவர் மன்றம் இத்திட்டத்திற்கு நீர் ஒதுக்கீடு செய்துள்ளது. கேரள அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததையடுத்து, இத்திட்டத்திற்கான முழு விவரங்களை அளிக்குமாறும் மற்றும் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை நடைமுறைக்கு வரும் வரையில் எந்தவொரு வகையிலும் அட்டப்பாடி திட்டத்தினை மேற்கொள்ளக் கூடாது என கேரள அரசை பிப்ரவரி 2012–ல் தமிழக அரசு கேட்டுக்கொண்டது.*

*மேலும், உச்ச நீதிமன்றத்தில் கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் காவேரி நடுவர் மன்றத்தின் 5–2–2007 ஆம் நாளிட்ட இறுதி ஆணையின்மீது தாக்கல் செய்துள்ள சிவில் மேல் முறையீட்டு மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும், காவேரி நடுவர் மன்றத்தின் முன் நிலுவையில் உள்ள விளக்கங்கள் கோரும் மனுக்கள் முடிவுக்கு வரும் வரையிலும் மற்றும் நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படும் வரையிலும் கேரள அரசு, காவேரிப் படுகையில் எந்த ஒரு திட்டத்தினையும் எந்த வகையிலும் செயல்படுத்தக்கூடாது என 18–6–2012 அன்று கேரள அரசைத் தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்தியது.*



2013 ஏப்ரல் 19] [திரு. கே.வி. இராமலிங்கம்]

*மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 21–6–2012 அன்று பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், கேரளா மற்றும் கர்நாடக அரசுகள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு வழக்குகளைத் தாக்கல் செய்தது என்றும், தமிழ்நாடு அரசும் ஒரு சில அம்சங்கள் குறித்தும் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு வழக்கினைத் தாக்கல் செய்தது என்றும், மேலும், சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களும் காவேரி நடுவர் மன்றத்தின்முன் விளக்கங்கள் கோரும் மனுக்களை 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர்த் தாவா சட்டப் பிரிவு 5(3)–ன்கீழ் தாக்கல் செய்துள்ள வழக்குகள் அனைத்தும் இன்னமும் நிலுவையில் உள்ளன. எனவே, சம்மந்தப்பட்ட மாநிலங்கள் காவேரிப் படுகைகளில் அல்லது அதன் உபபடுகையில் எந்தவொரு புதிய திட்டத்தையும் துவங்குவதற்கு காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்படும் வரையிலோ அல்லது நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்படும் வரையிலோ காத்திருக்க வேண்டியது முறையானதாக இருக்கும் எனத் தெரிவித்து, சிறுவாணி ஆற்றின் குறுக்கே, கேரள அரசு அட்டப்பாடி பாசனத் திட்டம் அல்லது எந்த ஒரு திட்டத்தையும் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்குப் புறம்பாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்காமல் இருக்க கேரள அரசுக்கு அறிவுரை வழங்குமாறும் மற்றும் சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட உத்தேசித்துள்ளதற்கு மத்திய நீர்வள ஆணையம் அதன் தொழில்நுட்ப இசைவினை அளிக்கக் கூடாது என அறிவுரை வழங்குமாறும் பிரதமர் அவர்களை வலியுறுத்தியுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக 6–3–2013 அன்று கேரள அரசுக்கும் மத்திய அரசுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.*

*பிற்பகல் 12–40*

*கேரளாவின் பாலக்காடு மாவட்டம், மன்னார்க்காடு வட்டம், சாவடியூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி பாசனத்திற்குப் பயன்படுத்தி வருகிறது என்று பத்திரிகை செய்திகளில் பிரசுரங்கள் வந்தவுடன், கேரள விவசாயிகளினால் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள், பவானி ஆற்றின் நீர்வரத்தை மிகவும் பாதித்துள்ளது எனவும், கோயம்புத்தூர், ஈரோடு மாவட்ட மக்கள்*

[திரு. கே.வி. இராமலிங்கம்] [2013 ஏப்ரல் 19

பாசன மற்றும் குடிநீர்த் தேவைக்காக பவானி ஆற்று நீரையே பெரிதும் நம்பியுள்ளனர் என்றும் தெரிவித்து, கேரள விவசாயிகள் ஏற்படுத்தியுள்ள தடைகளை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 15–3–2013 அன்று கேரள அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தடைகளை நீக்கினால், தங்குதடையின்றி பவானி ஆற்றில் நீர் செல்லும் எனவும் கேரள அரசுக்கு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், கேரள அரசு இத்திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த முடியாது. காவேரி மேலாண்மை வாரியம் (Cauvery Regulatiory Authority) மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு (Cauvery Water Regulation Committee) போன்ற அமைப்புகள் அமைக்கப்பட்ட பின்னர்தான், அதன் ஒப்புதலையும் மற்றும் மத்திய நீர்வள ஆணையத்தின் தொழில்நுட்ப ஒப்புதலையும் பெற்ற பின்னரே இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

பவானி ஆற்று நீரையே ஆதாரமாகக் கொண்டுள்ள மக்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இழந்த உரிமைகளை மீட்டிருக்கிறதே தவிர, உரிமைகளை என்றும் இழக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த அளவிற்கு காவேரிப் படுகையில் கேரள அரசு எந்தவிதத் தடையையும் ஏற்படுத்தக் கூடாது எனத் தமிழக அரசால் மத்திய அரசாங்கத்திற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டு அங்கே தடுப்பணை கட்டுவதை எதிர்த்து இந்த அளவிற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையிலும்கூட, கேரள சட்டமன்றத்திலே பவானி அணைக்குத் தடுப்பணையும், சிறுவாணி அணைக்குத் தடுப்பணையும் கட்டுவதற்கு 50 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாகக்கூட பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, கேரள அரசு முனைப்பாகச்



2013 ஏப்ரல் 19] [திரு. எம். ஆறுமுகம்]

செயல்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசாங்கத்தைத் தமிழக அரசு மீண்டும் வலியுறுத்துமா எனக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஓர் உத்தரவை எங்களுக்கு இட்டிருக்கிறார்கள். அதன்படி, விரைவிலே பேச்சுவார்த்தை நடத்தப்படும். பேச்சுவார்த்தையிலே நல்ல முடிவு ஏற்படும். அப்படி முடியாவிட்டால், மீண்டும் உச்ச நீதிமன்றத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அணுகுவதற்கு நேரம் ஒதுக்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், திரு. ச. இராமச்சந்திரன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் தொன்னூற்று ஒன்று முதல் நூறு வரையிலான பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 27 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.500,00,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 839, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2252, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1459, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.



**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2403, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2709, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2870, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 183, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு சர்க்கரை துறையில் ஒரே நிருவாகத்தில் இருவேறு ஊதியம் வழங்குவதைக் களைந்து, ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு நிகரான அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படியோடு ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 880, திரு. சி.எச். சேகர்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் அரசு சார்பில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1794, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக தொழில் துறை சிறக்கவும், வளர்ச்சியடையவும் தொழில் நிறுவனங்களுக்கு சீரான மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1972, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2040, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2479, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2619, திரு. எம். ஆறுமுகம்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேங்காய் மட்டையிலிருந்து கயிறு திரிக்கும் தொழிற்சாலை கோட்டூரில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2645, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதியில் கிராஃபைட் உப தொழில்கள் தொடங்க தனியார்கள் முன் வந்தும் அனுமதி அளிக்கப்படாதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2883, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அடிக்கடி இயந்திரங்கள் பழுதாகி ஆலைக்கு விடுமுறை விடுவதன்மூலம் விவசாயிகள் ஆலைக்கு அனுப்பும் கரும்பு காய்ந்து விடுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,181,96,96,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.500,00,05,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2996, திரு. ம. கலை அரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3157, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



பிற்பகல் 12–45

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையில் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பாக பேச வாய்ப்பளித்த எங்கள் பாசமிகு, பண்புமிகு கேப்டன் அவர்களுக்கு நன்றி கூறி சில கருத்துகளை, கோரிக்கைகளை எடுத்து வைக்க விழைகிறேன். 'வையகம் காப்பவரேனும் சிறு வாழைப் பழக் கடை வைப்பவரேனும் பொய்யகலத் தொழில் செய்தே பிறர் போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்' எனத் தொழில் முனைவோரின் மகிமை போற்றுவான் பாரதி.

தமிழகத்தில் மொத்த பொருளாதாரத்தில் 16 சதவீதம் பங்களிப்பது உற்பத்தித் துறை. M.S.M.E. நீங்கலாக பெரும் நிறுவனங்களின் பங்களிப்பு இந்தத் துறையில் சுமார் 7 சதவீதம் மட்டுமே. ஆனால் இந்த 7 சதவீதம் பங்களிக்கும் பெரும் நிறுவனங்களைச் சார்ந்து நிற்கும் M.S.M.E. மற்றும் சேவை நிறுவனங்களின் பங்களிப்பு 40 சதவீதத்திற்கும் அதிகம். எனவே

---

@.211 முதல் 331 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

Mega Project, Super Mega Project, Ultra Mega Project என்று வகைப்படுத்தப்படும் இந்த முதலீடுகளை ஈர்ப்பது ஒரு மாநில அரசின் தலையாய கடமையாகிறது. இந்தக் குறிக்கோளை முன்னிறுத்தி தொழில் வளர்ச்சிக்கு 25 ஆயிரம் ஏக்கர் நில வங்கி அமைக்கும் திட்டத்தை முதலில் வரவேற்கிறேன்.

தூத்துக்குடியில் புதிய கப்பல் கட்டும் தளம் பொதுத் துறை, தனியார் துறை பங்கேற்பு வாயிலாக அமைய இருப்பதை வரவேற்கிறேன். இந்த வருடம் தெளிவாக 10 உள் திட்டங்களுடன் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ள மதுரை, தூத்துக்குடி தொழில் வழித்தடத் திட்டத்தை வரவேற்கிறேன்.

இந்த அரசின் வழிகாட்டு வேதமான விஷன் 2023 காட்டிய முதல் வியூகம் Strategic initiative one என்பது தமிழகத்தின் உற்பத்தித் துறையின் பங்களிப்பினை 16 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக அடுத்த 10 வருடங்களில் உயர்த்துவது. உற்பத்தித் துறை ஆண்டுக்கு 13.8 சதவீதம் வளர்ந்தால் மட்டுமே இது சாத்தியப்படும். ஆனால் அந்தத் தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டாகிய 2012–2013–ல் தொழில் வளர்ச்சி ஒரு சதவீதத்தைக்கூட தாண்டவில்லை என்பது கவலை அளிக்கிறது. தமிழகத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விஷன் 2023–ஐ பற்றிச் சொல்லி, ஓராண்டுக் காலத்தில் ஒரு சதவீதம் அளவுக்குத்தான் வளர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். 10 ஆண்டுக் காலத்தில் நிச்சயமாக அந்த இலக்கை அடைவோம் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், கடந்த நிதிநிலை அறிக்கையில் தொழில் துறையைப் பொறுத்தவரையில் 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுதான் வரும் என்று அறிவித்திருந்தோம். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியினால் இன்றையதினம் 26 ஆயிரத்து 625 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 1½ இலட்சம் நபர்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்த G.D.P. வளர்ச்சி வரலாறு காணாத அளவு 4.61 சதவீதமாக வீழ்ந்ததையும், அதேநேரத்தில் சேவைத் துறை வளர்ச்சி 8 சதவீதமாக இருப்பதையும் இணைத்துப் பார்த்தால் உற்பத்தித் துறையின் வீழ்ச்சியின் தாக்கம் புரியும். விஷன் 2023 அறிக்கையின்படி நாம் இந்த வருடம் பெற்றிருக்க வேண்டிய முதலீடுகள் 60 ஆயிரம் கோடி ரூபாய் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியுள்ளபடி நாம் 25 நிறுவனங்கள்மூலம் ஈர்க்க முடிந்த மொத்த முதலீடு 27 ஆயிரத்து 894 கோடி ரூபாய் மட்டுமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின்மூலம் மட்டும் 26 ஆயிரத்து 625 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. அதனால் சிறு தொழில்கள் வளர்ந்து கிட்டத்தட்ட 5 சதவீதம் அளவிற்கு முதலீடுகள் வரும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனென்று சொன்னால், பெரும் தொழில்கள் அதிகமாக வருகின்றபோதுதான் உற்பத்தித் துறையினுடைய வளர்ச்சி அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி. மொத்த முதலீடு மாண்புமிகு அமைச்சர் சொன்னதைவிட ஒரு ஆயிரம் கோடி ரூபாய் அதிகம்தான். 27 ஆயிரத்து 894 கோடி ரூபாய் அளவுக்கு இந்த வருடம் ஈர்க்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்மில் பாதி அளவுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013–ல் 26 ஆயிரத்து 625 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று நான் தெளிவாகச் சொன்னேன். இந்த ஆண்டு 60 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் வந்து இருக்கவேண்டும் என்று நீங்கள் ஏற்கெனவே சொன்னீர்கள். நாங்கள் ஏற்கெனவே 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குத்தான் முதலீடுகள் வரும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருந்தோம். இப்போது அதைவிடக் கூடுதலாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதைத்தான் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த முதலீடு 27,894 கோடி ரூபாய் மட்டுமே. நம்மில் பாதி அளவுள்ள, தொழில் பாரம்பரியம் நம் அளவு இல்லாத கேரள மாநிலம்கூட இதே வருடத்தில் ஒரே ஒரு "Emerging Kerala" நிகழ்வில் 45 நிறுவனங்கள்மூலம் ரூபாய் 40 ஆயிரம் கோடிக்கு மேல் முதலீடுகளை ஈர்த்துள்ளது. குஜராத் தன்னுடைய "Vibrant Gujarat" நிகழ்வின்போது ஈர்த்துள்ள முதலீடு ரூபாய் 85 ஆயிரம் கோடிகளுக்கு மேல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Global Investors' Meet என்பது ஒவ்வொரு மாநிலத்திலும் இப்போது நடைபெறுகின்றது. கேரளாவில் நீங்கள் சொல்வதைப்போல் ரூபாய் 40 ஆயிரம் கோடி அளவிற்கு வந்ததாக சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே கர்நாடகா, குஜராத் போன்ற மாநிலங்களில் எல்லாம் இதுபோன்று நடைபெற்றிருக்கிறது. ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் கோடி ரூபாய் என்று முதலீடுகள் வருவதாக பத்திரிகையிலேதான் படிக்கின்றோம். உள்ளபடியே பார்க்கின்றபோது, 10 ஆயிரம், 20 ஆயிரம், 30 ஆயிரம் கோடி



ரூபாய்க்குமேல் இதுவரை முதலீடுகள் வந்ததில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், கேரளாவைப் பொறுத்தவரையில், 40 ஆயிரம் கோடி என்பது பிரதமர் அங்கே நேரடியாக வந்து தொழிலதிபர்களை Investor's meet–க்கு வரவழைத்து வலுக்கட்டாயமாக அங்கே தொழில்கள் தொடங்கப்பட வேண்டும் என்பதற்காக வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால், அங்கே வருகின்ற தொழில் அதிபர்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் தமிழகத்திற்குத்தான் வருவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கேரளாவில் Investor's meet–ல் அவர்கள் கலந்துகொண்டாலும்கூட, இங்கே தொழில் துவங்குவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லைக் கோடுகள் ஒவ்வொன்றும் மாற்றி எழுதப்படுகின்ற இந்தக் காலத்தில் முதலீடுகளை ஈர்க்கும் அணுகுமுறையிலும், Industrial Promotion Model–ஐயும், மாற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதற்காக 10 கருத்துகளை இந்த அவையின்முன் வைக்க விரும்புகின்றேன்.

1. இரண்டு வருடங்களாகக் கூறப்பட்டு இன்னும் அறிவிக்கப்படாத 5 கொள்கைகளை, Tamilnadu Industrial Policy, Tamilnadu Bio–technology Policy, Tamilnadu Aero–space Policy, Tamilnadu Automobile Policy, Tamilnadu Land Acquisition Policy ஆகிய 5 கொள்கைகளையும் உடனே அறிவித்துவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முதலாக, தமிழகத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் கால் வைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் காரணம் என்பது தமிழக மக்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி வழிகாட்டுதல் மையம்,

Guidance Bureau என்ற ஒன்றை இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆரம்பித்தார்கள். அதேபோல, தொழில் கொள்கையை 1992 ஆம் ஆண்டும், 2003 ஆம் ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இப்போது நீங்கள் சொல்வது பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து கூடிய விரைவில் அது அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 கொள்கைகளும் தேசிய உற்பத்தி கொள்கையுடன் ஒருங்கிணைந்து இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக அந்த தேசிய உற்பத்திக் கொள்கையின் அடிநாதமாக விளங்குவது தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலம் (N.I.M.Z.) இந்தக் கொள்கை அறிவிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளில் 7 மாநிலங்களில் 12 N.I.M.Z. மண்டலங்கள் தலா ரூபாய் இரண்டு ஆயிரம் கோடியில் ஒருங்கிணைந்த தொழில் நகரங்களாக உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலிருந்து எந்த ஒரு இடமும் இதுவரை பரிந்துரை செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த N.I.M.Z. என்பதற்கு 5 ஆயிரம் ஹெக்டேர் நிலம் தேவை, அதாவது 12 ஆயிரம் ஏக்கர் தேவை என்பது மத்திய அரசினுடைய கொள்கை. ஒரே இடத்தில் 12 ஆயிரம் ஏக்கர் எடுப்பது என்பது முடியாத காரியம் என்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசு கொண்டு வருவதற்கு முன்பாகவே இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக கிருஷ்ணகிரியிலேயும், தூத்துக்குடியிலேயும், வேலூர் மாவட்டத்திலேயும் திட்டங்களைக் கொண்டு வந்து நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற அந்த N.I.M.Z. திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம் என்ற அடிப்படையில் எங்களுக்கு அந்தச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றோம். கோரிக்கையினுடைய



அடிப்படையிலே அதை ஏற்றுக்கொண்டால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீங்கள் ஒரு மாவட்டத்தில் கேட்கின்றீர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் அது மூன்று மாவட்டங்களிலே வர இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. விருதுநகர், சாத்தூர் N.I.M.Z. உட்பட கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டம் என்று சொன்னீர்கள். மிக மிக சந்தோஷம். இதனால் 20 ஆயிரம் பேருக்கு முறைசார்ந்த வேலை கிடைக்கும். 100 தொழில்கள் மலரும். அதேபோல், Delhi, Mumbai Industrial Corridor of Excellence–க்கு மத்திய அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூபாய் 18,500 கோடி ஒதுக்கி இருக்கிறது. நாம் செயல்படுத்தவுள்ள மதுரை to தூத்துக்குடி, சென்னை to ஒசூர், கோவை to சேலம் Industrial Corridor of Excellence திட்டங்களுக்கு மைய அரசின் உதவியை உரிமையுடன் கேட்டுப் பெற வேண்டும். அடுத்து, தொழில் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசுதான் தமிழகத்தின்மீது பாராமுகமாக இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழ்நாட்டில் சமச்சீராக தொழில்கள் வளர்ச்சிப்பெற வேண்டும் என்பதற்காக நிதிநிலை அறிக்கையிலே புதியத் திட்டங்களை அறிவிப்போம் என்று சொன்னார்கள். அதன்படி மத்திய நிதி அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தை வரவேற்கிறேன் என்று சொன்ன நிதி அமைச்சர் அவர்கள் இதற்காக நாங்கள் இவ்வளவு நிதியை ஒதுக்குகின்றோம் என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை. வரவேற்பது காலத்தின் கட்டாயம். அவர்களுக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் அவர் 10, 15 ஆண்டுக் காலம் தென்னகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டு மத்திய அமைச்சராக இருந்தவர், தென் தமிழ்நாட்டிற்கு எதுவும்

செய்யவில்லை. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக தென் தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களால்தான் அங்கே இருக்கக்கூடிய மக்களுடைய பொருளாதார வளர்ச்சி உயரும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** தொழில் துறைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் 1,668 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் சுமார் 17% விரிவடைந்த சூழ்நிலையில், ஆதாரத் துறையான தொழில் துறைக்கு 2% மட்டுமே உயர்த்தியுள்ளது மிகவும் குறைவு. இதனை உயர்த்துவதற்கு எளிதான வழிகள் உள்ளன. உதாரணத்திற்கு தமிழக அரசு டிட்கோ மூலமாக, மைனாரிட்டி முதலீடு செய்துள்ள தனியார் நிறுவனங்களிலிருந்து முழுமையாகவும், 100% அரசு தொழில் முதலீடுகளில் உள்ள தொழில் வணிக நிறுவனங்களில் 10% வரையும், disinvestment செய்தால், நம் முதலீட்டில் ஒரு பகுதியை இன்றைய மதிப்பில் நாம் திரும்பப் பெற்றால், ரூபாய் 7,000 கோடிகளுக்குமேல் நம்மால் ஈட்ட இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிட்கோ என்பது தமிழகத்தில் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக ஒரு கூட்டுத் தொழில் முயற்சியாக இந்தத் துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சொல்வதைப்போல நாம் அங்கே போட்டிருக்கும் முதலீட்டை எடுத்துக்கொண்டோம் என்றால் அந்த முதலீட்டினுடைய தொகை நமக்கு வரலாம். ஆனால், தொழிற்சாலைகள் உருவாகாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.



**திரு. க. பாண்டியராஜன்:** நல்ல கருத்து. இதற்காகத்தான் நான் சொல்வது என்னவென்றால், 28% முதலீடு செய்துள்ள டைட்டன் நிறுவனத்தின் இன்றைய சந்தை மதிப்பு மட்டும் 22,000 கோடி ரூபாய்க்கு மேலாகும். டி.என்.பி.எல். போன்ற தமிழக அரசின் Blue Chip நிறுவனங்களில் 10% அளவுக்கு பொது முதலீட்டாளர்களைப் பங்கு பெற வைத்தால், அது நமது நிருவாகத்தையும் மேம்படுத்தும். அரசுக்கு நிதியும் கிடைக்கும். இதன் வாயிலாகக் கிடைக்கும் 7,000 கோடி ரூபாயை வைத்து 5 வருடங்களில் அமைக்க நினைத்துள்ள 53 தொழிலகக் குழுமங்கள், அதாவது Clusters அனைத்தையும் இந்த வருடமே அமைக்க முடியும். இந்த Dis–investment மூலம் கிடைக்கும் வருமானத்தின்மூலமாக தமிழகத்தில் ஒரு டைட்டனில் 28% இருப்பதற்கு பதிலாக 53 தொழிலகக் குழுமங்களில் 53,000 பேருக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு இதனால் மலரும். இந்தப் பணத்தை வைத்து தமிழகத்தின் அனைத்து சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும் ஜெனரேட்டர் மானியம் 95% ஆக அதிகப்படுத்தலாம். தாங்களே உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாய் வீதம் VAT Input Credit, DIC மூலமாகத் தர முடியும். Solar Panels, LED Lights அனைத்திற்கும் விற்பனை வரியிலிருந்து முழு வரி விலக்கு அளிக்க முடியும். இதெல்லாம் இந்த 7,000 கோடி ரூபாயில் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்துகளையெல்லாம் சொல்கின்றபோது, தொழிற்சாலைகள் பெருகவேண்டும் என்பதற்காக சொல்கின்றாரா? இல்லை இருக்கின்ற தொழிற்சாலையை மூடவேண்டும் என்பதற்காகச் சொல்கின்றாரா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்று சொன்னால், ஒவ்வொரு தொழிற்சாலையும் பங்கு பெறுவது, புதிய தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்காகத்தான் டிட்கோமூலமாக அந்தத் துறையை ஏற்படுத்தியிருக்கின்றோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், அதிலிருந்து முதலீட்டை நாம் பெற்றுக்கொண்டோம் என்று சொன்னால், அந்தத் தொழிற்சாலை எப்படி நடைபெறும்? இன்னும் இருக்கின்ற தொழிற்சாலைகள் நம்மை நம்பி எப்படி வருவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கும் மேலாக டி.என்.பி.எல். பற்றிச் சொன்னார்கள். 10% பொதுமக்கள் Partnership வேண்டும் என்று சொன்னார்கள். நான் இப்பொழுதே சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே என்.ஆர்.ஐ. போன்றவர்கள் 15% இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** நமது Industrial promotion approach மாற வேண்டும் என்று நான் சொன்னதற்கு இதுவும் ஒரு காரணமாகும். டைட்டன் நிறுவனத்தில் நாம் முப்பது வருடங்களுக்குமுன் முதலாக போட்ட இரண்டரை கோடி ரூபாயை எடுத்து விடுவதால் டைட்டன் நிறுவனத்தை மூடமாட்டார்கள். அன்றைக்கும் அது TATA கம்பெனிதான். என்றைக்கும் அது TATA கம்பெனிதான். நமக்குக் கிடைப்பது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை Board மீட்டிங்கில் கலந்துகொள்ளும் வாய்ப்பு மட்டுமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அதிலே, பல நலிவடைந்த தொழிற்சாலைகளும் இருக்கின்றன. பல dis–investment எல்லாம் நாம் நடத்தியிருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், TANCEM–லிருந்து விலகி முழுமையாக TANCEM–க்கு கொடுத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** அரசின் பல துறைகளிலும் அறிவிக்கப்பட்டுவரும் தொழில் முனைப்பு வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு திட்ட அடிப்படையில் செயல்படவேண்டும். Venture Capital, NEEDS, EDS, EDI, Incubator, ஆவின் பாலகத் திட்டம், இவை அனைத்தையும் ஒரு முனையில் கொண்டுவந்தால், வரும் வருடத்தில் 2,000 முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை உண்மையிலேயே உருவாக்க முடியும்



என்று நம்புகிறேன். சிப்காட் நிறுவனத்தின் செயல்பாடு சென்ற C.A.G. அறிக்கையில் கூறப்பட்டபடி மிகுந்த கவலையை அளிக்கிறது. இந்த அரசு மீண்டும் பொறுப்பெடுத்தபொழுது 909 கோடி ரூபாயாக இருந்த சிப்காட் நிறுவன வருமானம், 2011–2012 ஆம் ஆண்டில், அதாவது கடந்த வருடத்தில் 650 கோடி ரூபாயாகக் குறைந்து இந்த வருடம் 2012–2013–ல் 538 கோடி ரூபாயாக வீழ்ந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பினை சரியாகப் படிக்கவில்லை என்று நினைக்கின்றேன். அதிலே வருவாய் மட்டும்தான் குறைந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வருவாய் குறைந்ததற்கு இந்த ஓராண்டு காலமாக புதிய நிலங்கள் எடுத்து, அதற்கு இன்னும் முழுமையான தொகையைக் கொடுக்கவில்லை. தொழிற்சாலைகளுக்கெல்லாம் அந்த நிலத்தைக் கொடுக்கின்றபோதுதான் நமக்கு வருமானம் வரும். ஆனால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு இலாபம் அதிகரித்திருப்பது எப்படி என்பதை யோசித்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** இலாபம் எப்படி வந்தது என்பதை C.A.G. ஆடிட் அறிக்கையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** இலாபம் எப்படி வந்தது என்பதை C.A.G. அறிக்கையில் சொல்லியிருப்பது, 8 குறைபாடுகள், ** நாம் இழந்த நிதி ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிதிநிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செயல்பாடுகள், திட்டமிடல், திட்ட மேலாண்மை, தொழிலக மனை ஒதுக்கீடு, விலை நிர்ணயம், நிறுவன நிருவாகம், உள் குத்தகை மாற்றம், ஊக்கத் தொகை வழங்குதல் இந்த 8 அம்சங்களில் இருக்கும் குறைபாடுகள் மற்றும் ** நாம் இழந்த நிதி ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த C.A.G. அறிக்கையில் ** என்று சொல்லியிருக்கின்றார். எந்தவிதத்தில் ** என்பதைச் சொல்ல வேண்டும். முதலிலே நான் சொல்வது, நிலத்தைக் கையகப்படுத்துகின்றோம். அவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குகள் தொடுக்கின்றார்கள். நாம் ஒரு ஏக்கருக்கு 10 இலட்சம் ரூபாய் என்று நிதியை ஒதுக்குகின்றோம். உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடர்ந்த பிறகு, 20 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் என்று உயர் நீதிமன்றம் ஆணையிட்டதற்குப் பின்பாக நாம் அந்த நிதியைக் கொடுக்கின்றோம். அதைத்தான் அந்த C.A.G.–யில் நீங்கள் அதிக நிதியை ஒதுக்கியிருக்கின்றீர்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். இது எப்படி ** இருக்கும். அதுவும் நாம் நிலம் ஒதுக்குவது என்பது 99 வருடங்களுக்கு லீசுக்குத்தான் கொடுக்கின்றோமேயொழிய, விற்பனைக்கு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை, அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் கூறிய ** என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. க. பாண்டியராஜன், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** ஒரே ஒரு நிமிடம். அனைத்துக்கும் மேலாக தொழில் துறை எதிர்பார்ப்பது சமச்சீர் மின்வெட்டு. இருக்கும் மின்சாரத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அனைத்து கனிம வளங்களையும் கிரானைட் முதல் கார்னெட் வரை வெட்டி எடுக்கும் தொழிலை அரசுமயமாக்க வேண்டும். இந்தத் துறையினை முழுமையாகச் சீரமைத்தால் ஆண்டுக்கு குறைந்தது 2 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் அதிகரிக்கும்.

இறுதியாக, மதுரை விமான நிலையத்தில் 130 கோடி ரூபாய் முதலீடு செய்து புது முனையம் அமைக்கப்பட்டுவிட்டாலும், மத்திய அரசாங்கத்தின் Civil Aviation Ministry மற்ற நாடுகளுடன் உருவாக்கும் இருதரப்பு ஒப்பந்தங்களில் மதுரைக்கு வெளிநாட்டு விமானங்கள் வரும் வாய்ப்பினை அனுமதிப்பதில்லை. கேரளாவில் 3 சர்வதேச விமான நிலையங்கள் உருவாகிவிட்டன. தமிழகத்தில் சென்னை தவிர, கோவை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று விமான நிலையங்களுக்கும் தமிழக அரசு, மத்திய அரசாங்கத்தைக் கேட்டு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக் கொடுக்க வேண்டும். Bi–lateral Treaties–ல் இந்த மூன்று விமான நிலையங்களும் பங்கு பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 10 கோரிக்கைகளையும் நிறைவேற்றினால் மீண்டும் தமிழகம் தொழில் துறையில் முதல் இடத்தை அடைய எல்லா வகைகளிலும், எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. போட்டித்திறன் நிறைந்தது தமிழகம். நமது போட்டித் திறனை வலுப்படுத்துவதற்கு இந்த புது approach, புது model செயல்படுத்தப்பட வேண்டுமென்று தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் தமிழகம் தொழில் வளத்தில் முன்னிலை வகிக்க வேண்டும் என்றும், முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அவருக்கு முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில்தான் தமிழகம் தொழில் துறையில் முதலிடத்தைப் பிடிக்கும் என்பதை ஒப்புக் கொண்டதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழெல்லாம்
பொன்றாது நிற்பதொன்று இல்."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஏழை எளிய, நடுத்தர வர்க்கத்தினருக்காக மகத்தான ஆட்சி நடத்துவதன்மூலம் மக்கள் மனதில் நீங்காத புகழோடு விளங்குகின்ற இந்தியத் துணைக் கண்டத்தின் நம்பிக்கை நட்சத்திரம், ஒன்பது கோடி உலகத் தமிழர்களின் உச்ச நட்சத்திரம் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி நதி நீரை நிரந்தரமாகப் பெற்றுத் தந்த கருணைக் கடலாகிய மாண்புமிகு அம்மா அவர்களே, "வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்" என்றார் மகாகவி பாரதி. அவரது ஆசை நிறைவேற, டெல்டா மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உயர்ந்த எண்ணத்தால், உழைப்பால், அறிவாற்றலால், உணர்வால், ஆசையால் நீங்கள் 525 கோடி ரூபாய் வாரி வழங்கி, அவர்களை வாழ்வித்த உங்கள் பெருந்தன்மைக்காக காவேரி டெல்டா விவசாயிகள் நிறைந்த மூன்று மாவட்டங்களில், நாங்கள் செல்லும் இடமெல்லாம், அம்மா "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற, இந்த நாட்டில் உள்ள விவசாயிகளின் வாழ்வு முன்னேற, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா நல்லவங்க எல்லோரும் உங்கள் பின்னாலே, அம்மா நீங்க நினைச்சதெல்லாம் நடக்கும் அம்மா கண்ணு முன்னாலே" என்று விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியான மனநிறைவோடு நன்றி சொல்லும் காட்சியை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு பணிவோடு தெரிவித்து இந்த மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன்.

காவேரி டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரண்யம் தொகுதிக்கு மட்டும் 79 கோடி ரூபாய் அளித்துள்ளீர்கள். எந்தக் காலத்திலும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத



பெரும் தொகையாக ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வாரி வழங்கிய வள்ளல் அம்மா நீங்கள்.

பிற்பகல் 1–05

"கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி, விவசாயி" என்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் நடித்த திரைப்படத்தில் வரும் பாடலின் வைர வரிகளுக்கு ஏற்ப, விவசாயிகளுக்கு வாரி வழங்கியுள்ள தங்களுக்கு வேதாரண்யம் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை உங்கள் கமல மலர்ப் பாதங்களில் வைக்கிறேன்.

ஈழத் தமிழ் மக்களை இனப் படுகொலை செய்த ராஜபக்ஷேவுக்கு இரத்தினக் கம்பளம் விரிக்கிறது மத்திய அரசு. ஆனால், விளையாட்டுப் போட்டிக்காகக்கூட தமிழ்நாட்டு எல்லைக்குள் சிங்களர் நுழைய அனுமதியில்லையென்று தடைவிதித்த சிங்கத் தலைவி எங்கள் அம்மா நீங்கள்தான். நெஞ்சுரம் படைத்த நெப்போலியனையும் விஞ்சிடும் வீரம்கொண்ட வீராங்கனையாகத் திகழ்வதும் அம்மா நீங்கள்தான்.

இலங்கை, இந்தியாவுக்கு நட்பு நாடல்ல என்று வரையறை கூறியவர் அம்மா நீங்கள்தான். இலங்கையை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தக் கோரியவரும் அம்மா நீங்கள்தான். இலங்கைக்குப் பொருளாதாரத் தடை விதிக்க முன்மொழிந்தவரும் அம்மா நீங்கள்தான். காமன்வெல்த் மாநாட்டைக் கொழும்பில் நடத்தக் கூடாதென்று தெள்ளத் தெளிவாக உடைத்துக் கூறியவரும் அம்மா நீங்கள்தான்.

கருணாநிதி கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது தவறென்று சொன்னதோடு, சட்ட வழியாக அதை மீட்டெடுக்கப் போராடி வெற்றி பெறப்போவதும் அம்மா நீங்கள்தான்.

நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் வைத்த கோரிக்கையை ஏற்று, கருணைக் கடலாய், கழகத்தின் கலங்கரை விளக்கமாய், ஏழைகளின் உற்ற தாயாய் விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், வேதாரண்யம் தொகுதி, (மேசையைத் தட்டும் ஒலி) தலைஞாயிறு ஒன்றியம், முதலியப்பன்கண்டியில் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கீழையூர் ஒன்றியம்,

தலைஞாயிறு ஒன்றியம், வேதாரண்யம் ஒன்றியம், வேளாங்கண்ணி பேரூராட்சி கிராமப்புற குடியிருப்புகளுக்குக் குடிநீர்ப் பஞ்சம் தீரும் வகையில் மழைநீர் கடலில் சேராதிருக்க, ஷட்டருடன்கூடிய தடுப்பணையும், அங்கு நீர்த்தேக்கமும் அமைக்க ஆணையிட்டுள்ள இன்றைய தமிழர்களின் குலவிளக்கு, நாளைய இந்தியாவின் ஒளிவிளக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வேதாரண்யம் தொகுதி, ஆறுகாட்டுத்துறை மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆணையிட்டுள்ள அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை முழுமையாக ஒழிப்பதே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே உங்கள் அரசின் இலட்சியம்! இந்தியாவிலேயே தமிழகத்தை சமூகப் பொருளாதார வளர்ச்சியடைந்த முதல் மாநிலம் ஆக்குவதே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் பெரும் நிறுவனங்களுக்கு ஆதரவும், ஊக்கமும் தந்து, பல்லாயிரம் கோடி ரூபாய்க்கு முதலீடுகளைக் கொண்டு வந்து குவித்து, இருண்டு கிடந்த தமிழகத்திற்கு ஒளிவிளக்கு ஏற்றிடும் ஒப்பிலா மணிவிளக்காக தாங்கள் விளங்குகிறீர்கள்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் அமைந்துள்ளது என்பதற்கு அடையாளம் யாதென்றால், மக்கள் பசி தீர உண்பதற்கும், உடுப்பதற்கும், இருப்பதற்கும் ஏற்ற வசதிகள் நாட்டை ஆள்பவரால் செய்து தரப்பட வேண்டும். பசி இன்மையே ஒரு வளமான நாட்டின் முதன்மைச் செல்வம். வயிற்றுக்கு உணவின்மையும், வாட்டும் பசியும் வளமின்மைக்கு அடையாளங்களாகும். அதனையே வள்ளுவர்,

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு”



என்றார். இதனை அறிந்து அன்பு நிறைந்த, அறிவில் தெளிந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் குடும்ப அட்டைக்கு 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கினீர்கள். இப்போது ரூ.20/–க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கி, வெளிச் சந்தையில் அரிசி விலை குறையும்பொருட்டு எடுத்துள்ள நடவடிக்கைகள் ஏழை, எளியோர், நடுத்தர வர்க்கத்தாரால் பாராட்டப்படுகிறது.

ஒரு நாட்டின் அணிகலன்களாக விளங்குபவை ஐந்து என வள்ளுவர் கூறுகிறார். நோயின்மை, செல்வம், வளமான உற்பத்திப் பொருட்கள், மக்களின் மகிழ்ச்சி, பாதுகாப்பான சூழல். இதனையே வள்ளுவர்

“பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கு இவ்வைந்து”

என்றார். இதனைக் கருத்தில்கொண்டு கிராம மக்கள், ஏழைகள், ஆதரவற்றோர், வாழ வழியற்றுத் தவிக்கும் பெண்டிர், வறுமையில் வாடும் முதியோர், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், கொடிய நோயால் துன்பப்படுவோர் இவர்களின் துயரங்களையெல்லாம் நீக்குவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழிகாட்டியுள்ளீர்கள்.

தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசும் வாய்ப்பு பெற்றுள்ள நான் சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு முன்வைக்கின்றேன். எங்கள் பகுதியில் சவுக்கு, யூக்கலிப்டஸ் மரங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப்படும் இந்த மரங்கள் சுமார் 500 கிலோ மீட்டர் நீண்ட தூரத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, சவுக்கு, யூக்கலிப்டஸ் மரங்களை மூலப்பொருளாகக் கொண்டு வேதாரண்யம் தொகுதியிலேயே ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தர பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, எங்கள் பகுதியில் மாம்பழம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பழங்கள் நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் மாம்பழ குளிரூட்டிக் கிடங்கு ஒன்று அமைத்திட வேண்டுகிறேன்.

தலைஞாயிறு ஒன்றியம் தாலுகா தலைநகர் ஆவதற்குத் தகுதியோடு பன்னெடுங்காலமாக உள்ளது. நீண்ட நாள்

கோரிக்கையான அதனை நிறைவேற்றித் தர பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தலைஞாயிறில் ஏற்கெனவே சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வந்தது. அதனை கடந்த மைனாரிட்டி ஆட்சியாளர்கள் வேறு தாலுகாவிற்கு மாற்றிவிட்டனர். அன்று முதல் தலைஞாயிறு பகுதி மக்களுக்குச் சிரமமான சூழ்நிலை. எனவே, மீண்டும் தலைஞாயிறில் சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர பணிவோடு வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–10

வேதாரண்யம், திருமறைக்காடு புகழ்பெற்ற சைவ திருத்தலங்களில் ஒன்று. இங்குள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் கோவிலின் மணிகர்ணைக் குளம் வடநாட்டில் புகழ்பெற்ற காசியின் புனிதத்தை ஒத்த புனிதமானதாகும். எனவே, இக்குளத்தைச் சீர்செய்து தரவும், சிதிலமடைந்த கோவிலின் சுற்றுப்புறச் சுவரினை சரிசெய்து மேம்படுத்திடவும், வேதாரண்யம், திருமறைக்காட்டில் மூடிக்கிடந்த திருக்கதவை பாடித் திறந்த மண்ணில் அமைந்துள்ள இத்திருக்கோவிலின் குடமுழுக்கு நடைபெற உள்ள நிலையில், வேதாரண்யத்தைப் புராதன நகரமாக மாற்றிடவும் பணிவோடு வேண்டுகிறேன்.

வேதாரண்யத்திற்கருகில் உள்ள கோடியக்கரை காடுகளில் மூலிகைச் செடிகள், அரிய வகை பறவைகள், அரிய வகை மான் இனங்கள் உள்ளதால், சிறப்புமிக்க இந்தப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவித்து மேம்படுத்திட வேண்டுகிறேன்.

கல்வியில் முதலிடத்தில் சிறந்து விளங்குவது கன்னியாகுமரி. அதற்கு அடுத்தப்படியாக கல்வியில் சிறந்து விளங்குகிற பகுதி எனது தொகுதியான வேதாரண்யம் இங்கு படித்தவர்கள் அதிகம். அப்படிப் படித்தவர்கள் நிறைந்த பகுதியில், ஆயக்காரன்புலம் என்ற சிறிய கிராமத்தில், ஒரு மருத்துவர் சுமார் 12 ஏக்கர் நிலத்தை அரசு தொழில்நுட்பக் கல்லூரி (பாலிடெக்னிக்) ஒன்று அமைக்க தானமாகத் தர முன்வந்துள்ளார். மிக நீண்ட காலமாக கல்லூரியே இல்லாத இப்பகுதியில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று அமைத்துத் தருமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களே, தங்களது ஆட்சி இந்தியாவையே உங்கள் பக்கம் ஈர்க்கும் இணையற்ற ஆட்சியாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை



எதிர்ப்புகள் எங்கிருந்து வந்தாலும், அத்தனையையும் தவிடு பொடியாக்கி இன்னல்களைத் தகர்த்தெறியும் தைரியத் தாயாக விளங்குகிறீர்கள்!

ஓராயிரம் எதிரிகள் ஒன்றிணைந்து வந்தாலும் ஒருநாளும் அசைக்க முடியாத உயர்ந்த கோபுரமாய் உள்ளீர்கள். அரசும், ஆளுமையும், அஞ்சா நெஞ்சமும், நேர்மையும், நிமிர்வும், வாய்மையும் வாய்ந்த காவேரித்தாய் அம்மா அவர்களே! உங்கள் செங்கோன்மையில் நாடு இன்று மிகப்பெரிய வளர்ச்சி அடைந்து வருகின்றது.

தமிழ் வாழ, தமிழர் வாழ, ஏழைகள் எளியோர், நடுத்தர வர்க்கத்தார் எல்லோரும் உயர, அம்மா அவர்களே நீங்கள் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்த வயதில்லை வணங்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன் அம்மா. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு வேளாண்மையும், தொழிலும் இரு கண்கள் என்பதைத் தாங்களும் நமது சபையிலுள்ள உறுப்பினர்களும் அறிந்த ஒன்று. அத்தகைய இரண்டு கண்களில் ஒன்றான தொழில் வளரச்சி குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்துக்களைப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

நேற்றைய தினம் மத்திய தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. ஆனந்த் சர்மா அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒரு செய்தியைக் கூறியிருக்கிறார். 2012–2013 ஆம் நிதியாண்டில் இந்தியாவினுடைய ஏற்றுமதி விகிதம் கடுமையாகச் சரிந்திருப்பதாகச் சுட்டிக்காட்டினார். உலக அளவில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருக்கிறது என்றும், அதன்காரணமாக இந்தியாவில் பொறியியல் மற்றும் ஜவுளித் துறைகளில் கடும் தாக்கத்தை, நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் ஒரு செய்தியை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்த நேரத்தில், ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாநிலத்தின் நிதி அமைச்சர் அல்ல, மத்தியில் இருக்கக்கூடிய நிதி அமைச்சர் அவர்கள் அமெரிக்காவில் இப்போது இருக்கிறார். அவர் எதற்காக அமெரிக்கா சென்றிருக்கிறார் என்றால், வெளிநாட்டில் இருக்கக்கூடிய தொழில் முதலீட்டாளர்களையெல்லாம் அழைத்து, இந்தியாவில் வந்து தொழிலைத் துவங்க வேண்டுமென்று அழைப்பு விடுக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்திற்காக வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். அநேகமாக அவர் நிதியமைச்சராக ஆன பிறகு அவருடைய தொகுதிக்கு வருகிறாரோ இல்லையோ, வெளிநாடுகளுக்குத் தொடர்ச்சியாக அவர் பயணத்தை மேற்கொண்டு வருகிறார். இந்தப் பயணம் இந்தியாவினுடைய தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதற்கு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். 'இந்தியாவில் இருக்கக்கூடிய சூழல் மிக அருமையான சூழலாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் தொழில் செய்வதற்கு முன்வாருங்கள்' என்று இவர் அழைப்பு விடுக்கிறார். இவை இரண்டும் நேற்று நடந்த உண்மைகள். இரண்டிலுமே எது உண்மை, எது பொய் என்று பார்த்தால் இரண்டுமே உண்மையாக இருக்கிறது. ஒரு அமைச்சர் இங்கு ஏற்றுமதி சரிந்திருக்கிறது; ஜவுளித் தொழிலும் அதேபோன்று பொறியியல் தொழிலும் கடுமையான பாதிப்பைச் சந்தித்திருக்கின்றன என்று சொல்கிறார். இன்னொரு அமைச்சரோ அதாவது மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சூழ்நிலை மிக நன்றாக இருக்கிறது தொழில் செய்ய வாருங்கள் என்று அழைப்பு விடுக்க வெளிநாடு போய் இருக்கிறார். இதில் இருக்கக்கூடிய முரண்பாட்டை நம்முடைய தமிழக அரசும், நாமும், தமிழக மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். உலகமய சூழ்நிலை, தாராளமயமாக்கும் கொள்கையை மத்திய அரசு கடைப்பிடிப்பதன் காரணமாகத்தான் இந்த இரண்டு வேறுபட்ட, முரண்பட்ட நிலை உருவாகி இருக்கிறது. அதுதான் இதில் இருக்கக்கூடிய உண்மை. ஆகவே, அரசியல் உலகமய பின்னணியைப் புரிந்துகொண்டு பார்க்கும்போதுதான் தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியில் மாநில அரசு ஆற்றியிருக்கக்கூடிய சில முக்கியமான கடமைகள்; அதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றங்கள் என்ன என்பதைக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்து நாங்கள் புரிந்துகொள்ள



முடிகிறது. அதேசமயத்தில், தமிழகத்தில் உலகமயக் கொள்கையின் தாக்கத்தினால் தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் உதவி பெறக்கூடிய தொழில் அல்லாத இதர பல்லாயிரக்கணக்கான தொழில்கள் இருக்கின்றன. அந்தத் தொழில்கள் இன்றைக்கு என்ன நிலைமையைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன என்பதை நம்முடைய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியம் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில், என்னுடைய கருத்துகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்ற முறையில் முன்வைக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–15*

காற்றில் எத்தனையோ வாயுக்கள் இருக்கின்றன. ஆனால், மனிதன் உயிர் வாழ்வதற்கு ஆக்சிஜன் மட்டும்தான் தேவை. அதுபோன்றுதான் தொழிலுக்கு அத்தியாவசியமான தேவைகள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால், நமக்கு ஆக்சிஜன் போல தொழிலுக்கு அவசியமான மூச்சுக் காற்று என்பது மின்சாரம்தான். ஆகவே, இன்றைக்கு மின்சாரம் என்பது தொழில் உயிர் வாழ்வதற்கு எவ்வளவு அவசியம் என்பதை நாம் அனைவரும் நன்றாக உணர்வோம். தொழில் வளர்ச்சியில் உலகமய பொருளாதாரக் கொள்கை எதிரியாக இருக்கிறது. கடுமையாக நிலவி வரக்கூடிய மின்சாரத் தட்டுப்பாடு இன்னொரு பெரும்பிரச்சினையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதை நான் எங்கிருந்து தொடங்க வேண்டுமென்று விரும்புகிறேன். என்றால், நான் யார்மீதும் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய நத்தம் மற்றும் வேம்பார்பட்டி, சாணார்பட்டி, திண்டுக்கல் அருகில் இருக்கக்கூடிய ரெட்டியார்பட்டியில் சிறிய இயந்திரத்தின்மூலமாக தேங்காய் நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில் செய்கிறார்கள். அப்படி தேங்காய் நாரிலிருந்து கயிறு திரிக்கக்கூடிய தொழிலில் கடந்த காலங்களில் இரண்டரை டன் உற்பத்தி இருந்தது. இப்பொழுது கடுமையான மின்சாரத் தட்டுப்பாட்டால் 600 கிலோ மட்டும்தான் தயார் செய்ய முடிகிறது. சிறு தொழிலை இது எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்று சொன்னால், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், திண்டுக்கல் போன்ற மேற்கு மாவட்டங்களில் இருக்கக்கூடிய தொழில்களைப் பார்த்தால் நமக்கு மிகவும் கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

மத்திய அமைச்சர் ஆனந்த்சர்மா அவர்கள் ஜவுளித் தொழில் கடும் பாதிப்பு என்று சொன்னார். கோயம்புத்தூரில் உள்ள பஞ்சாலை 1888–லே துவங்கப்பட்டது. 839 பஞ்சாலைகள் தமிழகத்தில் இருக்கின்றன. இந்தியாவிலேயே பஞ்சாலைத் தொழிலில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கக்கூடிய சிறப்பான மாநிலம் நம்முடைய தமிழகம்தான். 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கே தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஜவுளித் தொழிலைத்தான் உலகமயக் கொள்கை, ஏற்றுமதிக் கொள்கை, நூல் விலை உயர்வு, பஞ்சை ஏற்றுமதி செய்யக்கூடிய மத்திய அரசின் கொள்கை போன்றவை கடுமையாக பாதித்திருக்கின்றன. 450–க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள், 650–க்கும் மேற்பட்ட பம்புசெட் நிறுவனங்கள், 450 வார்ப்பட ஆலைகள், 700–க்கும் மேற்பட்ட கிரைண்டர் உற்பத்தி நிறுவனங்கள், பொறியியல் தொழில்கள், ஆட்டோ மொபைல் நிறுவனங்கள், 25,000–க்கும் மேற்பட்ட தொழில்கள் நடைபெறக்கூடிய மாவட்டம் கோயம்புத்தூர் மாவட்டம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். இவ்வளவு வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தொழில்கள் ஆட்சிபுரியக்கூடிய அந்த மாவட்டத்தில் இன்றுள்ள நிலைமை கவலையளிப்பதாக இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அங்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய மின்வெட்டு 890 மெகா வாட் மின்சாரம் தொழில்களுக்குத் தேவை. ஆனால் இப்போது கிடைக்கக் கூடிய மின்சாரம் போதுமானதாக இல்லை. வெறும் 5 மணி நேரம் மட்டுமே மின்சாரம் கிடைக்கிறது. ஒரு ஷிப்ட் கூட தொழிற்சாலையை நடத்த முடியவில்லை. நாங்கள் என்ன செய்வது என்ற கவலையில் அந்தத் தொழில் நிறுவனர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–20

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ புதிய பொருளை புதிதாகக் கண்டுபிடித்துச் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அரைத்த மாவைத்தான் அரைத்துக்கொண்டிருக்கிறார். எத்தனை முறைதான் இதற்கு பதில் சொல்வது? தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையை நாங்கள் இல்லை என்று மூடி மறைக்கவில்லை.



மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்பதை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாகச் சொல்லித்தான் நாங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அவசியம் இல்லை. இந்தப் பிரச்சினைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு காரணம் அல்ல என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களிலும், மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். ஆனாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, மின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இப்போது ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறை பிரச்சினை என்பது தற்காலிகமானது என்பதைத்தான் நாங்கள் பலமுறை சொல்லியிருக்கிறோம். தற்காலிகமான இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது. அதனடிப்படையில், மிக விரைவிலே, வரும் ஜூன் மாதம் முதலே மின் வெட்டு படிப்படியாகக் குறையத் தொடங்கி, 2013 ஆம் ஆண்டிற்குள் ஓரளவு மின் பற்றாக்குறைக்குத் தீர்வு காணப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, மின் உற்பத்தியிலே, நிச்சயமாகத் தமிழகம் மின் மிகை மாநிலம் என்ற நிலையை உறுதியாக எட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வேண்டிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினையை இல்லை என்று நாங்கள் மூடி மறைக்கவில்லை. இருக்கின்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்கிடையிலும்கூட, அதற்காக சில நிவாரணங்களை வழங்குகின்றோம். இன்றைக்கு, விநியோகிக்கப்படும் மின்சார அளவை எத்தனை மணி நேரம் கொடுக்கிறோமோ அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்பொழுது தொடர்ந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. குறைந்தபட்சம் 4 மணி நேரம் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்று அங்கிருப்பவர்கள் கேட்டார்கள். எனவே, 4 மணி நேரம் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கிடையில், கிடைக்கின்ற மின்சாரத்தை அவர்களுக்குத் தேவையின் சூழ்நிலைக்கேற்ப வழங்கப்படுகிறது.

ஆகவே, தற்காலிக சீரமைப்பு நடவடிக்கைககளும் மேற்கொள்ளப்பட்டு, பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே, திரும்பத் திரும்ப இதைப் பற்றி பேச வேண்டாம். இந்தப் பிரச்சினை ஏதோ இன்றைக்குப் புதிதாக வந்துவிட்டதைப்போல, இன்றைக்கு ஏற்பட்ட பிரச்சினைபோல மீண்டும் மீண்டும் அதைச் சொல்வதில் அர்த்தம் இல்லை, பொருள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பழைய விஷயத்தைப் பற்றிதான் சொல்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், நன்றி. அவர் சொல்கிற தடையில்லாத மின்சாரம் கிடைத்தால், அதுதான் எங்களுக்குப் புதிய விஷயமாக இருக்கும் என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் தொழில் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசிக் கொண்டிருக்கிறேன். தொழிலுக்குத் தேவை மின்சாரம். மனிதனுக்கு ஆக்ஸிஜன் எப்படித் தேவையோ, அதுபோன்று தொழிலுக்கு மின்சாரம் தேவை. நான் மின்சாரம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மீது குற்றம் சாட்டவில்லை; மின்சாரத் துறையைப் பற்றி நான் குற்றம் சாட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை நான் குற்றச்சாட்டு என்று சொல்லவில்லை. அவருடைய கோரிக்கைக்கு நான் பதில்தான் சொன்னேன். நான், நீங்கள் குற்றச்சாட்டு சொல்கிறீர்கள் என்று சொல்லவில்லை. ஏற்கெனவே, பலமுறை, பல உறுப்பினர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு முன்பே எங்களுக்குத் தெரியும். தமிழகத்தில் மின்சாரப் பிரச்சினை இருக்கிறது, அதற்கு நாங்கள் காரணம் அல்ல. இருந்தாலும்கூட, தார்மீகப் பொறுப்பேற்றுக் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள்



மேற்கொண்டு வருகிறது. அதுவரை, இந்தப் பிரச்சினை இருக்கும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். ஆகவே, இருக்கின்ற பிரச்சினைக்குத் தற்காலிகமாகத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. இதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. நிரந்தரத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. அதுவரையிலும், இப்படிப்பட்ட சிறு, சிறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். இன்னும், குறைந்த காலத்திற்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று, தொழில் முனைவோர்களிடம் நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டு, இப்பொழுது ஒத்துழைப்பு தந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் தற்போது புதிதாக பிரச்சினையைக் கிளப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் தொழில் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் மட்டும்தான் பேச வேண்டுமென்று குறிப்பு எடுத்து, படித்துப் படித்துப் பார்த்தால், மின்சாரம் இல்லாமல் தொழில் எப்படி நடக்கும் என்ற வினா எழுகிறது. நான் இருக்கின்ற சிரமத்தைப் பற்றிச் சொல்கிறேன். நான் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்தில் மட்டுமல்ல, நமக்குப் பொதுவாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய மின்சாரம் எவ்வளவு அவசியத் தேவை என்பதைச் சொல்கிறேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதனைக் கொஞ்சம் கவனித்தாரென்றால், தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்ற முறையில் நான் அவரை பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதால், நானும் பேச வேண்டியிருக்கிறது. பஞ்சாலை மில்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டு சொன்னதாக நானும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் வைத்த கோரிக்கைக்குதான் நான் பதில் சொன்னேன் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். "தூங்குகிறவனை எழுப்ப முடியும், தூங்குவது போன்று நடிக்கிறவனை எப்படி எழுப்ப முடியும்." மின் பற்றாக்குறைக்குக் காரணமாக இருக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளைப் பற்றிக் கூறிய பிறகும், திரும்பத் திரும்ப மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் எப்படி? அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரம் இல்லாததால் தூக்கமே வருவதில்லை; அந்த உண்மையை வெளியிலே நான் எங்கு சொல்ல முடியும்; அவ்வளவு புழுக்கமாக இருக்கிறது; இருந்தாலும் பரவாயில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பொறுமையாக என்னுடைய கருத்தை மட்டும் கேட்க வேண்டுமென்று சொல்லி, ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது பஞ்சாலைகளில் டீசலைப் பயன்படுத்தி 1 யூனிட் 17 ரூபாய் என்ற அளவில் மின்சாரம் தயார் செய்கிறார்கள். இதனால், நூல் விலை கூடுகிறது; அந்த நூலை அடிப்படையாகக் கொண்ட உபதொழில்கள் கடுமையாக பாதிப்படைகின்றன. எனவே, உபதொழில் செய்பவர்கள் நூல் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டால், எங்களால் நூல் விலையைக் குறைக்க முடியாது, மின்சார விநியோகம் இல்லை; நாங்கள் 17 ரூபாய் வரை செலவு செய்கிறோம் என்று திண்டுக்கல், கோயம்புத்தூர் மாவட்டங்களிலுள்ள பஞ்சாலை நிறுவனர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஒரு யூனிட்டுக்கு 10 பைசா என்று அரசு வரி போடுகிறது. அதையாவது கொஞ்சம் குறைக்கச் சொல்லுங்கள். மானியம் கொடுக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, அந்த 10 பைசா வரி என்பதையாவது குறைக்கச் சொல்லுங்கள். நாங்கள் காற்றாலை மூலமாக மின்சாரம் தயாரித்துக்கொண்டிருக்கிறோம். அதையும் நாங்கள் அரசுக்குக் கொடுக்கிறோம். அதற்குரிய payment 18 மாதங்களானாலும்



கொடுக்கப்படுவதில்லை, அதையாவது கொடுக்கச் சொல்லுங்கள். அதற்கும் 10 பைசா எங்களுக்கு வரி விதிக்கிறார்கள், இதையாவது குறைக்கச் சொல்லுங்கள் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேற்படி கோரிக்கைகளை நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்று ஒரு யூனிட்டுக்கு 10 பைசா என்று வசூலிக்கக் கூடிய அந்த செலவையாவது ஏற்பதற்கு முன்வர வேண்டும் என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–25

அதேபோன்றுதான், சிறப்புப் பொருளாதார மண்டல தொழில்களுக்காக வேளாண் விளை நிலங்களைக் கையகப்படுத்த மாட்டோம் என்று அரசு கடந்த காலங்களிலே கூறியது. அதில் சிவரக்கோட்டை விவசாயிகள், அவர்களுடைய விளை நிலங்களை, சிப்காட் தொழிலுக்கு எடுக்க இருப்பதைத் தொடர்ந்து மறுத்து வருகிறார்கள். மேலும், இது சம்பந்தமாக சட்டமன்றத்தில் 2 முறை நான் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையையும் நான் படித்துவிட்டுத்தான் இப்பொழுது நிற்கிறேன். திரு. ஆறுமுகம் அவர்கள் அந்த நிலத்தில் என்னென்ன விளைகிறது என்று கொண்டுவந்திருக்கிறார். நான் கொண்டுவரவில்லை. ஆகவே, அந்த சிவரக்கோட்டை விவசாயிகளின் விளை நிலங்களை எடுக்காமல் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மனிதன் வாழ்வதற்கு ஆக்சிஜன் தேவை என்று சொன்னார்கள். தமிழகத்தில் சுத்தமான ஆக்சிஜன் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக நான் தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேசுகின்றேன், மின் துறை அமைச்சர் பதில் சொல்கிறார் என்று சொன்னார். அவர் கேட்டதெல்லாம் எனக்கேகூட சந்தேகமாகப் போய்விட்டது.

தொழில் துறையில் பேசுகின்றாரா, மின்சாரத் துறையில் பேசுகின்றாரா என்ற அளவிற்கு மின்சாரத் துறையைப் பற்றி கேட்டுக்கொண்டிருந்தார்கள். நான் குற்றமாகச் சொல்லவில்லை. அதற்காகத்தான் அவர் பதில் சொன்னார் என்பதைச் சொல்கின்றேன்.

மூன்றாவதாக, இப்போது சிவரக்கோட்டை நிலத்தைக் கையகப்படுத்துவதைப் பற்றிக் கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே நாங்கள் சொன்னதைப் போல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக விளை நிலங்களைக் கையகப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், அதில் இருக்கின்ற ஒரு தகவலை மட்டும் இப்பொழுது உங்களிடத்திலே பகிர்ந்துகொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றையதினம் தொழில் மானியக் கோரிக்கை வருகின்றது என்பதற்காக மாவட்ட ஆட்சியரிடத்திலே நேற்றையதினம், ஒரு அறிக்கையைக் கேட்டிருந்தோம். அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கை என் கையிலே இருக்கின்றது. மாவட்ட ஆட்சியர் என்னிடத்திலே சொன்னது 20 பேர் மட்டும்தான் அந்த நிலம் கொடுப்பதற்கு எதிர்க்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாம் நிலத்தை எடுத்துக்கொண்டு எங்களுக்கு இன்னும் விலையைக் கூடுதலாகக் கொடுங்கள் என்று கேட்டிருக்கின்றார்கள் என்று அந்தக் கையொப்பத்தோடு எனக்குக் கடிதங்களை அனுப்பி இருக்கின்றார். அதற்காக நான் குறை சொல்லவில்லை. இருந்தாலும். மாவட்ட ஆட்சியரிடத்திலே நாங்கள் சொல்லி, 23 ஆம் தேதியன்றும், 30 ஆம் தேதியன்றும் அதற்காக மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற தேதி குறித்திருக்கின்றார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அது விளை நிலமாக இருந்தால், மாவட்ட ஆட்சியரிடத்திலே அதைச் சொன்னால் நாங்கள் அதை கையகப்படுத்த மாட்டோம். உங்களுடைய குறைகளை மாவட்ட ஆட்சியரிடத்திலே சொல்லுங்கள். நாங்களும் கவனித்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. தொழில் மானியக் கோரிக்கையின் மீதுதான் பேசுகிறேன்



என்பதை மீண்டும் தெரிவித்துக்கொண்டு, Ford, Hyundai, Nissan, BMW, Nokia போன்ற வெளிநாட்டினுடைய பல்வேறு கம்பெனிகள் சென்னைக்கு அருகில் இருக்கின்றன. 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கிறது. 1½ இலட்சம் பேருக்கு வேலை கொடுக்கிறார்கள். ஆனால் தென்மாவட்டங்களில் மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக எப்பொழுது நினைத்தாலும் தொழிலாளிகளை வேலையைவிட்டு நீக்கிவிடுகிறார்கள். ஆகவே, தென் மாவட்டங்களிலும், மேற்கு மாவட்டங்களிலும் இந்த அளவிற்கு 24 மணி நேரமும் வேலையைக் கொடுக்கக்கூடிய இந்தத் தொழில்கள் மின் பற்றாக்குறையால் பாதிப்படைந்திருப்பதால், 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகள் வேலையை இழந்து, தொழிலை இழந்து கொண்டிருக்கிறார்களே, இதிலே ஏன் பாரபட்சம் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மட்டுமல்ல, மாநிலத்திலே எங்கேயும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு தொழிற்சாலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தால், தடையில்லாத மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதுதான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு அடிப்படை நிபந்தனை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் இந்த ஒருதலைப்பட்சமான முடிவு என்று கேட்கின்றார்கள். இந்தத் தொழிற்சாலையை நம்பிதான் சிறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட இதிலே 1 இலட்சம் ரூபாய் முதலீடு என்று சொன்னால், 5 இலட்சம் ரூபாய்க்கு சிறு தொழில்கள் வருகின்ற அளவுக்குதான் தமிழகத்தில் தொழிற்சாலைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகள் வளர்வதற்கு அதனுடன் தொடர்புடைய ancillary Units தொடங்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறு தொழில்களும் வளரும். ஒவ்வொரு கம்பெனிக்கும் ancillary units தொடங்க சிப்காட் நிறுவனமே இடம் கொடுத்து, அதற்காக நீங்கள் அங்கே கட்டடத்தைக் கட்டி தொழிற்சாலையை ஆரம்பியுங்கள் என்று நாங்கள் ஊக்குவித்துக்கொண்டிருக்கின்றோம். இந்த நிலைமையில் கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் ஏற்பட்ட மின்சாரத் தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு அம்மா அவர்கள்

பலமுறை சொல்லி இருக்கின்றார்கள். கூடிய விரைவிலே வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து மின் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும் என்று சொல்லி இருக்கிறார்கள். மண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கவலைப்படுவதைவிட மாண்புமிகு அம்மா அவர்களும் இதில் அக்கறை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது உங்களுக்கும் நன்றாகத் தெரியும். ஏன் நாங்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறோம் என்றால், மின்சாரப் பிரச்சினைக்கு நாம் உடனடியாகத் தீர்வு காண முடியாது. உடனடியாகத் தீர்வு காணக்கூடிய பிரச்சினை அல்ல. ஆனால், படிப்படியாக மின்சார உற்பத்தி அதிகமாகிக்கொண்டு இருக்கின்றது. மின்சாரம் முழுமையாக வருவதற்கு முன்னால், உங்களுக்கு இப்போது தடையில்லாத மின்சாரம் தருகிறோம் என்று சொன்னால், யாரும் இங்கு தொழில் தொடங்க வரமாட்டார்கள்.

பிற்பகல் *1–30*

இன்றையதினம் தமிழகத்தில் தொழில் தொடங்க வரவேண்டும் என்று சொன்னால் மற்ற மாநிலங்கள் எல்லாம் போட்டி போட்டுக்கொண்டு இருக்கின்றன. தனியார் துறையில்கூட இந்த அளவு போட்டியிருக்காது. பக்கத்தில் உள்ள ஆந்திராவில் பார்த்தீர்கள் என்றால், ஒரு ஏக்கர் ஒரு ரூபாய்க்கு தருகிறோம், இங்கு தொழில் தொடங்க வாருங்கள் என்று சொல்லி திருவள்ளூர் மாவட்டத்தின் அருகிலுள்ள ஸ்ரீசிட்டி என்ற இடத்திற்கு அழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். கர்நாடகாவில் உள்ள பெங்களூருவில் அழைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இதுகாறும் இல்லாத அளவில் கேரளாவில், அவர்களும் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அளவிற்கு போட்டி நிறைந்துள்ள உலகத்தில், நாமும் அவர்களை ஓரளவாவது அனுசரித்துக்கொண்டு போக வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இருந்தாலும், அவர்களுக்காக கொடுக்க வேண்டிய சூழ்நிலையில்தான் நாம் சில சலுகைகளைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறு தொழில்கள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு உண்மையை தெரிந்துகொள்ள வேண்டும். ஏதோ பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும் தடையில்லா மின்சாரம் அரசு கொடுத்து வருவதாகச் சொன்னார். வெறும் *237* மெகா வாட்தான். அதாவது, இரண்டரை சதவிகிதம் மட்டும்தான், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் சொன்னதுபோல, அனுமதி கொடுத்தது *240* மெகா வாட், ஆனால் கடந்த ஆண்டு வரை அவர்கள் பயன்படுத்தியது *160* மெகா வாட் மின்சாரம் மட்டும்தான். அதாவது *160* மெகா வாட் அளவு என்பது கிட்டதட்ட ஒன்றரை சதவிகிதம் மட்டும்தான். இதனால் மின்சார வாரியத்திற்கு எந்தவிதத்திலும் பாதிப்பு இல்லை. இவர்களுக்கு கொடுக்கும் மின்சாரத்தை நிறுத்தினால் மேற்கு மாவட்டங்களுக்கோ அல்லது தென் மாவட்டங்களுக்கோ அதிக நேரம் மின்சாரம் கொடுக்க முடியும் என்ற கருத்து தவறான கருத்து என்பதை இந்த நேரத்தில் பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம், பல மணி நேரம் வேலை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது பன்னாட்டு நிறுவனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களை அவர்கள் இஷ்டப்பட்ட நேரத்தில் விலக்கி விடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மைக்குப் புறம்பான கருத்தாகும். அப்படி யாரையும் விலக்கவுமில்லை, அப்படிப்பட்ட தொழில் தாவா எதுவும் இல்லை, அப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இருக்கிறது என்பதைத் தெளிவாக, அழுத்தமாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் சீக்கிரம் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரி கோரிக்கை மட்டும்தான் சொல்கிறேன். தொழிலாளர்களுக்கு குறைந்த ஊதியம், பல மணி நேரம் உழைப்புச் சுரண்டல், . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல், பன்னாட்டு கம்பெனிகளாக இருந்தாலும், உள்நாட்டு கம்பெனிகளாக இருந்தாலும், புரிந்துணர்வு ஒப்பந்தம் போடும் போதே 1,000, 2,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிறோம் என்று அவர்கள் எழுத்துப்பூர்வமாக கடிதம் கொடுத்து இருக்கின்றார்கள். அதில் ஏதாவது பிரச்சினை என்று சொன்னால், அரசு என்னென்ன சலுகைகள் தருகின்றதோ அவை ரத்தாகிவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தொழிற் சங்க நடவடிக்கைகள் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** தொழிற்சங்க நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள குறைந்தபட்ச அம்சங்களைக்கூட நிறைவேற்றாத சூழ்நிலைதான் இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வரக்கூடிய இந்தத் தொழில் நிறுவனங்களை, நாம் எதிர்க்கவில்லை, ஆனால் மாநில அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைக்கூட அவர்கள் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியென்றால் தடையில்லா மின்சாரமும் வழங்கி, வரியும் கட்டாமல் இவ்வளவு சலுகைகள் அவர்களுக்கு ஏகமாக கொடுப்பதைப் பார்த்தால் மற்ற மாவட்டங்களில் தொழில் செய்பவர்களைப் பார்க்கும்போது, அவர்களிடமிருந்து பேச்சு வாங்க முடியவில்லை. சட்டமன்றத்திற்கு எதற்குப் போகிறீர்கள், கேளுங்கள், கேளுங்கள் என்று கேட்கிறார்கள். . . (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது வரி கூட கட்டவில்லை என்று சொல்கின்றார்கள். அங்கு சிறு தொழில் தொடங்கப்படுகின்றபோது, உள்நாட்டு வரி என்று சொல்லக்கூடிய அந்த வரி அரசுக்கு வருமானமாக வந்து கொண்டிருக்கிறது. VAT வரி விலக்கு கொடுக்கக்கூடிய காரணத்தினால்தான் பன்னாட்டு கம்பெனிகள் இங்கு வருகின்றன. ஏதோ பன்னாட்டு கம்பெனிகளுக்கு மட்டுமே இந்தச் சலுகை தரப்படுவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். கடந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நமது தமிழகத்தைச் சேர்ந்த டி.வி.எஸ். கம்பெனி போன்ற நான்கைந்து நிறுவனங்கள் கையெழுத்து போட்டிருக்கின்றன. இதைத்தான் நான் பலமுறை சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஏதோ பன்னாட்டு நிறுவனங்களுக்கு மட்டும்தான் சலுகை அளிக்கிறோம் என்று கூறுவதை தயவுசெய்து மறந்துவிடுங்கள். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ரூ.350 கோடிக்கு யாரெல்லாம் முதலீடு செய்கிறார்களோ அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் உண்டு, அதேபோல் வெளி மாவட்டங்களில் ரூ.250 கோடி ரூபாய்க்கு யாரெல்லாம் முதலீடு செய்கின்றார்களோ அவர்களுக்கும் இந்தச் சலுகைகள் உண்டு என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

பிற்பகல் 1–35

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்களே, தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிப்பதில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது முக்கிய நிபந்தனையாக இருக்க வேண்டும். புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கை சட்டப்படியான முறையில் அமைய வேண்டும். கட்டடம் கட்டும்போது விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். அதேபோன்று சேதுசமுத்திரத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முன்வர வேண்டும். குமரி மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். நாகை மாவட்டத்தில் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். சிமெண்ட் காகிதத் தொழிற்சாலைகளைக் கூடுதலாக அரசு உருவாக்கிக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். அதேபோன்று, திண்டுக்கல் மாவட்டத்தில் தோல் ஷாப்புகளை விரிவுபடுத்தி அங்கு தோல்மூலமாக உப பொருட்கள் தயார் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். அதேபோன்று, நம்முடைய மதுரை, மேலூர் அருகே இருக்கக்கூடிய *(மணியடிக்கப்பெற்றது)* கிரானைட் கற்குவாரிகளை நம்முடைய அரசே ஏற்று அந்தத் தொழிலை நடத்துவதற்கு முன்வர வேண்டும். Tamin மூலமாக குவாரிகள் வைத்து இன்றைக்கு அரசு அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருந்தாலும், . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இலட்சம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இலாபம் தரக்கூடிய மிகப் பெரிய இயற்கை வளம் நிறைந்த ஒரு தொழில். ஆகவே, இந்த கிரானைட் கற்களை தமிழக அரசே எடுத்து அத்தொழிலை நடத்தினால் அது அங்கிருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, இத்துடன் உரையை முடித்துவிடுங்கள். நீங்கள் இன்னும் நிறைய பக்கங்கள் வைத்திருக்கிறீர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, இயற்கையினுடைய செல்வங்களான கார்னெட் மணல், பவளப் பாறைக்குப் போய்விட்டு கடற்கரைக்கு வருவதற்குள் இந்த மணலினுடைய ஆற்றல் இருக்கிறதே, சக்தி இருக்கிறதே அது உலகத்திலேயே எங்குமே கிடைக்காதது. தமிழ்நாட்டில் இருப்பது அற்புதமான மணல். ஆகவே, அத்தகைய



மணலை நேரடியாக அரசே எடுப்பதற்கு, அதை சிலிக்கான் தயார் பண்ணும் தொழிலுக்குப் பயன்படுத்துவதற்கு முன்வர வேண்டும். அதேபோன்று, நம்முடைய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று தொழில், தொழில் என்று அலறிக் கொண்டிருக்கிறார். ஆனால், சிவகங்கையில் பூமிக்கடியில் இருக்கக்கூடிய இயற்கை வளம் கிராஃபைட் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலையை உருவாக்குவதற்கு மத்திய அரசுதான் முன்வரவில்லை. மாநில அரசு அதுபோன்ற இயற்கை வளங்களை, இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்தி அவற்றைத் தொழிலிலே கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சிறப்புப் பொருளாதார மண்டல தொழில்களுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சலுகைகள் சரியானது என்று சொன்னாலும், விவசாயிகளுடைய விளை நிலங்கள் பாதிக்கப்படாத அளவிற்கு அந்தக் கோரிக்கையை முன் நிறுத்த வேண்டுமென்ற முறையிலே விவசாயிகளினுடைய நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு முன்பு விவசாயிகளோடு கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அவர்களுடைய விளை நிலங்களுக்குப் பாதிப்பில்லாமல் நம்முடைய அந்த நில வங்கியை உருவாக்க வேண்டும். ஆகவே, விளை நிலங்களுக்கும் வேளாண் நிலங்களுக்கும் பாதிப்பில்லாத வகையில், அத்தகைய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட வேண்டும். அங்கு தமிழகத்தினுடைய உழைப்பாளி மக்களுக்கு, நிலமற்றவர்களுக்கு அல்லது வேலையற்றவர்களுக்கு வேலைகளைக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள். *(குறுக்கீடு)* செல்வி கே. பாலபாரதி, நீங்கள் பேசுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகமயக் கொள்கையின்மூலமாக தொழில்கள் பெருகுகிற மாதிரி தெரியும். ஆனால், அது ஒரு ஊதிய பலூன். ஒரு சிறிய ஊசிபட்டால்கூட பலூன் வெடித்துவிடும். அதுதான் இன்றைக்கு உலகத்தினுடைய தொழில் நெருக்கடியை, பொருளாதார நெருக்கடியை அமெரிக்காவையே தலைகுப்புற வீழ்த்திக் கொண்டிருக்கிறது. ஆகவே, நாம் இந்த வெளிநாட்டுக் கம்பெனிகளை நம்முடைய தேவைக்கு பயன்படுத்துகிறோம். தவறே கிடையாது. ஆனால், பாரம்பரியம் மிக்க தொழில்கள் மூலமாக

வேலைவாய்ப்பையும் உருவாக்குவதற்கு இந்தத் துறை திட்டமிட வேண்டுமென்ற முறையிலே கோரிக்கையை முன்வைத்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கிரானைட்டைப் பற்றி கருத்துகளைச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது அதில் நடைபெற்ற முறைகேடுகளைக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள். 84 குவாரிகளில் அதுபோன்ற முறைகேடுகள் நடைபெற்றது என்பதைக் கண்டறிந்து 72 குவாரிகளில் 71 குவாரிகளை சஸ்பெண்ட் செய்துவிட்டார்கள். ஒன்றை கேன்சல் செய்து இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, கிராஃபைட்டைப் பற்றிச் சொன்னார்கள். மத்திய அமைச்சர் இருக்கின்ற மாவட்டமாக இருக்கின்றது. அவர் எதுவும் செய்யவில்லை. மாநில அரசு அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலேயே தெளிவாக நாம் குறிப்பிட்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்தார்களா என்று தெரியவில்லை. புவனேஸ்வரில் இருக்கின்ற உலோக கனிம ஆராய்ச்சி மையத்தில் அறிக்கை கேட்டிருக்கின்றோம். அறிக்கை வந்ததற்குப் பின்னால் நிச்சயமாக அங்கு தொழிற்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சீக்கிரம் பேசி உரையை முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறதென்று சொன்னார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே கனிமத்தை வெட்டி எடுத்து சுத்திகரிப்பு செய்வதற்கான அறிவிப்புதான் இருக்கிறது. ஆனால், நாங்கள் கேட்பது அங்கே உப தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும். உப தொழில்கள் அங்கு வர வேண்டும். (குறுக்கீடு)



பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லி முடித்துவிடுகிறேன். உப தொழில்கள் தொடங்குவதற்கு முன்னோட்டமாக ஒரு கிராஃபைட் தொழில் பூங்கா துவங்க வேண்டும் என்று நாங்கள் பலமுறை கோரிக்கை வைத்திருக்கிறோம். அதையும் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். இன்னொன்று சிவரக்கோட்டை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பியிருக்கின்ற அறிக்கை கடந்தகால ஆட்சியில் அனுப்பப்பட்ட அறிக்கையினுடைய நகல். அது தவறானது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, எங்களது வேண்டுகோள் எல்லாம், தொழில் துறையினுடைய உயர் அதிகாரிகள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வுகளைச் செய்து, உண்மையான விவசாயிகள், பட்டாதாரர்களிடம் கருத்துகளைக் கேட்டு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அது விவசாய நிலம்தான். சிறு தானியங்கள் உற்பத்திக்கு முக்கியத்துவம் தரக்கூடிய தமிழக அரசு சிறு தானியங்கள் விளையக்கூடிய அந்தப் பகுதியில் நிலங்களை எடுக்கக்கூடாது. தேவையான அளவிற்கு எதிர்ப்புறத்திலேயே, பக்கத்திலேயே 5,000 ஏக்கர் தரிசு நிலம் இருக்கிறது. அதை எடுங்கள் என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி, அந்த கிராஃபைட்டைப் பொறுத்தவரை அதை வைத்து என்னென்ன உப தொழில்களைத் தொடங்கலாம் என்ற விரிவான அறிக்கையை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு புதிய தொழிற்சாலை அமைப்பது பற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவருடைய கருத்துகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல சிவரக்கோட்டையைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தில் நாங்கள் மாறுபட்டுச் சொல்லவில்லை. ஆனால், மாவட்ட ஆட்சியர் அவர்கள் 4–4–2013 அன்று கையெழுத்திட்டு

8–4–2013 அன்று அனுப்பிய கடிதம் என்னிடத்தில் இருக்கின்றது. அதற்காகத்தான் ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறோம். 23 ஆம் தேதி, 30 ஆம் தேதியன்று மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகின்றது. அந்தக் கூட்டத்தில் உங்களது கருத்துகளைச் சொல்லுங்கள். அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

***திரு. க. கோபால்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதிகை மலைத் தென்றலுக்கு முன் பிறந்தத் தமிழே, தொட்டதைத் துலங்க வைக்கும் தூய தலைவியே, பார்வையில் பட்டதை ஒளிரவைக்கும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒப்பற்றத் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) உலுக்கமுடியாத விண்மீனாய், எரிக்க முடியாத துருவ நட்சத்திரமாய், அணைக்க முடியாத தென்திசை தீபமாய், திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தலைவியாய், தடைக்கற்கள் தவிடுபொடியாக, தடுத்தவர்கள் வீழ்ச்சியுற, நாளைய பாரதத்தின் சிம்மாசனத்தில் அமர, சிங்கநடை போட்டுவரும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் சிங்கநிகர் தலைவியே, தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களின் பொற்பாதங்களை நன்றியோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்திய நாடாளுமன்ற மேலவையிலே, 23–4–1984 அன்று முதன்முறையாக உரை நிகழ்த்தியபோது, எதற்காக இந்த நாடாளுமன்ற மேலவைக்கு நான் வந்துள்ளேன், எந்த மக்களின் சார்பாக நான் இங்கு வந்துள்ளேன் என்று எடுத்துச்சொன்னார்கள். அதனுடைய சுருக்கம், I have come here as the representative of the weaker sections of our society, the toiling masses, the crores of humble workers–farmers, poor agricultural labourers and women–to give oral manifestation to their feelings, aspirations and legitimate desires and make them known to the rest of the country, என்று சொன்னார்கள். அதாவது சமூகத்தினுடைய அடித்தட்டு மக்கள், பாட்டாளி வர்க்கத்தினர் கோடிக்கணக்கான சாதாரண தொழிலாளர்கள், விவசாயிகள், வறிய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பெண்களின்



எண்ணங்களையும், பெரும் எதிர்பார்ப்புகளையும், நியாயமான உள்ளக்கிடக்கையையும் எனது உரையின்மூலம் வெளிப்படுத்தவும், நாட்டின் பிற பகுதி மக்களுக்கு எடுத்து இயம்பவும், அவர்களின் பிரதிநிதியாக நான் இங்கு வந்துள்ளேன் என்று சொன்னார்கள். அவர் சொன்னதைப்போல, பல சவால்களைச் சந்தித்து, எதிர்ப்புகளைத் துணிவுடன் எதிர்கொண்டுதான் தலைமை தாங்கிய இயக்கத்தையும், தமிழகத்தையும், தன்னலமற்ற தொண்டர்களையும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்ல, தடைக்கற்களை தவிடுபொடியாக்கி, தடுத்தவர்களை வேரோடும், வேரடி மண்ணோடும் சாய்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஓராயிரம் சந்திரோதயமாய் திராவிட வானில் ஒளிவீசி 1991–ல் தமிழகத்தின் மாட்சிமைமிகுந்த முதலமைச்சராகப் பொறுப்பேற்று இந்திய நாடாளுமன்ற மேலவையிலே தான் பேசியதை நிறைவேற்றிக் காட்டினார்கள்.

பிற்பகல் 1–45

எடுத்துக்காட்டாக, இந்தியாவில் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையை அமலுக்குக் கொண்டுவந்தபோது, இந்திய மாநிலங்களுக்கிடையே வெளிநாட்டு தொழில் முனைவோரை ஈர்ப்பதிலே பெரும் போட்டி ஏற்பட்டபொழுது, 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் துவக்கப்பட்டு, இந்தியாவில் முதன்முதலில், தமிழகத்திலே 'போர்டு கார் தொழிற்சாலை' சுமார் 1,700 கோடி ரூபாய் முதலீட்டிலே தொடங்கப்பட்டது. அந்தக் காலக்கட்டத்தில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம்தான் முதன்மையான மாநிலமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலமாக 'போர்டு' கார் தொழிற்சாலையில் 10,110 நபர்கள் நேரடியாக வேலைவாய்ப்பு பெற்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துரதிருஷ்டவசமாக 1996 இல் அமைந்த தி.மு.க. ஆட்சியில், 1996 முதல் 2001 வரை அன்னிய முதலீடு வெறும் 253.50 கோடி ரூபாய்தான் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞான செருக்கும்

கொண்ட பாரதியின் புதுமைப் பெண்ணாகிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டிலே தோல்விகளையே தோரணங்களாக்கி ஏமாற்றங்களையே ஏணிப்படிகளாக்கி, வேதனைகளையே வெற்றிப்படிகளாக்கி, சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, மீண்டும் தமிழக சாம்ராஜ்யத்தை, மக்களின் மகத்தான ஆதரவோடு அரசாள வந்த ஒரு விடியலின் எழுச்சியாய், எழுச்சியின் ஏற்றமாய், ஏற்றத்தின் தோற்றமாய் விளங்கும் எங்களின் எதிர்கால பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, கஜானா காலியாக இருந்த சூழ்நிலையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆற்றல்மிக்க தலைமை, அஞ்சாத மன உறுதி, தேர்ந்த நிர்வாகத் திறன், தெளிவான தொலைநோக்குப் பார்வை, திறன்மிகு அறிவாற்றல், விடா முயற்சி ஆகிய திறன்களை ஒருங்கே பெற்ற மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய கடும் முயற்சியால் நிருவாகத்தைச் சீர்செய்தமையால், இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தினுடைய அறிக்கையின்படி 2001 செப்டம்பரிலிருந்து 2006 மார்ச் வரை உற்பத்தித் துறையில் அகில இந்திய அளவிலே முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முதன்மையாகத் திகழ்ந்தது.

2005 இல் தமிழ்நாட்டிலே பொருளாதார வளர்ச்சி விகிதம் 13.95 சதவீதமாகவும், அந்தக் காலக்கட்டத்திலே உற்பத்தித் துறையினுடைய வளர்ச்சி 15.10 சதவீதமாகவும் உயர்ந்தது. மேலும், 6 வெளிநாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அதன்மூலமாக 2,534 கோடி ரூபாய் தமிழகத்திலே முதலீடு செய்யப்பட்டு, 18,068 நபர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பும், மறைமுகமாக பல நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடுமையான முயற்சிகளால் 2004–லே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் தொழில் துறையிலே முதலீடு பெறுவதில் முதன்மை மாநிலமாகப் பெயர்பெற்றது என்பது வரலாற்று உண்மையாகும்.

அதேபோல, ஆசியக் கண்டத்தினுடைய எதிர்காலம் பற்றி 2005–லே எப்.டி.ஐ. என்ற பைனான்சியல் டைம்ஸ் குழுவினுடைய பத்திரிகை, ஒரு ஆய்வு மேற்கொண்டபோது அயல்நாட்டு முதலீடுகளை ஈர்ப்பதிலே ஆசியாவிலேயே தமிழகம் ஒரு வெற்றி மாநிலம் என அறிவிப்புச் செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி)



ஆசியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தையும், ஆஸ்திரேலியாவில் உள்ள நியூ சௌத் வேல்ஸ் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது என்பதையும் அந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டியது.

தமிழ்நாடு மற்ற மாநிலங்களையும் இதர ஆசிய நாடுகளிலுள்ள பகுதிகளையும் முந்திக்கொண்டு இந்த வெற்றியைப் பெற்றது. இதற்கு 2001–2006 இல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவாற்றல் காரணமாக, தொலைநோக்குப் பார்வை காரணமாக, இந்த மாபெரும் சரித்திரச் சாதனையை தமிழக தொழில் துறையிலே நிகழ்த்திக் காட்டினார்கள். அதனால்தான் 2001–2006 மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தை தொழில் துறையிலே தமிழகத்தின் பொற்காலம் என்று தொழில் முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனை அல்லவா?

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

‘அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு’

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் வேந்தர்களின் நான்கு நற்குணங்கள் என்று விளக்கப்பட்ட, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய 4 குணங்களின் உறைவிடமாகவும், அளவற்ற கருணையின் திருவுருவமாகவும், திகழும் ஒப்பற்ற சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் 2001 முதல் 2006 வரை தமிழகத்திலே தொழில் துறையிலே நல்லதொரு அடித்தளம் அமைத்தார்கள். ஆனால், காலத்தின் கோலத்தால் 2006 இல் தமிழகம் தீய சக்திகளிடம் சிறைபட்டவுடன் இந்தியப் பொருளாதார மையத்தினுடைய அறிக்கையின்படி உற்பத்தித் துறையிலே, 2001 முதல் 2006 வரை இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருந்த தமிழகம் 2007 ஆம் ஆண்டு டிசம்பரில் 5-வது இடத்திற்கும் 2008 டிசம்பரில் 6-வது இடத்திற்கும் தள்ளப்பட்டது. இந்த சரிந்த நிலை 2011 மார்ச் வரை நீடித்தது. அதேபோல் 2004 இல் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருந்த தமிழகம் 2011 மார்ச் மாதத்தில் 7-வது இடத்திற்குத் தள்ளப்பட்டது. 2006 முதல்

2011 வரை தமிழகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்ட பல அயல்நாட்டு நிறுவனங்கள், மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேடுகள் காரணமாக, தமிழகத்தை விட்டே வெளியேறிவிட்டன. இதை தமிழகத் தொழில் துறை வரலாற்றில் 2006–2011 இருண்ட காலம் எனத் தொழில் முதலீட்டாளர்கள் கூறுகின்றனர்.

“தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மம் வெல்லும்” என்பதற்கேற்ப 2011 இல் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் மக்களின் மகத்தான ஆதரவோடு மூன்றாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றபின், சட்டமன்றத்தில் தொழில் துறையில் தமிழகத்தை முன்னெடுத்து செல்வதற்கான வழிமுறைகளை தன்னுடைய உரையில் மிகச் சிறப்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அந்த உரையினுடைய சுருக்கத்தை இந்த இடத்திலே சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். ‘We aim to make it a Global Hub for Automobile manufacture and Auto Components Manufacture’ என்று மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 இல் முதல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தபோது சொன்னார்கள். அதாவது “வாகனம் மற்றும் வாகன உதிரிபாக உற்பத்தியில் தமிழகத்தை உலகத்தின் மிக முக்கிய மையப் பகுதியாக ஆக்குவது எங்களுடைய இலட்சியமாகும் என்று சொன்னார்கள். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய 23 மாத கால ஆட்சியில் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அதன்மூலமாக 26,625 கோடி ரூபாய் முதலீடு பெறப்பட்டு, நேரடியாக 46,385 நபர்களுக்கும், மறைமுகமாக ஒரு இலட்சம் நபர்களுக்கும், வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டது. இது தமிழக தொழில் துறையினுடைய ஏற்றமிகு பொற்காலம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் சீர்மிகு நல்லாட்சி நடைபெற்ற பொற்காலங்களில்தான் பல வெளிநாட்டு நிறுவனங்கள் எல்லாம் தமிழகத்தில் முதலீடு செய்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதிலே ஒரு சில நிறுவனங்களைப் பார்த்தால் Ford, Hyundai, Saint Gobain, Nokia, Foxcon, Flextronics, Daimler Hero Commercial Vehicles Ltd, BMW, Del Computers, Motorola, Toshiba JSW இவை அனைத்தும் Fortune 500 நிறுவனங்கள் ஆகும்.



மேற்காணும் முதலீடுகள் மூலமாக, தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 13.8 இலட்சம் கார்கள், 3.61 இலட்சம் வணிக வாகனங்கள் இது தவிர, இரண்டு சக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் இப்படி மிகப் பெரிய ஆட்டோமொபைல் தொழிற்சாலையைத் தமிழகத்திலே நிறுவி சாதனை படைத்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள உலக பொருளாதாரச் சூழ்நிலையில், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே மிகுந்த வளம் செழிக்கும் முன்னணி மாநிலமாக மாற்றிட, தொலைநோக்குப் பார்வையும், குறிப்பிட்ட இலக்கை நோக்கமாகக் கொண்டு செயல்படும் வழிமுறையும், அரசுக்குத் தேவை என்ற சவாலினை எதிர்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2023 ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்தவேண்டிய தெளிவான இலக்குகளை வகுத்து, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ தீட்டி மார்ச் 2012 இல் வெளியிட்டார்கள். “மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்னும் கூற்றை மெய்ப்பித்த மாதர் குல மாணிக்கம், கருணையின் பிறப்பிடம் (மேசையைத் தட்டும் ஒலி) நித்தமும் உலகத் தமிழ் மக்கள் வணங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொருளாதார வளர்ச்சியை வேகம் அடையச் செய்யும் விதமாக பெரும் மாற்றங்களை ஏற்படுத்தவும் 15 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முக்கிய கட்டமைப்பு திட்டங்களில் முதலீடு தேவை எனத் தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ வகுத்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தைப் பற்றிக் கூறும்போது, ‘ஆசிய கண்டத்திலே முதலீடு செய்யத் தகுதியான மூன்று இடங்களில் தமிழகம் ஒன்றாகவும், இந்தியாவில் முதலீடு செய்வதில் தமிழகம் முதன்மை மாநிலமாகவும், விளங்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தை வகுத்துள்ளேன் என்றும், இது எனது கனவுத் திட்டம்’ என்றும், பெருமையோடும் பூரிப்போடும் தெரிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோல மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் இந்தியாவிலேயே மிகப் பெரிய துறைமுக

வசதியுடன் கூடிய கப்பல் கட்டும் தளம் எண்ணூரை அடுத்த காட்டுப்பள்ளியில் 30–1–2013 அன்று 3,375 கோடி ரூபாய் முதலீட்டில் துவக்கி வைக்கப்பட்டது. இது TIDCO & L&T நிறுவனங்களுடைய கூட்டு முயற்சியில் தொடங்கப்பட்டதாகும். இதுபோல மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைய திட்டங்கள் தீட்டிவந்தாலும், தொழில் துறையிலே தமிழகத்தை வெற்றியை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கும் தன்னுடைய வெற்றியின் இரகசியத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன ஒரு கருத்தை மட்டும் இந்த இடத்திலே சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18–4–2012 அன்று Daimler Company–யினுடைய திறப்பு விழாவில் மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய வெற்றியைப் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள்.

பிற்பகல் 1–55

‘எனது இலக்கு நோக்கி, என்னை வழிநடத்திச் செல்லும் இரகசியம் குறித்து உங்களிடம் கூற விரும்புகிறேன். எனது மன உறுதியில்தான் எனது வலிமை குடிகொண்டுள்ளது. கனவும், விடா முயற்சியும் என்னகத்தே இரண்டாகக் கலந்துள்ளன. என்னைக் காக்கும் இந்தக் கேடயங்கள், எனது இன்னல்களை அடியோடு அகற்றுகின்றன. தடைகளைத் தகர்க்கின்றன. இந்த இரகசியம் எனக்கு, பலன் தருகின்றது என்பது உண்மை. சவால்கள் இல்லாத வெற்றியோ, தகர்க்கப்பட வேண்டிய தடைகளோ, எட்ட வேண்டிய இலக்குகளோ இல்லாத வாழ்க்கையில் நான் மனநிறைவு அடைந்ததில்லை. மனித குலத்தின் வெற்றி தானாக நிகழ்ந்துவிடுவதும் அல்ல. தவிர்க்க முடியாததும் அல்ல. இலக்கை நோக்கிய பயணத்தின் ஒவ்வொரு அடியும், தியாகம், துயரம் மற்றும் போராட்டம் நிறைந்ததே, மனித குலத்தை உயர்த்தும், கண்ணியமான முக்கியமான பணியை நிறைவேற்ற மிகக் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது’ என்று மாண்புமிகு அம்மா அவர்கள் மிக அற்புதமாக அந்த இடத்திலே சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இறுதியாக ஒன்றைச் சொல்லி, வானம்கூட மழையை சிந்துவதற்கு ஈரக் காற்றைக் கேட்கும், வண்ண தீபம்கூட ஒளியைப் பரப்புவதற்கு எண்ணையைக் கேட்கும், நிலவுகூட ஒளியைப் பொழிய



விடுமுறையைக் கேட்கும், ஆனால், தாயே, தமிழக மக்களுடைய நலனுக்காக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழக தொழில் துறையிலும், தொழில் முதலீட்டாளர்களின் வாழ்விலும் வெளிச்ச ரேகைகளைத் தந்துகொண்டிருக்கின்ற இந்தியத் திருநாட்டினுடைய தென்திசை தீபமே, தமிழக மக்களினுடைய வாழ்வில் வசந்தத்தையும் தென்றலையும் தந்துகொண்டிருக்கின்ற பொதிகை மலைத் தென்றலின் பொன்மனத் தலைவியே தமிழக மக்கள் நன்றியோடு நாடாளுமன்றத் தேர்தலில் தங்களது விசுவாசத்தை “நாற்பதும் நமதே” என வெளிப்படுத்தக் காத்திருக்கின்றார்கள் எனக் கூறி நன்றி தெரிவித்து அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை சம்பந்தமான கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக சில கருத்துக்களை இந்த அவையிலே பதிவு செய்வதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியினைச் சொல்லி, 2013–2014ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் நிலையான தொழில் வளர்ச்சியின் காரணமாக பொருளாதார முன்னேற்றத்தில் தமிழ்நாடு எப்போதும் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பது சரியானதே.

விவசாயத்தை அடுத்து நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு ஆதாரமாக இருப்பது தொழில் துறை. தமிழ்நாட்டில் தொழில் துறை மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும் அரசின் உதவிகள், தகுந்த நேரத்தில் தொழில் துவங்கும்போது தொழில் முனைவோர்களுக்குக் கிடைத்தால் தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெறும் என்பது நிச்சயம். தொழில் துவங்க முன்வரும்போது அவர்கள் பல இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது. நிதி நிறுவனங்களின்மூலம் அவர்கள் முறையாகக் கடனுதவி பெற்றிருந்தாலும், குறிப்பிட்ட கால அவகாசத்தில் அவர்கள் தொழில் துவங்க முடிவதில்லை. குறிப்பாகக் கட்டடம் கட்ட அனுமதி, நில உபயோக மாற்றம், மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சம்மதம், உள்ளூரிலுள்ள இது சம்பந்தமான அலுவலகங்கள், அவர்களது விண்ணப்பத்தைத் தலைமை அலுவலகத்துக்கு

மாற்றுவதால் ஏற்படும் காலதாமதம், உரிமமோ அல்லது அனுமதியோ வழங்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை. தற்போது மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கிவரும் ஒற்றைச் சாளர முறை (SINGLE WINDOW SYSTEM) நில உபயோக மாற்றம் மற்றும் கட்டடம் கட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் இல்லாத காரணத்தாலேயே இது காலதாமதமாகிறது. எனவே, தொழில் துவங்கத் தேவைப்படும் எல்லா அனுமதிகளையும் கொடுக்கும் அதிகாரத்தை அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கும் ஒற்றைச் சாளர முறை முடிவிற்கே (SINGLE WINDOW SYSTEM) அளிக்கப்பட்டால் தொழில் முனைவோரின் தொழில் சிரமம் குறையும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது புதிய தொழில்கள் தொடங்கப்படுவதற்கு பல்வேறு நிலைகளிலே கஷ்டங்கள் இருக்கின்றன; அது ஒரே இடத்திலே இருக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைச் சொன்னார்கள்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டே இதற்காக வழிகாட்டுதல் மையம் 'Guidance Bureau' என்ற ஒரு நிறுவனத்தை நிறுவி, அதன் வாயிலாக அங்கு அணுகினால் Single Window System–மூலமாக அங்கேயே permission வாங்கிக் கொடுத்துவிடுவார்கள் என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இந்த விவரங்கள் உள்ளன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 26,625 கோடி ரூபாய் அளவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது போக மீதி 2,700 கோடி ரூபாய் அளவுக்குப் அந்த Single Window System–த்தின் வாயிலாக அவர்கள் அனுமதி பெற்றிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அப்படி யாராவது தொழில்முனைவோர்கள் அங்கே தடுமாறுவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம் வழிகாட்டி மையத்திற்கு அனுப்பி வையுங்கள். நிச்சயமாக அதற்கு நாங்கள் அனுமதி வாங்கிக் கொடுக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தொழில் முனைவோரின் சிரமமும் குறையும், தொழில் வளர்ச்சியும் ஏற்படும். தற்போது மின் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. நான் இதைச் சொல்கின்றபோது தயவுசெய்து யாரும் தவறாக நினைக்க வேண்டாம். இதை நான் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. இருக்கக்கூடிய யதார்த்த நிலையைச் சொல்கிறேன். தற்போது மின் பற்றாக்குறையால் தமிழகத்தில் தொழில்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம். இதற்கு மாற்று ஏற்பாடாக டீசல் ஜெனரேட்டர்களை வைத்து மின் பற்றாக்குறையை ஓரளவு சரிசெய்யலாம். ஆனால், டீசல் ஜெனரேட்டர்கள்மூலம் மின்சாரம் அளிக்கும்போது யூனிட்–க்கு ரூ.16 முதல் ரூ.18 வரை செலவாகிறது. இதனால் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை சரிகட்ட டீசலுக்கு மானியம் மூலமாகவோ அல்லது வாட் வரிச் சலுகை மூலமாகவோ உதவி செய்யலாம். தமிழகத்தில் விளைநிலங்கள், குடியிருப்புப் பகுதிகள், மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் மற்றும் பொது மக்களின் உபயோகத்திலிருக்கும் எல்லாக் கட்டடங்களுக்கும் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் உள்ள நீர்ப்பாசன வசதி இல்லாத விவசாயத்திற்கு ஏற்றதாக இல்லாத வறண்ட எல்லா தரிசு நிலங்களையும் தொழில் பகுதி நிலங்கள் என அரசு அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். முன்னதாக அரசு ஆணை எண் எம்.எஸ். 169, நாள் 12–9–1966 இல் தொழில்முனைவோர் அதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து, அதற்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம், விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான உறுதி அளித்தால் அவர்கள் தொழிற்சாலைகள் அமைத்து எந்த அனுமதிக்கும் காத்திருக்காமல், காலதாமதமின்றி தொழில் தொடங்கலாம் என்ற விதிமுறை

இருந்தது. நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இன்படி தொழில்முனைவோர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளதால் நில உபயோக மாற்றம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எரி உலை எண்ணெய்க்கு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 2006, முதலாம் அட்டவணை, பகுதி பி, வரிசை எண் 67–ஏ-ன்படி 5 சதவிகித வரி விதிக்கப்பட்டு வந்தது. உயரழுத்தத் தொழிற்சாலைகளின் சொந்தப் பயனுக்காக மின்னாக்கிகள்மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு எரிபொருளாகத் தேவைப்படும் எரி உலை எண்ணெய்க்கு பல்வேறு காலக்கட்டங்களில் மதிப்புக் கூட்டு வரி செலுத்துவதிலிருந்து முழுவதுமாக வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. தொழில் முனைவோர்கள் மின்னாக்கிகள்மூலம் கூடுதல் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதன்மூலம் கூடுதல் உற்பத்தி மற்றும் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஏற்பட வழிவகை ஏற்படும் வகையில், எரி உலைக்கு 1–2–2012 முதல் 30–9–2012 வரை மதிப்புக் கூட்டு வரியிலிருந்து முழு விலக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைப்படி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1–10–2012 முதல் முன் தேதியிட்டு 31–5–2013 வரை இந்த வரி விலக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், அரசுக்கு 97 கோடி ரூபாய் வரி இழப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, தொழில் முனைவோருக்குத் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் generator sets-க்கு இதற்கு முன்பு 14.5 சதவிகிதம் வாட் வரி விதிக்கப்பட்டு வந்தது. அதுவும், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களால் 7–12–2012–ல் போடப்பட்ட உத்தரவின்படி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. நில உபயோக மாற்றம் உட்பட எல்லாத் துறைகளுக்கும் பொருந்துமாறு மாற்றி அமைத்து அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிகளவில் அதாவது 48.45 சதவிகிதம் நகர்மயமாகி உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதும், பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறியீடாக விளங்கும் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவீட்டின்படி தமிழ்நாடு ரூ.4.28 இலட்சம் கோடியுடன் இந்தியாவின் இரண்டாவது சிறந்த வளர்ச்சி அடைந்த மாநிலமாக விளங்குகிறது என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியே.

பிற்பகல் 2–05

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 document–ல் குறிப்பிட்டுள்ள இலக்குகள் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி, வேலைவாய்ப்பு போன்றவற்றை நிறைவு செய்யும் என்று நான் நம்புகிறேன். சென்னை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் இதர பகுதிகளில் உள்ள தானியங்கி வாகனங்கள், மிதிவண்டிகள், ஆடை வடிவமைப்பு இயந்திரங்கள், மின்சார சாதனங்கள், மின் பம்புகள், போக்குவரத்துக் கருவிகள், பொறியியல் சார்ந்த உப நிறுவனங்கள் ஆகியவைத் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறந்த பொறியியல் அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது தமிழ்நாட்டிற்குப் பெருமையே.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த சேவை மையம் (Integrated Financial Service Centre) ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது பாராட்டுதலுக்குரியதாகும். உலகின் மிகப் பெரிய 10 வாகன உற்பத்தி மையங்களில் Automobile Manufacturing Hub–ஆக தமிழகம் விளங்குகிறது. Hyundai, Ford, Renault, Nissan, Daimler ஆகிய நிறுவனங்கள் தானியங்கி வாகனங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களாக விளங்கி வருகிறது என்பதும், இத்தொழிற்சாலைகளுக்குத் தேவையான டயர்களை மிக்சலின், எம்.ஆர்.எப்., அப்பலோ போன்ற பன்னாட்டு மற்றும் இந்திய நிறுவனங்கள் உற்பத்தி செய்து வழங்கிவருகின்றன என்பதும், இதனால் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு அதிகமாக

உள்ளதால் இந்தியாவின் டெட்ராய்டு எனத் தமிழகம் சிறப்புடன் அழைக்கப்பட்டு வருவதில் தமிழகத்திற்குப் பெருமையே.

இந்தியாவில் உள்ள நூற்பாலைகளில் 59 சதவீதம் நூற்பாலைகளுடன் தமிழ்நாடு ஜவுளித் துறையில் ஒரு வலிமையான உற்பத்தித் தளத்துடன் உள்ளது என்பதும், இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தி நூலில் 41 சதம் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு முதலிடம் வகித்து வருகிறது என்பதும் பெருமைக்குரிய விஷயமாகும். விசைத்தறிகளில் தமிழ்நாடு இரண்டாம் இடம். ஆயத்த ஆடைகள் தயாரிப்பை பொறுத்தவரையில் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 56 சதம் பின்னலாடை உற்பத்தி திருப்பூரில்தான் செய்யப்படுகிறது. பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் 90 சதம் பங்களிப்பைச் செய்கிறது. மொத்தத்தில் பஞ்சாலைத் தொழில் என்பது மத்திய அரசாங்கத்தினுடைய புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாகவும், புதிய பொருளாதாரக் கொள்கையினுடைய விளைவாகவும் மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய N.T.C. நிறுவனம்கூட 119 ஆலைகளில் கிட்டத்தட்ட 70 ஆலைகள் மூடப்பட்டு, இன்றையதினம் 52 ஆலைகளே இயங்கிவருவதற்கு அடிப்படையான காரணம் மத்திய அரசாங்கத்தினுடைய புதிய ஜவுளிக் கொள்கையும், புதிய பொருளாதாரக் கொள்கையும் மட்டுமல்ல, Exit Policy–ஐ கடைப்பிடிக்கின்ற காரணத்தினாலே பொதுத் துறை நிறுவனங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையினால் சீரழிக்கப்பட்டு வருகின்றது என்பதனை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

பஞ்சாலைகள் நிறைந்திருக்கக்கூடிய தமிழகத்தில் அநேகமாக 1,891 பஞ்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பஞ்சாலைகளை முறைப்படுத்த வேண்டும். அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் 12 ஆண்டு காலமாக ஊதிய உயர்வு இல்லாமல் இருந்து வருவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். N.T.C.–யில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள், தமிழக அரசு நடத்தக்கூடிய கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டு 5 ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதேபோல தனியார் ஆலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு ஏற்படுத்துவதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தோல் மொத்த உற்பத்தியில் 70 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் 26 ஆயிரத்து 625 கோடி ரூபாய் முதலீட்டுக்கான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பன்னாட்டு மற்றும் இந்திய நிறுவனங்களுடன் செய்யப்பட்டுள்ளன. மேலும், 8 நிறுவனங்கள் 1,268.76 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவ வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் 1.46 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிட்டும் என்று சொல்லப்பட்டுள்ளதும் பாராட்டுக்குரியது. நடப்பு நிதியாண்டில் 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீட்டினைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

பொதுவாக பன்னாட்டு கம்பெனிகள் Corporate நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க அனுமதி அளிக்கும்போது நடைமுறையில் தொழிலாளர் நலச் சட்டங்களின்படி தொழிலாளர்கள் சங்கம் வைத்துக்கொள்ளும் உரிமையையும், தொழிலாளர் ஒப்பந்தக் கூலிகளாக வேலைக்கு அமர்த்தும் நடைமுறையை அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்கள் தொழிலாளர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக சேரும் உரிமையைப் பறிக்காதவாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் அதை உறுதி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிலம் கையகப்படுத்தும்போது விவசாயிகளின் விளை நிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது. உதாரணமாக, மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டத்தில் சிவரக்கோட்டை, சுவாமிமலை பகுதியில் சிறு தானியங்கள், பருப்பு வகைகள், காய்கள், ஆண்டுதோறும் விளையும் பகுதி. மதுரை மாவட்டத்திலே மண் வளம் மிகுந்த விவசாயப் பகுதி. அப்பகுதியில் சுமார் 1,500 ஏக்கர் விவசாய நிலத்தை கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் SIPCOT–க்கு எடுத்த முயற்சியை விவசாயிகள் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் தேர்தல் நேரத்தில் நிலம் கையகப்படுத்தமாட்டாது என உறுதியளித்தார்கள். ஆனால் வருகிற 23 ஆம் தேதி நிலம் கையகப்படுத்துவதற்குரிய கட்டணம் நிர்ணயம் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்

*அவர்கள் விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி நிலத்தினுடைய மதிப்பீட்டைச் செய்வதற்காகத்தான் அந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன.*

*பிற்பகல் 2–10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் பேசுகின்றபோது நான் இந்த பதிலைச் சொன்னேன். இப்போது மீண்டும் நான் இந்த பதிலைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். சிவரக்கோட்டை என்பது 1,478 ஏக்கர், 1,500 ஏக்கர் அல்ல. அதில் 200 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கின்றது. அதிலே 20 நபர்கள் மட்டும்தான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் எதிர்ப்புத் தெரிவித்து கையெழுத்திட்டிருக்கின்றார்கள், என்னிடத்திலே அதனுடைய நகல் இருக்கின்றது. மீதமுள்ள நபர்கள் எல்லாம் 23 ஆம் தேதி எங்களுக்கு தொகையை உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்பதற்காக நாங்கள் வருகிறோம் என்று சொன்னதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். ஆனால், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, 23 ஆம் தேதி அன்றும், 30 ஆம் தேதி அன்றும் நடைபெறுகின்ற அந்தக் கூட்டத்தில் உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள். அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். விவசாய நிலங்களை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தக் காலத்திலும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்பதை உங்களுக்கு மீண்டும், மீண்டும் சொல்லிக்கொண்டு, அதிலே உங்களுக்கு இடம் கொடுக்கின்றோம், எங்களுக்கு இன்னும் அதிக தொகையைக் கொடுங்கள் என்று அவர்கள் சொல்லியதன் காரணத்தினால்தான் 23 ஆம் தேதி அன்றும் 30 ஆம் தேதி அன்றும் அந்த நில உரிமையாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வரச் சொல்லியிருக்கின்றார்கள். அங்கே உங்களுடைய கருத்துகளைச் சொல்லுங்கள். நிச்சயமாக பரிசீலிப்போம். மாண்புமிகு அம்மா*



*அவர்களுடைய அரசு விவசாய நிலங்களை எடுப்பதில்லை என்ற குறிக்கோளோடு இருக்கிறது என்பதை மீண்டும், மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பக்கத்தில் இருக்கின்றாரே. அவரை பேசச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

**திரு. சு. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** தயவுசெய்து நாங்கள் கொடுத்துள்ள அந்த நோட்டீஸை சரியாகப் படிக்க வேண்டும் 7 .1(a) நோட்டீஸ் கொடுத்து நிலம் ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டுவிட்டது, அதற்கான நில மதிப்பீடு செய்வதற்காக 23 ஆம் தேதி விவசாயிகள் வர வேண்டும். அப்படி விவசாயிகள் வரவில்லை என்று சொன்னால், நிலத்திற்கு அரசு நிர்ணயிக்கக்கூடிய விலை வங்கியில் டெபாசிட் செய்யப்படும் என்ற நோட்டீஸை, எச்சரிக்கை நோட்டீஸாகக் கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் சொல்வதெல்லாம், கடந்த கால ஆட்சியிலே. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் மீண்டும், மீண்டும் தவறாக சொல்லிக்கொண்டிருக்கின்றார். நேற்று நீங்கள் கொடுத்த கடிதத்தை நான் படித்துப் பார்த்தேன். விலை நிர்ணயிப்பதற்காகத்தான் அந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கின்றார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அதற்குப்பின்னால், உங்களிடம் கலந்துவிட்டுதான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தகவல் சொல்லி, இப்படி எதிர்ப்பு கிளம்பியிருக்கின்றது, அதன் உண்மை நிலைமை என்ன என்பதற்கு அறிக்கை கேட்கின்றபோதுதான் 20 நபர்கள் மட்டும்தான் எதிர்த்திருக்கின்றார்கள். மற்றவர்கள் எங்களுக்குத் தொகையை உயர்த்தித் தாருங்கள் என்று கேட்டதன் காரணமாகத்தான் இந்தக்*

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கூட்டத்தை நாங்கள் கூட்டியிருக்கின்றோம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இப்போதுகூட ஒன்றும் கெட்டுப்போகவில்லை. உங்களுடைய உண்மையான கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொல்லுங்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அது கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளைய தினம் 23 ஆம் தேதி அவர்களை இடத்தைவிட்டு வெளியே செல்லுங்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. அதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் கொடுத்த நோட்டீஸை படித்துவிட்டுதான் மாவட்ட ஆட்சியரிடத்திலே இது சம்பந்தமான அறிக்கையை வாங்கியிருக்கின்றோம். அதிலே அவர்கள் கையெழுத்துபோட்டு அனுப்பியிருக்கின்றார்கள். அதைத்தான் நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது 1,500 ஏக்கரில் விவசாயத்தினுடைய. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *** என்று மாண்புமிகு உறுப்பினர் கூறியது, நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய விளை நிலங்களுக்கான ஆதாரம் என்று எடுத்துக்கொண்டால், நீங்கள் அந்த விவசாயிகள் இந்த ஆண்டு உற்பத்தி செய்திருக்கக்கூடிய பொருட்கள்தான் இவை என்பதை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எனவே, அருகிலேயே வசதி படைத்த ஒருவரின் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. (குறுக்கீடு)*

*(மாண்புமிகு உறுப்பினர் தானியப் பொட்டலங்கள் ஒட்டப்பட்ட தாளைக் காட்டினார்.)*

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *காலையிலே நீங்கள் அவைத் தலைவரிடம் அனுமதி பெற்றுத்தான் இங்கே காட்டியிருக்க வேண்டும்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலையிலே நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் கேட்டேன். இருந்தாலும் இது ஒன்றும்* unparliamentary—*யான காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டு . . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சரி, உரையைத் தொடருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தென் தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய தொழிற்சாலைகளைத் துவக்குவதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். பக்கத்திலே 5 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது, அதை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள் அதையும் நிச்சயமாக எடுப்போம். ஏனென்று சொன்னால், தென்னகத்திலே தொழிற்சாலைகள் வர வேண்டும், அதிக முதலீடுகளைக் கொண்டு வந்து அங்கே வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த 5 ஆயிரம் ஏக்கர் நிலம் எடுப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நிச்சயமாக நாங்கள் எடுப்போம். ஆனால், இப்போது எங்களிடத்திலும் நீங்கள் காட்டினீர்கள். இல்லையென்று சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் வரை நீங்கள் சென்றீர்கள். உச்ச நீதிமன்றத்தில்கூட உங்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு வரவில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு அம்மாவின் அரசு, நாளைய தினம் மாவட்ட ஆட்சியரிடத்தில் சொல்லி உங்களுடைய கருத்தைக் கனிவோடு பரிசீலிக்கும் என்று சொல்கின்றேன். திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லுகின்றபோதுதான் நான் இதைச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், நிச்சயமாக 23 ஆம் தேதியன்றும், 30 ஆம் தேதியன்றும் உண்மை நிலையை அறிந்து சொல்லுங்கள் என்று மாவட்ட ஆட்சியரிடத்தில் நாங்கள் தெளிவான அறிவுரை

கொடுத்திருக்கின்றோம். நீங்கள் அங்கே கருத்துக்களைச் சொல்லுங்கள். அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியைப் பற்றியது என்பதால், திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் ஏற்கெனவே இதுசம்பந்தமாக பலமுறை சொல்லியிருக்கிறேன். பலமுறை பேசியிருக்கிறோம். விவசாய நிலங்களை ஒருபோதும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கைவைக்க மாட்டார்கள் என்று ஏற்கெனவே உத்தரவாதம் தந்திருக்கிறார்கள். எனவே, அந்த விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருந்து கொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகின்ற அளவிற்கு தோழமைக் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்கு வலு சேர்ப்பார்கள் என்று நம்புகிறேன். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாய நிலங்களைக் கையகப்படுத்தாது என்ற நம்பிக்கையோடுதான் இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். சர்க்கரை, சிமென்ட், ஜவுளி மற்றும் ஜவுளி இயந்திரங்கள், காகிதம் மற்றும் அலுமினிய தொழில் துறைகள், திருப்பூரில் பின்னலாடை, கோயம்புத்தூரில் வார்ப்பகம் மற்றும் ஜவுளி, சேலம், தருமபுரியில் பட்டுப் பூச்சி வளர்த்தல் மற்றும் ஜவ்வரிசி தயாரித்தல், திருநெல்வேலியில் பல்லடம், உடுமலைப்பேட்டை பொங்கலூர் காற்றாலை ஆகிய துறைகள்



தமிழகத்திலே வளர்ச்சி பெற்ற துறைகளாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தின்மூலம் தமிழகத்தின் சிமென்ட் உற்பத்தி அளப்பரிய முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆந்திரா, இராஜஸ்தான் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக அதிக அளவில் சிமென்ட் உற்பத்தி செய்யும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது என்பது பாராட்டுதலுக்குரியது. ஆலங்குளம் சிமென்ட் ஆலை, அரியலூர் சிமென்ட் ஆலை, தமிழ்நாடு கல்நார் தகடு ஆலை, தமிழ்நாடு கற்குழாய் ஆலை, சிலவற்றை நவீனப்படுத்தவும், விரிவாக்கம் செய்யவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம். வெளிச் சந்தையில் மக்கள் எளிதாக வாங்கும் வகையில் சிமென்ட்டை குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 3 சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும், 27 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும், மொத்தம் 46 சர்க்கரை ஆலைகள் உள்ளன. தற்போது 43 சர்க்கரை ஆலைகள் இயங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிருவாகத்தின் செயல்பாட்டை முறைப்படுத்தி, முறையாகத் திறன்மிக்க அதிகாரிகளை நியமித்து, முழுமையாக இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 92 என்.எம்.ஆர். தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மதுரை, பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை, தென் மாவட்டத்திலே 1946 ஆம் ஆண்டு முதன்முதலில் தொடங்கப்பட்டது. மதுரை, பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை சர்க்கரை உற்பத்தியிலே சாதனை படைத்தது. இது சுமார் 10–க்கு மேல் தேசிய விருது பெற்ற ஆலை. (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இவ்வாலை சில முறைகேடுகளால் பத்தாண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்டது. இதன் கரும்பு தனியார் சர்க்கரை ஆலையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்மீது நடவடிக்கை எடுத்து ஆலையை உடன் திறக்க வேண்டும். கடந்த 15 தினங்களாக அப்பகுதியில் தொழிலாளர்கள், விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிய 420 நிரந்தரமில்லாத தொழிலாளர்களுக்குச் சம்பளம், வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையைப் பற்றிச் சொன்னார்கள். 1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்க்கரை ஆலை, மிகவும் பழமையான சர்க்கரை ஆலை. 1983 ஆம் ஆண்டு அரசுடைமையாக்கப்பட்டு, அதற்குப் பின்னால் 20 ஆண்டுக் காலம் இயங்கியது. ஆனால், அங்கு 850 டன் அளவிற்கு மட்டும்தான் தினந்தோறும் அரவைக்கு கரும்பு கிடைத்துக்கொண்டிருந்தது. பல்வேறு காரணங்களினால் அது மூடப்பட்டது. மூடப்பட்டதற்குப் பின்னால் அங்கிருந்த நிரந்தரத் தொழிலாளர்கள் அத்தனைபேருக்கும் வி.ஆர்.எஸ். மூலமாக அவர்களுக்குச் சேர வேண்டிய பணப்பலன் கொடுத்தனுப்பப்பட்டது. இப்பொழுது நீங்கள், 15 நாட்களாக என்.எம்.ஆர். தொழிலாளர்கள் 402 பேர் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். கடந்த 2 ஆணடுகளில் எங்களுக்கு இதுபோன்ற கோரிக்கை எதுவும் வரவில்லை. இப்போது 15 நாட்களாகத்தான் அந்த என்.எம்.ஆர். தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாக எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறீர்கள். நேற்றைய தினம் அதிகாரிகள் குழுவை அங்கு அனுப்பியிருக்கின்றோம். 15 நாட்களில் நீங்கள் கொடுத்திருக்கும் பெயர்களையெல்லாம் படித்துப் பார்த்து, யார், யார் உண்மையான என்.எம்.ஆர். ஆக அங்கு இருந்தார்களோ, அவர்களுக்கு என்னென்ன பணிகள் வழங்கப்பட்டிருந்தன, அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன என்பதெல்லாம் ரெக்கார்டுகளைப் பார்த்து பரிசீலனை செய்யப்படும். இப்பணிகளுக்கெல்லாம் கிட்டத்தட்ட 15 நாட்களாவது ஆகும். அதன் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, தனியார் மில்லுக்கு மட்டுமல்ல, அங்கு இருக்கின்ற Mathura Sugars–ல் இருந்த area–வை நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 2–20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையைத் திறந்து ஓட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** உரையை முடிக்கப் போகிறேன், ஒரே ஒரு நிமிடம். ஊதிய உயர்வு, 4–4–2012 முதல் கடந்த ஆண்டு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டும், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9–5–2012 ஆம் தேதியன்று சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால ஊதிய உயர்வினை அறிவித்தார்கள். தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் 15–12–2012 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. எனவே, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு சம்பந்தமாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லாததால் ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு சர்க்கரை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் 2008 ஆம் ஆண்டு அந்தப் பேச்சுவார்த்தை முடிந்து, புதிய பேச்சுவார்த்தை தொடங்கியிருக்க வேண்டும். அவர்கள் அந்த பேச்சுவார்த்தையைத் தொடங்காமல், அதே சம்பளத்தைக் கொடுத்துவிட்டு, சிஸ்கானுடைய 90 சதவிகித ஊதிய உயர்வை மட்டும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு பின்னால்தான் 9–5–2012 அன்று இங்கே 110 விதியின்கீழே அவர்களுக்கு ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதிலேகூட நிலுவையாக

*இருக்கின்ற 10 சதவிகிதத் தொகையை, 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டுவரை உடனடியாகக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், எப்போது பேசி முடித்தாலும், அதிலேயிருந்து 25 சதவிகித உயர்வு எப்போதுமே உண்டு என்பதை வேறு எந்த அரசும் இதுகாறும் செய்யாததை மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக் காலத்திலேயே அறிவித்திருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இப்போது கூட்டுறவுத் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உயர் நீதிமன்றத்தினுடைய வழக்குகள் எல்லாம் முடிவுற்றன என்பது எங்களுக்கும் தெரியும். ஆனால், கூட்டுறவுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், இப்போது தொழிற் சங்கத்திற்குள் தேர்தல் வைக்க வேண்டும். யார் பேச்சுவார்த்தையிலே கலந்து கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு தேர்தல் வைக்க வேண்டும். இப்போது கூட்டுறவுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், கூட்டுறவுத் தேர்தல் முடிந்ததற்கு பின்னால்தான், தொழிற் சங்கத்திற்குத் தேர்தல் வைத்து, முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்குப் பிறகு இன்னும் 2 உறுப்பினர்கள் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தில் விருப்ப ஓய்வுத் திட்டம் 13–6–1991 ஆம் நாளிட்ட நிதித் துறையின் அரசாணை எண் 29–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்படாமல் செயல்படுத்தியது குறித்தும், பணி நீக்கம் செய்யப்பட்டு தவிக்கும் பணியாளர்களின் நிலை குறித்து மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மீண்டும் இவர்களைப் பணியமர்த்த வேண்டும். இவர்களுக்குரிய பென்ஷன் பெறுவதற்கான வாய்ப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகின்றன. உரையை நிறைவு செய்யுங்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *ஒரே ஒரு விஷயம். சிவகங்கையில் கிடைக்கும் கிராஃபைட்டைப் பயன்படுத்தி, கிராஃபைட் உப தொழிற்சாலை தொடங்கப்பட வேண்டும். தொழிலை ஊக்குவிக்க கிராஃபைட் தொழிற் பூங்கா திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்கள் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் மக்கள் தென்னை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார்கள். கொழுப்புச் சத்து நீக்கிய தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டும். அதேபோல அங்குள்ள விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையிலே கொப்பரைத் தேங்காய்கள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டு, வாய்ப்பளித்த சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் நான்கு நிமிடங்கள்.*

*__திருமதி எஸ். விஜயதரணி:__ *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் எல்.பி.ஜி. கொள்கையை தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் கொள்கைகளையொட்டியே தமிழக அரசு தொழில் கொள்கையை வகுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.*

*மத்திய அரசின் புதிய தொழில் கொள்கையில், பல்வகை சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கத் தேவைப்படும் நிலத்தின் உச்ச வரம்பு ஆயிரம் ஹெக்டேரிலிருந்து 500 ஹெக்டேராகக் குறைக்கப்பட்டுள்ளது. வகைவாரியாக பிரிக்கப்பட்ட மண்டலங்களுக்குத் தேவைப்படும் நிலத்தின் உச்சவரம்பு 50 ஹெக்டேராகக் குறைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளாகங்கள் அமைக்க 10 ஹெக்டேர் நிலம் தேவை என்ற நிர்ணய வரம்பு முழுமையாக நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால்,*

கட்டுமானங்களை உருவாக்குவதில் மாற்றங்கள் இல்லை. 50 ஏக்கர் கொண்ட கூட்டுத் தொடர் திட்ட மண்டலங்கள் உருவாக்கும் விதத்தில் கூடுதல் வகைவாரியான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனால் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மற்றும் பிற சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது டயர்களிலிருந்து உருவாக்க வாய்ப்புள்ளது. சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இதில் உருவாக்க வாய்ப்புள்ளது. குறைந்தபட்ச கட்டமைப்பு வசதி, சென்னை போன்ற மாநகரங்களில் ஒரு இலட்சம் சதுர மீட்டராகவும், Category “B” நகரங்களில் 50 ஆயிரம் சதுர மீட்டர்களாகவும், பிற இடங்களில் 25 ஆயிரம் சதுர மீட்டர்கள் என்றும், அதிக ஊரகப் பகுதிகளில் இதுபோன்ற குறைந்தபட்ச சதுர மீட்டர்கள் அனுமதியளிக்கப்பட்டுள்ளதால், ஊரகப் பகுதிகளில் இதுபோன்ற தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், பிற சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் உருவாக்கத் தமிழக அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–25

தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி என்பது இந்தியாவில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. மொத்த ஏற்றுமதியில் 25 சதவீதமாக உள்ளது. தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வாயிலாக 2012–2013 ஆம் ஆண்டு ஏற்றுமதி வருவாய் என்பது ரூ.1,40,000 கோடியாக 70 சதவீதம் வளர்ச்சியைக் கண்டுள்ளது. மொத்த தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியில், நாட்டின் மூன்றாமிடத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வாயிலாக ஏற்படக்கூடிய ஏற்றுமதிகள்தான் உள்ளன. எனவே, அதிகமாக ஊரகப் பகுதிகளில், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசு நேரடியாக சென்னை–பெங்களூரு தொழில்நுட்ப corridor project–ஐ அறிவித்து, கோடிக்கணக்கான நிதியை ஒதுக்கியுள்ளது. அவற்றையும் வரன்முறைப்படுத்தி, தமிழக அரசு நடைமுறைக்குக்கொண்டு வர வேண்டும்.



மேலும், சேலத்தின் பெருமை Salem Steel Plant; நெய்வேலியின் பெருமை N.L.C.; திருச்சிக்குப் பெருமை BHEL; சென்னைக்குப் பெருமை I.T. industries; அதுபோன்று, கன்னியாகுமரிக்கு பெருமை (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள், அவ்வளவுதான்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கன்னியாகுமரிக்கு பெருமை சேர்க்கும் விதத்தில், இரப்பர், தேங்காய் சம்பந்தமான தொழிற்சாலைகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) மூன்று நிமிடம் கேட்டுவிட்டு, நான்கு நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கூடுதலாக இரண்டு நிமிடங்கள் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** கன்னியாகுமரி மாவட்டம் என்பது நீண்ட கடற்கரையைக் கொண்டிருப்பதால், மீன் சம்பந்தமான தொழிற்சாலைகள் மற்றும் உப பொருட்கள் தொழிற்சாலைகளை அங்கு உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரியிலுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் 3,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், பணிகள் தொய்வாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும், பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பதனீர் மற்றும் பனைப் பொருட்களை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்பெற்று, அந்தப் பொருட்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

PURA–Providing Urban Facilities in Rural Areas இந்தத் திட்டத்தின்கீழ் பெரிய தொழிற்சாலைகள் சென்னை, கோவை,

மதுரை, திருச்சி போன்ற நகரங்கள் மட்டுமின்றி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளிலும் தொடங்க அரசு வசதிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் இயங்கிவரும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலை ஊழியர்கள் ஊதியம் சம்பந்தமான கோரிக்கைகளை சென்ற ஆண்டு வைத்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடங்கள் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையை முடிக்கிறீர்களா? சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** உரையை முடித்துவிடுகிறேன். ஊதியம் கேட்டு சென்ற ஆண்டு கோரிக்கை முன்வைத்தார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து சிறப்பு ஊதிய உயர்வு கொடுத்தார்கள். அதற்கு எங்கள் நன்றியை நாங்கள் தெரிவித்தோம். ஆனால், அவர்கள் அந்த வழக்கினைத் திரும்பப் பெறவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அவர்கள் வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற்றுவிட்டார்கள். ஆனால் இரட்டை ஊதிய முறையைக் களைய வேண்டும் என்பதுதான் முக்கியமான கோரிக்கை, 23 ஆண்டுகளாக நிலவிவரும் கோரிக்கை. Abolition of Dual Wages System அதைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து, திரு. ராஜீவ் ரஞ்சன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 20 மாதங்கள் ஆகிவிட்டன. அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில், இந்த இரட்டை முறை ஊதியத்தைக் களைவதற்கு அரசு ஆலோசிக்க வேண்டும்.



இதேபோன்ற பிரச்சினை கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலை கன்னியாஸ்பின்னிலும், இரட்டை ஊதிய முறை இருக்கிறது. அதையும் களைவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. அவர்கள் சொன்ன மாதிரி நடந்துகொள்ளவில்லை. நான்கு நிமிடங்கள் கேட்டுவிட்டு, ஆறு நிமிடங்கள் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** இந்த கன்னியாஸ்பின் கூட்டுறவு நூற்பாலையை நவீனமயமாக்குவதற்கு 64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பணிகள் தொய்வான சூழ்நிலையில் சென்றுகொண்டிருக்கின்றன. அதனையும் தயவுகூர்ந்து விரைவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி.

பிற்பகல் 2–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 3 கருத்துகளைச் சொன்னார்கள். முதலாவதாக, சிறப்புப் பொருளாதார மண்டலம் நாங்குனேரியில் ஆரம்பித்ததற்குப் பிறகும் தொழில் முனைவோர்கள் வரவில்லை என்றும் அதற்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் சொன்னார்கள். நீங்கள் சார்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்த மத்திய அரசு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் Minimum Alternate Tax என்று சொல்லக்கூடிய அந்த வரியைப் போட்டதற்குப் பின்னால்தான், அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குத் தொழில் துவங்க வருபவர்கள் எல்லாம் குறைந்துவிட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசுக்குச் சொல்லி, அந்த வரியை எடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

Dividend Distribution Tax என்று சொல்லக்கூடிய அந்த வரியையும் இப்போது போட்டுவிட்டார்கள். அதனால் அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு வருகின்ற தொழில்முனைவோர்கள் எல்லாம் அந்த வரிச் சலுகைக்குப் பதிலாக வரிச்சுமை அதிகரித்துவிட்ட காரணத்தால், தொழில் தொடங்க வருவதற்குத் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் காரணமேயொழிய, நாங்குனேரி S.E.Z.–யைப் பொறுத்தவரை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எந்தவிதத்திலும் தொழில்முனைவோர் அங்கு தொழில் தொடங்க வருவதைத் தடுக்கவில்லை என்பதை நீங்கள் முதலிலே புரிந்துகொள்ளவேண்டும். நாங்கள் தடுத்துக் கொண்டிருப்பதைப்போல நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்.

இரண்டாவதாக, சென்னையிலிருந்து பெங்களூரு வரை அந்த Industrial Corridor எந்த நிலைமையில் இருக்கிறது என்று கேட்டார்கள். அது எந்த வழியாகச் செல்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை. மத்திய அரசு சொல்வதற்கு முன்பாகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் இராணிப்பேட்டையிலிருந்து ஓசூர் வரை இதுபோன்ற தொழில் பெரு வழிச் சாலை அமைக்கவேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதற்கான ஆய்வுப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல, S.E.Z.–யை இப்போது கன்னியாகுமரியில் தொடங்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலும் மாண்புமிகு உறுப்பினருடைய வெட்டுத் தீர்மானத்தில்கூட, இரப்பர் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் கடந்த முறைகூட அவையில் சொல்லியிருக்கிறேன். இரப்பரைப் பொறுத்தவரை, கன்னியாகுமரியில் இரப்பர் உற்பத்தி 5 சதவிகிதம்தான் இருக்கிறது. மீதமுள்ள 95 சதவிகிதம் கேரளாவிலிருந்து வர வேண்டும். தொழில்முனைவோர்கள் கன்னியாகுமரியில் இரப்பர் தொழிற்சாலை தொடங்க வந்தார்களென்றால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரைத் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குத்தான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது தெளிவாகச் சொன்னேன். 2008–ல் தி.மு.க. அரசு விட்டுவிட்ட பேச்சுவார்த்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த 10 சதவிகிதத் தொகையையும் கொடுத்துவிட்டு, அதற்குமேல் கூடுதல் தொகையாக 25 சதவிகிதம் ஊக்கத் தொகை கொடுத்திருக்கின்றார்கள். இப்போது உயர் நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளெல்லாம் முடிந்துவிட்டன. இதற்குப் பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்ததற்குப் பின்னர், பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல இரட்டை ஊதியமுறை இருக்கிறது என்று உறுப்பினர் சொன்னார்கள். அது மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். அதிகபட்சம் உங்கள் உரையை மூன்று நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்கு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னது அப்படித்தான்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியே முடித்துவிடுகிறேன். 2013–2014 ஆம் ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையிலே மூன்று கருத்துக்களைப் பதிவு செய்ய வாய்ப்பளித்தமைக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக முதலிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொழில் வளர்ச்சியிலே மிகுந்த அக்கறை காட்டுகின்ற இந்த அரசுக்கு முதலிலே நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) ஒருசில கருத்துகளை மட்டும் நான் இங்கே பதிவு செய்கின்றேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே தொழிற்சாலை தொடங்குவதற்காக Soft Loan and Term Loan என இரண்டு கடன்களைக் கொடுக்கின்றோம். இந்த Term Loan என்பது தமிழக அரசு கொடுக்கக்கூடியது. Soft Loan என்பது National Equity Fund Scheme–ன்கீழ் மத்திய அரசிடமிருந்து வாங்கிக் கொடுக்கின்றோம்.

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2013 ஏப்ரல் 19

அதிகபட்சமாக இதில் 2½ இலட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக சில தொழிற்சாலைகள் நலிவடைகின்றபோது, முதலில் Term Loan–ஐ வசூலித்துவிடுகிறோம். ஐந்து ஆண்டுகளுக்குள் செலுத்தவேண்டுமென்று சொல்லி ஒரு சதவிகித வட்டியில் Soft Loan கொடுக்கிறார்கள். ஆனால் இந்த Soft Loan குறித்த காலத்திற்குள் வசூல் செய்யப்படவில்லையென்று சொன்னால், அந்த ஒரு சதவிகித வட்டி 18 சதவிகித வட்டியாக மாறிவிடுகிறது. அதைக் கட்டத் தவறுகின்றபோது சில நேரம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 10 வருடங்களானாலும்கூட அதைக் கண்டுகொள்வதேயில்லை. அப்படியிருக்கின்றபோது 2½ இலட்சம் ரூபாய் கடன் வாங்கியவர்கள் 12½ இலட்சம் ரூபாய், 13 இலட்சம் ரூபாய் வரை திரும்பக் கட்டியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படாமல், 5 ஆண்டுகளுக்குள்ளே அதைச் செலுத்த வேண்டும் என்று வரையறை வைக்க வேண்டும். முதலிலே மத்திய அரசினுடைய கடனான Soft Loan–ஐ திரும்பப் பெற்று, அப்படி 200 சதவிகிதம், 300 சதவிகிதம் எனக் கட்டக்கூடிய சூழ்நிலையிலிருந்த அந்த நலிவடைந்த தொழிற்சாலைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் உங்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, என்னுடைய ஆம்பூர் தொகுதியிலே, இன்றைக்கு வருடத்தில் 1,000 கோடி ரூபாயை அந்நிய செலவாணியாகத் தரக்கூடிய, காலணித் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. இந்தக் காலணித் தொழிற்சாலைகளுக்கு இருக்கின்ற மிகப்பெரிய பிரச்சினை மின் பற்றாக்குறைதான். ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் குறைந்தபட்சம் 500 முதல் 800 தொழிலாளர்கள் வரை பணிபுரிகின்றார்கள். நம்முடைய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு எப்படி நாம் தடையில்லா மின்சாரத்தைக் கொடுக்கிறோமா, அப்படி இந்தத் தொழிற்சாலைகளுக்கும் தடையில்லா மின்சாரம் அளித்தால் நன்றாக இருக்கும் என்றுதான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய மிகப் பெரிய எதிர்பார்ப்பு அதுமட்டும்தான். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரிகின்ற அந்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டுமாவது தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 19] [திரு. அ. அஸ்லம் பாஷா]

பிற்பகல் 2–35

அதேபோல, ஆம்பூரில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலை. இது தமிழகத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளில் புகழ்பெற்ற, தரமான சர்க்கரை ஆலையாகும். அந்த சர்க்கரையைப் பார்த்தீர்கள் என்றால், ஆம்பூர் சர்க்கரை ஆலையிலிருந்து பெறப்படும் பால் நிறத்தைவிட மிகவும் நன்றாக இருக்கும். ஆனால், இன்றைக்கு அந்த சர்க்கரை ஆலையின் பிரச்சினை என்னவென்று சொன்னால், விவசாயிகள் ஆலைக்கு கரும்பு அனுப்பினால் அடிக்கடி இயந்திரங்கள் பழுதுபட்டு, 4 நாட்கள், 5 நாட்கள் அங்கே கரும்பு காய்ந்து கொண்டிருக்கிறது. அந்த இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே 48 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு அளித்தார்கள். அதற்காக நான் இங்கே நன்றி தெரிவித்திருக்கிறேன். ஆனால் அப்படியிருந்தும்கூட, சென்ற மாதம் அந்த சர்க்கரை ஆலையில் இயந்திரங்கள் பழுதாகிவிட்டன என்று ஒரு வாரம் தொழிற்சாலை நடக்கவில்லை. ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்திலே கரும்புச் சாறு என்பது மிகவும் குறைவு. அதிலேயும் கரும்பு காய்ந்துவிட்டால் சாறு மிகவும் குறைந்துவிடும் என்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலணித் தொழிற்சாலைகள் வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் பல மடங்கு வட்டி செலுத்துவதாகத் தெரிவித்தார்கள். T.I.I.C.–ன் மூலமாகக் கடன் வாங்கிய நலிவடைந்த ஆலைகள் எல்லாம் one time settlement என்ற அடிப்படையில் முன்வருவீர்களேயானால், அவர்கள் கடன் பிரச்சினையைத் தீர்க்க நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டி விகிதம் என்பது ஏதோ நாங்கள் போடுவதல்ல. ரிசர்வ் வங்கியினுடைய கோட்பாட்டிற்கிணங்கத்தான் அந்த வட்டி விகிதம் போடப்படுகிறது. இரண்டாவதாக தடையில்லா மின்சாரம் அந்தத் தொழிற்சாலைகளுக்கும் வேண்டுமென்று கேட்டார்கள். Special Economic Zone என்று சொல்லக்கூடிய சிறப்புப்

பொருளாதார மண்டலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பவர்களுக்கு மட்டும்தான் அந்த சலுகைகள் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, ஆம்பூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட இயந்திரங்களைப் பழுதுபார்க்க ரூ. 48 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கியிருப்பதாக அதில் ஏதாவது திடீரென்று பழுதாகிவிட்டால் அதை சரிசெய்வதற்கு 2, 3 நாட்கள் ஆகிவிடுகின்றன. அப்படி 3 நாட்கள், 4 நாட்கள் ஆகும் என்று தெரிந்தால் விவசாயிகளுடைய கரும்பு காயக்கூடாது என்பதற்காக அருகில் உள்ள திருப்பத்தூர் ஆலைக்கு நாங்கள் மாற்றிவிடுகின்றோம். எந்தவிதத்திலும் விவசாயிகள் பாதிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விலைக்கு வருகிறேன். 2006–ல் நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சிமெண்ட் ரூ.170/–, ரூ.180/–க்குதான் விற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு ரூ.320/– ரூ.340/– என்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விளக்கத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லலாம் என்று இருந்தேன். நீங்களே சொல்லிவிட்டீர்கள். 2005–2006 வரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சிமெண்ட் விலை அதிகபட்சமாக ரூ.155/– வரைதான் விற்றது. இடையிலே வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் சிமெண்ட் ஆலை அதிபர்களுக்கு ஆதரவாக இருந்து கிட்டத்தட்ட ரூ.300/– ரூ.320/– என்று சிமெண்ட் விலை உயர்வதற்குக் காரணமாக



இருந்துவிட்டது. இது எந்தெந்த விதத்தில், எப்படியெல்லாம் உயர்ந்தது என்பதை நான் என்னுடைய பதிலுரையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்கள் சிமென்ட் விலையைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்த விலையேற்றத்தினால் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அண்டை மாநிலத்தில் இதைவிட ரூ.50/– குறைவாக இருப்பதாகச் சொல்கிறார்கள். நாமும் அவ்வாறு முயற்சித்து விலையைக் குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தனியார்வசம் உள்ள கிரானைட் சுரங்கங்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கையாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபொழுது S.E.Z. ஆம்பூரைப் பொறுத்தவரையில் இருக்கின்ற எல்லா தொழிற்சாலைகளும் நூற்றுக்கு நூறு எக்ஸ்போர்ட் செய்யக்கூடியபவர்களாக இருக்கிறார்கள். இதற்குமேல் தனியாக ஒரு Zone என்று உருவாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அங்கே இல்லையென்றாலும்கூட, குறைந்தபட்சம் 500 தொழிலாளர்கள் பணிபுரிகின்ற தொழிற்சாலைகளுக்கு மட்டுமாவது தடையில்லா மின்சாரத்தை வழங்க வேண்டும். இன்றைக்கு தோல் தொழிற்சாலைகள் கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து வருகின்றன. நலிந்து வருகின்ற தோல் தொழிற்சாலைகளை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடையில்லா மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 2–40*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துடிக்கும் இதயம்; உதிர்க்கும் வார்த்தை; ஏறெடுத்துப் பார்க்கும் பார்வை; ஏனென்று கேட்கும் கேள்வி; வாளெடுத்து வீசும் வீச்சு; வான் இடியாய் பேசும் பேச்சு; ஏடு எடுத்து எழுதும் எழுத்து; ஏங்கும் ஏழைகளைத் தாங்கும் கரங்கள்; என்றென்றும் வளையாச் செங்கோல்; உண்ணவும் நேரமில்லா உழைப்பு, உறங்கவே நினையாத விழிப்பு, புல்லுருவிகளைப் புறமுதுகு காட்டச் செய்யும் போர்க்கோலம் என்றே எல்லாமும் தமிழினத்திற்கே அன்றி, தமக்காக ஏதுமில்லை என்னும் தன்னலம் துறந்த, தவம் கொண்ட வாழ்வால், தமிழ் மண்ணை கண்ணின் இமையாகக் கட்டிக் காக்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து பேர் இருக்கும் ஒரு குடும்பத்தில், நான்கு சாக்லெட் மட்டுமே இருக்கிறது என்றால், உடனே, அங்கே தாய் முந்திக்கொண்டு, “எனக்கு இனிப்பு பிடிக்காது” என்று சொல்லி, தன் குழந்தைகளுக்கு அவற்றைப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, அவர்களின் முகத்தில் தவழும் புன்னகையைக் கண்டு பூரித்துப் போவார்கள்! இப்படி சிறு சிறு விஷயங்களில்கூட தியாகத்தின் தொடக்கமாகவும், அர்ப்பணிப்புகளின் மொத்த உருவமாகவும் திகழ்வதும் நம் அம்மாதானே! (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலதான், ஒன்றரைக்கோடி தொண்டர்களுக்காக, ஏழரைக் கோடி தமிழ் மக்களுக்காக, உலகெங்கும் வாழும் பத்து கோடி தமிழ் இனத்தின் மலர்ச்சிக்காக, வளர்ச்சிக்காக, சாமானிய குடும்பத்தில் பிறந்த என் போன்ற கடைக்கோடித் தொண்டர்களின் உயர்வுக்காக, தம் வாழ்வையே அர்ப்பணித்து, தமது ஒப்பில்லா உயர் பிறப்பையே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு உபயம் செய்திட்ட உயர் தெய்வம்தான் இன்றைய தமிழகம், நாளைய பாரதமாக விளங்கும் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் நித்தம், நித்தம் வணங்கும் நிகரில்லா அன்னையே! தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, தொழில் துறை மானியக் கோரிக்கைக்குப் பதிலளிக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உற்பத்தித் துறை மிகவும்



இன்றியமையாதது. நாடு வளர்ச்சியடைய வேண்டுமானால், இறக்குமதி அளவு குறைந்து, ஏற்றுமதி அளவு அதிகரித்தால்தான் அதன் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அதை விட்டுவிட்டு, சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நாட்டின் முதலீட்டினைக் கொண்டுவந்து, இந்த வளர்ச்சியை அடையலாம் என்று மத்திய அரசு தவறான கணக்கினைக் கொண்டுள்ளது.

ஓட்டாண்டியாய் அரசியலுக்கு வந்து, உலகப் பணக்காரர் ஆனவர்களோ வால்மார்ட் கும்பலுக்கு வால் பிடிக்கின்றார்கள். சில்லறை வணிகத்தை, சில்லறைக்காக அந்நியனுக்கு விற்றார்கள். முதல் நாள் முடியாது என்கிறார்கள்; அடுத்த நாள் சஸ்பென்ஸ் என்கிறார்கள்; மூன்றாம் நாள் அந்தர் பல்டி அடித்து, ஆதரவாய் வாக்களித்து, வழுக்கி விழுகின்றார்கள். மத்திய அரசின் இந்தக் கொள்கையின் காரணமாக சிறு, குறு தொழில்களை நம்பியிருக்கும் பல கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத நிலைமையை உருவாக்கும். இருந்தாலும், சில்லறை வணிகத்தைத் தமிழ்நாட்டில் நுழைய விடமாட்டேன் என்று அரணாக நின்று, நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறு, குறு தொழில்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவின் பொருளாதாரம் இந்த அளவிற்கு வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையே காரணமாகும். அதற்கு தி.மு.க.–வும் ஒரு காரணம். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் ஸ்டாலின் அவர்கள் துபாயில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, “இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய அரசில் பங்கு பெற்றுள்ள தி.மு.க.–வும் பெரும் பங்காற்றி உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது” என்று கூறியுள்ளார். அப்படியானால், இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கும் அவர்களுடைய பங்கும்தான் காரணம் என்று அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனின் அவயங்கள் அனைத்தும் ஒருசேர வளர்ந்தால்தான் வளர்ச்சி. கை மட்டுமோ, கால் மட்டுமோ, தலை மட்டுமோ வளர்ந்து கொண்டு போனால் அது வீக்கம், விபரீதம் என்பதுபோல, ஒரு மாநிலத்தினுடைய அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால்தான், மக்கள் புலம் பெயரும் வேதனைகள் நிகழாது என்பதால்தான், அனைத்து மாவட்டங்களிலும் ஒரே சமச்சீராக

இருக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தென் மாவட்டங்களுக்கென்று தனித் தொகுப்பு சலுகைகளை அறிவித்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மதிநுட்பமும், வினைத் திட்பமும் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து, மத்திய நிதியமைச்சர்கூட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவித்திருப்பதை வரவேற்பதாகக் கூறியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது காலத்தின் கட்டாயம்; அவ்வாறு பாராட்டுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. ஏனென்றால், 10 முதல் 15 ஆண்டுகள் வரை அவர் மத்திய அமைச்சராக இருந்தாலும்கூட, அதுவும் அவர் சார்ந்த தென் மாவட்டங்களுக்கு அவரால் எந்தப் பயனும் செய்ய முடியவில்லை என்ற ஏக்கத்தின் அடிப்படையில்தான் இந்தப் பாராட்டைச் சொல்லியிருக்கின்றார். அவருடைய பாராட்டை மாண்புமிகு அம்மா அவர்கள் எப்பொழுதும் ஏற்றுக்கொள்வதில்லை. மக்களுடைய பாராட்டை மட்டும்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதைச் சொல்லி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இத்தகைய திட்டங்கள் தமிழ்நாட்டோடு நின்று போவதில்லை; வருங்காலத்தில் இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் இந்தத் திட்டங்கள் தொடரும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் எழுத்தாணி தலை குனியும்போதெல்லாம், தமிழினம் தலை நிமிர்கிறது. இப்படி பன்னாட்டு நிறுவனங்களோடும், உள்நாட்டு நிறுவனங்களோடும் தொழில் துறை ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, தொழில்முனைவோர்களின் இலகுவான முயற்சிக்கு கட்டமைப்பு வசதிகளைத் திட்டமிட்டு உருவாக்கித் தருவதிலும் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

தமிழகத்தில் அந்நிய முதலீட்டினை ஈர்த்து, தொழில்கள் பெருக வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள்தான், முதன்முதலாக பன்னாட்டு கம்பெனிகளான ஃபோர்டு,



ஹூண்டாய், செயின்ட் கோபைன் போன்ற நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்கிட திட்டங்களை வகுத்துக் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 2–45*

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தின் வரலாற்றில் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, 26,625 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடும், 1½ இலட்சம் நபர்கள் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை, இளைய தலைமுறையினருக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கி, இந்திய சரித்திரத்திலேயே சாதனைப் படைத்துள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்—இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்.” என்ற இலட்சியத்தை மனதிலே தாங்கி, நாளும் உழைத்திடும் நம் அம்மாவின் தியாகத்தை வருங்கால சந்ததியினர் வித்தியாசமாகப் பாராட்டுவார்கள். தமிழ்நாட்டை இனி வருங்கால சந்ததியினர் ‘அம்மா நாடு’ என்று பெயரிட்டு அழைப்பார்கள் என்பதில் ஐயமில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* வல்லமை பெற்ற மனித சக்தியும், அந்த மனித சக்தியை ஆக்கப்பூர்வமாய்ப் பயன்படுத்துகின்ற தொழில் வளர்ச்சியும் பெருகினால், அந்த நாடு வல்லரசாகும் என்பதால்தான் மனித சக்தியைக் கடந்த, மகா சக்தியாம் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரே நேரத்தில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் பன்னிரண்டோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டார்கள். ரூபாய் 20,925 கோடி முதலீட்டில் 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட நிகழ்வு இதுகாரும் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் நிகழாத, மாண்புமிகு அம்மாவின் மாபெரும் சரித்திர சாதனையாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 12 புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேசியதை இந்த மாமன்றத்தில் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

“தமிழ்நாடு மாநிலத்தின் வளர்ச்சி இலக்கை 11 சதவிகிதமாகவும், உற்பத்தித் துறையில் 14 சதவிகிதமாகவும் இலக்கு நிர்ணயித்துள்ளது. நடப்பு உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவு நிலைகளைக் கருத்தில்கொண்டு பார்க்கின்றபோது, இந்த இலக்குகள் மிகவும்

அதிகமானவை எனக் கூறுவர். குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் வருங்காலத்தை எப்பொழுதும் தவறாகவே கணிப்பர். ஆனால், உயர்ந்த எண்ணம் கொண்டவர்கள் தங்களைப்போலவே உயர்வான கருத்துக்களைக் கொண்டிருப்பர். உலகில் செயலை செய்ய முடியும் என்பவர்கள், செய்ய மாட்டேன் என்பவர்கள், செய்ய இயலாது என்பவர்கள் என்று மூன்று வகையினர் உள்ளனர். செயலைச் செய்ய முடியும் என்பவர்கள் அனைத்தையும் செய்து முடிப்பர். செய்ய மாட்டேன் என்று கூறுபவர்கள் அனைத்தையும் எதிர்ப்பர். மூன்றாவது வகையினரான செய்ய இயலாது என்று கூறுபவர்கள் அனைத்திலும் தோல்வி அடைவர். மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியது, நான் பழைய பாதையில் செல்ல ஒருபோதும் விரும்புவதில்லை. மாறாக, பாதையே இல்லாத இடத்தில் புதிய பாதையை ஏற்படுத்த விழைகின்றேன் என்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய உயர்வுக்குத் தடைக்கல்லாக இருப்பது பற்றி நம்முடைய சந்தேகங்களை நான் வலுவான நம்பிக்கையுடன் முன்னேறுவதில் நம்பிக்கை கொண்டுள்ளேன். வெற்றி என்பது பொறுப்பின்மூலம் ஏற்படுகின்றது. பெரிய அளவில் ஒருவர் வெற்றி அடைவதற்குப் பொறுப்பினை ஏற்க வேண்டும். இறுதியான ஆய்வில் வெற்றி பெறுகின்ற அனைவருடைய உயர்தன்மையானது அவர்களுடைய பொறுப்பேற்கும் திறனிலிருந்து வெளிப்படுகின்றது. பாமர மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான உயரிய பொறுப்பினை நான் மேற்கொள்ள விழைகிறேன்" என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உரையாற்றியதை நாட்டு மக்களுக்காக நான் உழைக்கின்றேன் என்பதை மீண்டும் ஒரு முறை எடுத்துக் காட்டினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், விஷன் 2023–ஐ நிறைவேற்றி, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே வழிகாட்டுவார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களின் கனவுத் திட்டமான 2023 நிறைவேறுவதற்கு முதல் படிக்கட்டாகத் திகழ்கிறது.

ஆனால், குறுகிய மனப்பான்மை கொண்ட ஒரு தலைவர் சபைக்கே வராமல், வெறும் அறிக்கையின் வாயிலாக 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் குறை கூறி, இவ்வளவு பேருக்கு



வேலை கிடைக்குமா என்று அறிக்கை விட்டுக்கொண்டிருந்த மைனாரிட்டி தி.முக. அரசின் தலைவருக்கு சிறிய விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதில் முதலாவதாக அவர் சொல்லி இருப்பது, அதிக செலவில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளதாக அவர் அறிக்கையிலே கூறியுள்ளார். ஆமாம், அவருடைய ஆட்சியில் "சென்னை சங்கமம்" என்ற பெயரில் குத்தாட்டம் போடுவதற்கு பல கோடி ரூபாயை வீண் செலவு செய்து விளம்பரம் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்கள் அம்மாவுக்கு ஆடம்பரமான விழா எடுக்கத் தெரியாது. ஆக்கபூர்வமான பணிகள் மட்டும்தான் செய்யத் தெரியும்.

பிற்பகல் 2–50

இதுவரை எந்த அரசும் ஒரே நாளில் 12 முக்கியத்துவம் வாய்ந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதில்லை. ஒரே நாளில் 20,925 கோடி ரூபாய் அளவிற்கு தொடர் முதலீடுகளுக்கு கடந்த காலங்களில் மாநில அரசால் கையெழுத்திடப்படவில்லை என்பதை மீண்டும் ஒரு முறை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதன்மூலம் 5–11–2012 அன்று தொழில் வரலாற்று ஏடுகளில், புதிய வரலாறு ஒன்று பொறிக்கப்பட்டு, புதியதொரு சாதனையை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை ஒரு சிறிய சாதனையாக எடுத்துக்கொள்ள முடியாது. பொதுவாக முதலீடுகளை ஈர்ப்பதற்கு மாநிலங்கள் போட்டியிடுகையில், உலகளாவிய தொழில் முன்னேற்ற மாநாடுகளை நடத்துவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் பேசுகின்றபோதுகூட கேரளாவில் மாநாடு நடைபெற்றதைச் சொன்னார்கள். Global Investment Meeting என்று நடத்தப்படுவது வழக்கமாகும். இத்தகைய நிகழ்வுகளுக்கு ரூ.40 முதல் ரூ.50 கோடி வரை செலவிடப்பட்டு, சாலை வழி விளம்பரங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படும். உண்மையில் ஒரு சில இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு, நடத்தப்படும் மாநாடுகளுக்கான செலவுகள் அதிகம். ஆனால், நடைமுறையில் பார்த்தால் மாநாடுகளின் வாயிலாக உண்மையில் ஈர்க்கப்படும் முதலீடுகள் சுமார் ரூ.15 ஆயிரம் கோடி முதல் ரூ.20 ஆயிரம் கோடி வரைதான் இருக்கும். (அதாவது 4% லிருந்து 10% மட்டுமே ஆகும்). ஆனால், ஒரே நாளில் மாண்புமிகு அம்மா அவர்கள் எந்தவித Global Investors Meeting கூட்டமும் நடத்தாமல் இங்கே சென்னையிலே 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டு

ரூபாய் 20,925/– கோடிக்கு முதலீடுகளைப் பெற்றிருக்கின்றார் என்றால், இது மிகவும் அரிய, வரலாற்றுச் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு அம்மாவை தவிர வேறு எந்த முதல்வராலும் செய்ய முடியாத வரலாற்றுச் சாதனையாகும்.

தொழில் துறையில் ஒளிவு மறைவற்ற நிருவாக கொள்கை நிலையினை மேற்கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் முக்கிய திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது ஒரு நல்லரசின் கடமைகளில் ஒன்றாகும். இதன் பொருட்டுத்தான், வரலாற்றுச் சாதனைப்படைத்துள்ள இந்நிகழ்வு குறித்தும், தொழில் திட்டங்கள் குறித்தும் பொதுமக்களுக்கு அரசு விளம்பரங்களின் வாயிலாகத் தகவல் அளித்துள்ளது.

எனவே, விளம்பரம் தொடர்பாக, செலவிடப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவாகும். இது, உலகளாவிய முதலீடு முன்னேற்ற மாநாடுகளின் வாயிலாக, மிகக் குறைந்தளவில் முதலீடுகளைப் பெறுவதற்கு ஏனைய மாநிலங்கள் செலவிடும் தொகையைக் காட்டிலும் மிகக் குறைவாகும்; அதாவது 1% காட்டிலும் குறைவாகும்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற தொழில் நிபுணர்களும், முன்னணித் தலைவர்களும் இது தொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்களை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். எனவே, சிக்கனமாகச் செலவு செய்து, இந்த அளவிற்குப் பெரிய முதலீடுகளைப் பெற்றதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஓர் முன் உதாராணமாக இந்தியாவில் திகழ்கிறது என்று அனைத்து தரப்பினராலும் பாராட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், வேலைவாய்ப்பு குறித்த தகவல்களை அறிந்துகொள்வதற்காகவும், அதன் வாயிலாக அவர்களுக்கு புதிய நம்பிக்கை அளிப்பதோடு, பொதுமக்கள் அது குறித்து, அறிந்து கொள்ளவும் உதவுகிறது. மேலும், இதன்மூலம் சிறிய துணைத் தொழில்கள், வணிகர் மேம்பாட்டு வாய்ப்புகள் பற்றி அறியவும் வகை செய்கிறது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத் திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுடன்



புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் அவர்களாகவே முன்வந்து, சொந்தமாக விளம்பரங்களை அளித்திருந்தார்கள்.

அடுத்ததாக மைனாரிட்டி தி.மு.க. தலைவருடைய அறிக்கையில் இருப்பது இந்த 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் 1.36 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது கற்பனை என்று ஒரு செய்தியைப் போட்டு இருந்தார்கள். உள்ளபடியே சொல்லவேண்டுமென்று சொன்னால், 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வாயிலாக அவர்கள் 36,855 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கப்படும் என எழுத்துமூலமான பொறுப்புறுதி ஒன்றை அளித்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பொறுப்புறுதியும், அத்தகைய நிறுவனங்களின் கட்டுப்பாடுகளில் ஒன்றாக சேர்க்கப்படுகின்றது. தவறும் நேர்வில், அரசால் வழங்கப்பட்ட திட்ட ஆதரவு இரத்து செய்யப்பட்டுவிடும்.

இத்தகைய சிறப்பான விளைவுகளால் குறிப்பிடத்தக்க வகையில் மறைமுக வேலைவாய்ப்பு பெருகும் என்பது அனைவரும் அறிந்த விஷயமாகும். நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பிற்கான விகிதாச்சாரத்தின்படி பார்த்தால் ஒருவருக்கு நேரடி வேலைவாய்ப்பு என்றால் மறைமுகமாக 5 முதல் 8 நபர்கள் வரை மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும். சில மோட்டார் வாகன தொழிலகங்கள், துணி நூல், பொறியியல், மின்னணு முதலியன அதிக அளவில் மறைமுக வேலைவாய்ப்பினை அளிக்கின்றன. எண்ணற்ற பொறியியல் மற்றும் மோட்டார் வண்டிகள் தொடர்பான தொழிலகங்கள் 5–11–2012 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளன. எனினும், மாண்புமிகு அம்மா அவர்கள் 1 நேரடி வாய்ப்பு என்றால் அதை 3ஆக குறைத்து 3 பேர் மட்டுமே மறைமுக வோலைவாய்ப்பு என்று குறைந்த அளவில் எடுத்து, 36,855 நபர்களுக்கு கணக்கிட்டு 1,10,565 என்று வந்தாலும்கூட அந்த பத்தாயிரத்தையும் குறைத்து, 1,36,000 என்று மிதமான கணக்கை அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், மைனாரிட்டி தி.மு.க. அரசில் 6,985 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. முதலீடு ரூ.6,985 ஆனால், அதன்மூலம் 96,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று கருணாநிதி அறிவித்திருக்கின்றார். 7,000 கோடிக்கு

96,000 பேர்கள் என்று சொன்னால், நியாயமாக பார்க்க வேண்டும் என்று சொன்னால், ரூ.20,925 கோடிக்கு 3 இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். ஆனால், மக்களை அம்மா அவர்கள் ஏமாற்றவில்லை. உண்மை நிலைமையைச் சொல்லி இந்த அளவுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னதையே கருணாநிதி கொச்சைப்படுத்தி சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், இதைக் "கேட்கிறவன் கேனையன் என்றால், கேழ்வரகில் நெய்வடிகிறது" என்று சொல்லுகின்ற கதையாகத்தான் அவர் கூறிக்கொண்டு இருக்கின்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் போட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசு போட்டதாகக் கூறியுள்ளார். ஆனால், உண்மை நிலையை இந்த மாமன்றத்திற்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் விட்டிருந்த அறிக்கையில் ஹூண்டாய் கம்பெனியைதான் கொண்டு வந்ததாக கருணாநிதி சொல்லியிருக்கின்றார். 5–11–2012 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதில் ஹூண்டாய் கம்பெனியும் ஒன்று. மைனாரிட்டி தி.மு.க. தலைவர் அவர்களுடைய அரசால் ஈர்க்கப்பட்டது, அவரால் தொடங்கி வைக்கப்பட்டது எனத் தெரிவித்திருக்கின்றார். போர்டு மற்றும் ஹூண்டாய் நிறுவன செயற்குறிப்புகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் ஈர்க்கப்பட்டு, 1995 ஆம் ஆண்டிலேயே அதற்கான நிலங்கள் குறித்து முடிவு செய்யப்பட்டன எனத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக, பெரிய நிறுவனங்கள் இடத்தை தெரிவு செய்வதற்கு முன்னர் பல்வேறு மாநிலங்களில் மதிப்பாய்வு செய்யும். இதற்கு சுமார் 8 முதல் 10 மாதங்கள் வரை எடுத்துக்கொள்ளும்.

பிற்பகல் 2–55

போர்டு மற்றும் ஹூண்டாய் ஆகிய இந்த இரண்டு நிறுவனங்கள் இத்தகைய கடினமான நடைமுறையை 1995 ஆம் ஆண்டிலேயே முடித்துவிட்டு, இடங்களையும் இறுதி செய்துவிட்டன. போர்டு மற்றும் ஹூண்டாய் ஆகிய நிறுவனங்கள் நிலம் கையகப்படுத்துவற்கும், வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தயாரிப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு



உடனடியாக நடவடிக்கைகளைத் தொடங்கியது. அவை 1995 ஆம் ஆண்டு இறுதியிலேயே கையொப்பமிடத் தயாராக இருந்தன. 3–1–1996 அன்றே, போர்டு நிறுவனத்துடன் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஹூண்டாய் நிறுவனத்துடன் 27–3–1996 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளலாம் என்று தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்தச் சமயத்தில், மாநிலத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், ஹூண்டாய் நிறுவனத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியவில்லை. இதை பிஸினெஸ் லைன் என்ற செய்தித்தாள்கூட செய்தியாக வெளியிட்டிருந்தது.

இதுபோன்று, அவர்களுடைய விரிவாக்கத் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டில் இறுதி செய்யப்பட்ட நிலையிலேயே இருந்தது என்று கருணாநிதி கூறியிருக்கின்றார். அதற்கும் ஒரு விளக்கம் தர கடமைப்பட்டிருக்கின்றேன். 1–6–2006–ல் முதலீடாகக் கணக்கு வைத்து மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்திலேயே ரூ.4,000 கோடி ரூபாய் இரண்டாம் விரிவாக்கத் திட்டத்திற்காக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் கையெழுத்திடப்படவில்லை. அப்போதும் தேர்தல் அறிவிக்கப்பட்ட காரணத்தினால் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெறவில்லையேயொழிய அவர்கள் பணியைத் தொடங்கிவிட்டார்கள். மீண்டும் கருணாநிதி ஆட்சிக்கு வந்து 2008 ஆம் ஆண்டு கட்டடமெல்லாம் முடிந்ததற்குப்பின்னால், அவர்கள் 22–2–2008 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றார்கள். நன்றாக இதை கவனிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–2–2008 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றார்கள். 1–3–2008 அன்று அந்தத் தொழிற்சாலை திறக்கப்படுகிறது என்றால், அந்த ஹூண்டாய் நிறுவனம் 4,000 கோடி ரூபாய் முதலீடு செய்து பத்தே நாட்களில் அந்த நிறுவனம் திறக்கப்படுகிறது என்று சொன்னால் இதை யார் நம்புவார்கள்? இரண்டாண்டு காலமாக அந்தக் கட்டடத்தைக் கட்டினால்தான் அந்தத் தொழிற்சாலையைக் கட்டி முடிக்க முடியும். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை ஏதோ அவர்களுடைய காலத்தில் அந்தக் கட்டடம் முடிக்கப்பட்டதை 'நான் கொண்டு வந்தேன்' என்று தம்பட்டம் அடித்துக்கொள்கிறாரே ஒழிய இதுவும் இரண்டாவது விரிவாக்கமும் உள்ளபடியே மாண்புமிகு அம்மா அவர்களால்

கொண்டு வரப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மூன்றாவதாக, மாண்புமிகு அம்மா அவர்கள் *5–11–2011*–ல் *4,000* கோடி ரூபாய் அளவிற்கு மூன்றாவது விரிவாக்கத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கும் கருணாநிதி சொல்லியிருக்கின்றார். ஏற்கெனவே நான் போட்ட திட்டம், அந்தத் திட்டத்தைத்தான் இவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மக்கள் என்ன ஒன்றுமே தெரியாதவர்களா? எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்வார்களா? மூன்றாவது விரிவாக்கத் திட்டம் என்பது ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்றபோது தொகுப்பு சலுகை எல்லாம் அதிலே வழங்கப்படும். இவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பது அந்தக் கோட்பாடு என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதையெல்லாம் மறந்துவிட்டு கருணாநிதி அவர்கள் மீண்டும் நாங்கள் கொண்டு வந்தத் திட்டத்தை அவர்கள் கொண்டுவந்ததாக தவறான தகவலைச் சொல்லியிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்கின்றேன்.

அடுத்ததாக நோக்கியா, கடந்த மைனாரிட்டி தி.மு.க. தலைவர், நோக்கியா நிறுவனத்தை அவரது அரசு கொண்டு வந்ததாகவும் *26–6–2008*–ல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாகவும் உரிமை கோரியுள்ளார். இது உண்மையில் தவறான ஒன்றாகும். நோக்கியா நிறுவனத்தை *2005–2006* ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அழைத்து வந்து *6–4–2005*–ல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. தொலைத்தொடர்பு வன்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலமாக இதனைத் தெரிவு செய்து ஸ்ரீபெரும்புதூரில் *210* ஏக்கர் நிலத்தை இதற்காக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஒதுக்கீடு செய்து கொடுத்தது. இன்று இந்தத் தொழிற்சாலை உலகிலேயே கைபேசி தயாரிக்கும் பெரிய நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால், மைனாரிட்டி தி.மு.க. அரசினுடைய தலைவர் அவர் போட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நோக்கியா அண்டு சீமென்ஸ் என்று இருவரும் கூட்டாக சேர்ந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டார்கள். ஆனால், அதை கருணாநிதி தவறாக, நோக்கியாவை ஏதோ அவரே கொண்டு வந்ததுபோல் அதை



நாங்கள் உரிமை கொண்டாடுவதாகச் சொல்லியிருக்கின்றார். அவர்கள் போட்டது நோக்கியாவும் சீமென்சும் சேர்ந்து ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்தார்கள். அந்தத் தொழிற்சாலைக்குத்தான் *26–6–2008* ஆம் நாளன்று அவர்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, செயின்ட் கோபைன் *5–11–2012* ஆம் நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மூன்றாம் விரிவாக்க நிலையாக கையெழுத்திட்டார்கள். அதுகூட *17–2–2006* ஆம் நாளன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினால் தொடங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் டெய்ம்லெர், அசோக் லேலண்டு, நிசான் போன்ற முதலீட்டாளர்கள் எல்லாம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தங்கள் முதலீடுகளைக் குறைத்துக்கொண்டார்கள். மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. கோபால்சாமி அவர்கள் பேசுகின்றபோதுகூட *2006–2011* ஆம் ஆண்டு மைனாரிட்டி தி.மு.க. அரசில் போடப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். அது உண்மை என்பதற்கு இது ஒரு உதாரணம். டெய்ம்லெர் ரூபாய் *3,000* கோடி போடுவதாக ஒப்பந்தம் போட்டிருந்தார்கள். ஆனால் இறுதியிலே *2,000* கோடியாகக் குறைத்துவிட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால் மறுபடியும் அந்த *2,000* கோடி ரூபாயை *4,000* கோடி ரூபாயாக உயர்த்தி புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்து போட்டு இன்றையதினம் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோலத்தான் அசோக் லேலண்டு அவர்களும் *4,000* கோடி ரூபாய் என்றிருந்ததை *2,000* கோடி ரூபாயாக குறைத்துவிட்டார்கள் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால் மீண்டும் அது *4,000* கோடியாக உயர்த்தப்பட்டு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கிட்டதட்ட *20,925* கோடியில் கருணாநிதி கொண்டுவந்த திட்டம் எந்தத் திட்டமும் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 3–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையில் நனைந்துகொண்டே மகன் வீட்டுக்கு வருகிறான், மழை வரும்னு தெரியும்ல, குடை எடுத்துக்கிட்டு போயிருக்கலாமே, அப்பா சொன்னார், மழை விட்டதும் ஆட்சியிலிருந்து புறப்பட்டிருக்கலாமே, அண்ணன் கேட்டான், மழை பெய்யும்போது, ஒரு இடத்துல ஒதுங்கி நின்னுட்டு வந்திருக்கலாம்ல, மனைவி கோபப்பட்டாள், ஆனால், தலையைத் துவட்டிவிட்டு, மகனைத் திட்டாமல் மழையைத் திட்டியவள் அவனது அம்மா மட்டும்தான், (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலத்தான், கடந்த காலத்தில் ஒரு தன்னல சீக்காளியால் தமிழகத்திற்கு இழைக்கப்பட்ட தவறுகளுக்காக, திட்டமிட்ட தீமைகளுக்காக, துரோகங்களுக்காக, தயங்கி நின்றுவிடாமல், இன்று தமிழகத்தை தீர்வுகளை நோக்கி அழைத்துச் சென்று, கலை உலகத்தை மீட்டது, கனிம வளத்தைக் காத்தது, மூதூர் மதுரையை மீட்டது, சிறைபட்ட சித்திரையை மீட்டது, காவேரி–முல்லைப் பெரியாறு நீராதார உரிமைகளை மீட்டெடுத்தது, என கருணாநிதியால் தப்புத் தப்பாய் தொப்புத் தொப்பென நனைந்துவிட்ட தமிழகத்தை, காய்ச்சல் வராமல் காத்திருப்பது நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

விஷன் 2023 என்னும் தொலைநோக்கு திட்டம் கொண்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தம்–சுகாதாரம், தடையற்ற மின்சாரம், தரம் உயர்த்தப்பட்ட போக்குவரத்து, தொழில் வளர்ச்சி, உலகத் தரக் கல்வி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, தற்போது, சென்னையில் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 13.8 இலட்சம் கார்கள், 3.61 இலட்சம் அளவிலான வணிக வாகனங்கள் மட்டுமின்றி இரு சக்கர வாகனங்கள், டிராக்டர்கள், கனரக இயந்திரங்கள் ஆகிய அனைத்து விதமான வாகனங்களையும் உற்பத்தி செய்யும் மிகப்பெரிய வாகன உற்பத்தி மையமாக சென்னை திகழ்கிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் சீரிய தலைமையின்கீழ் சென்னை, உலகத்திலேயே மிகப்பெரிய வாகன உற்பத்தி மையமாக கூடிய விரைவில் உருவாகும் என்பதில் இருவேறு கருத்தில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அனைவரும் இந்த பெரும் சாதனைக்காகப் பெருமை கொள்ளலாம். இவை அனைத்திற்கும் நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் சிறப்பான வழி நடத்துதலே காரணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழ்நாடு மின்னணு வன்பொருள் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தையும், மென்பொருள் ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தையும், அன்னிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் மூன்றாம் இடத்தையும் வகிக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையில் சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள மாநிலம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவில், தானியங்கி வாகனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பில் 30 சதவீதமும், சரக்கு வாகனம் தயாரிப்பில், 17 சதவீதமும், பயணிகள் கார் மற்றும் இருசக்கர வாகனத் தயாரிப்பில் 20 சதவீதமும், தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின்கீழ் செயல்படும் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் அறிக்கைப்படி ஆகஸ்டு 1991 முதல் ஏப்ரல் 2011 வரையான காலகட்டத்தில் தமிழ்நாடு தொழில் முனைவோர் ஒப்புகை ஐ.இ.எம். மற்றும் தொழில் அனுமதி ஐ.எல். வாயிலாக ரூ.3,33,010 கோடி முதலீட்டு கருத்துருக்களை ஈர்த்துள்ளது. இந்த மொத்த முதலீடு 2013 ஜனவரி மாதம் வரை கருத்துருக்களுக்கான அனுமதி ரூ.4,09,040 கோடிகளாக உயர்ந்தது. 21 மாதங்களில் மே 2011 மாதம் முதல் ஜனவரி 2013 மாதம் வரை 22.83 சதவிகிதம் முதலீடு உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2011–ஜனவரி 2013–க்கு இடைப்பட்ட காலத்தில் எதிர்பார்த்ததற்கும் மேலாக ரூ.76,030 கோடி கூடுதல் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிவரம்மூலம், தமிழ்நாடு தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாகத் திகழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின் அறிக்கையின்படி மார்ச் 2011 மாதம் வரை தமிழ்நாட்டில் செய்யக் கருதப்பட்ட முதலீடு ரூ.7,52,526.9 கோடிகளாகும். சி.எம்.ஐ.இ–ன் அறிக்கைபடி இந்த முதலீடு மார்ச் 2013 முடிவில் ரூ.9,22,071 கோடிகளாக உயர்ந்தது. இவ்வாறு இரண்டு வருட காலத்தில் செய்யக் கருதப்பட்ட அதிகரித்த மொத்த முதலீடு ரூ.1,69,544.9 கோடிகளாகும். சி.எம்.ஐ.இ. அறிக்கையின்படி இந்த 2 வருடங்களில்,

ஏப்ரல் 2011 மாதம் முதல் மார்ச் 2013 மாதம் வரை செய்யக் கருதப்பட்ட மொத்த முதலீடு 22.53 சதவிகிதம் அதிகரித்தது. இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் மற்றும் மைய அரசின் தொழிற்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ள தரவு வெளியீட்டு அறிக்கைகள் தமிழ்நாடு முதலீடு செய்ய உகந்த மாநிலமாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் எப்படி இந்த இரண்டு ஆண்டு காலத்தில் 26,625 கோடி அளவிற்கு முதலீடு வந்ததோ அதேபோல வருகின்ற நிதியாண்டில் மேலும் ரூபாய் 30,000 கோடி அளவிற்கு முதலீட்டினை மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வருகின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட். தமிழ்நாட்டின் பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்றத்தில் ஒரு முழுமையான மாற்றத்தை சிப்காட் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்மாவட்டங்களில் அதிக அளவில் தொழிற் பூங்காக்களை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ல் (Tamil Nadu Vision – 2023 Document) குறிப்பிட்டுள்ளதை நிறைவேற்றும் வகையில், 20,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு நில வங்கியை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகிறது. மேலும், கூடுதலாக சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களை மேம்படுத்துவதற்காகவும் 25,000 ஏக்கர் நிலத்தினை தெரிவுசெய்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை தொழிற் பூங்காவில் 123.83 ஏக்கர் நிலப்பரப்பில் ஆயத்த ஆடைப் பூங்காவினை ஏற்படுத்தி, அதன்மூலம் 36 நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் தொழிற் பூங்காவில் பணிபுரியும் பெண்களுக்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் திரு. தங்கவேலு அவர்கள் பேசுகின்றபோது ஒரு கோரிக்கை வைத்தார்கள்.



கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள் என்பதற்கு ஒரு உதாரணம்தான் பெண்கள் தங்குவதற்காக தங்குமிடம் (Dormitory), குழந்தைகள் காப்பகம் (Creche), மருத்துவ மையம் (Dispensary), வடிவமைப்பு மற்றும் பயிற்சி மையம், சிற்றுண்டிச் சாலை போன்ற அடிப்படை மற்றும் சிறப்பு உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆயத்த ஆடைப் பூங்காவில், நில ஒதுக்கீடு பெற்ற நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்டு, ஆயத்த ஆடைப் பூங்கா நில ஒதுக்கீட்டாளர்கள் சங்கம் (Apparel Park Allottees Association) என்ற ஒரு சிறப்பு நோக்கு நிறுவனம் (Special Purpose Vehicle) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பூங்காவில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்கும் விடுதி மற்றும் சிற்றுண்டிச்சாலை, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகவும், பயிற்சி மையமானது புகழ்பெற்ற பயிற்சி நிறுவனத்தாலும் நடத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிப்காட் நிறுவனம், ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களுக்கேற்ற வகையில் குடியிருப்பினை ஏற்படுத்தும் நோக்கில் அவர்கள் தங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் தனித்தனி தங்குமிடங்கள் (Dormitories) இரண்டினை ஸ்ரீபெரும்புதூரில் கட்டிமுடித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில், 1,000 நபர்கள் வரையில் தங்குவதற்கு வசதி இருக்கிறது என்பதையும் கூடியவிரைவில் மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கிவைக்கப்படவிருக்கிறது என்பதையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் பேசுகின்றபோதுகூட சிப்காட்டின் வருவாய் குறைந்துள்ளது என்று சொல்லும்போது நான் பதில் சொன்னேன். இருந்தாலும் இப்போது மீண்டும் ஒரு முறை சொல்கின்றேன்.

சிப்காட் நிறுவனத்தின் நிதிச் செயல்பாட்டினைப் பொறுத்தவரையில், 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 197.60 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. மேலும், இந்நிறுவனம் 2012–2013 ஆம் ஆண்டில் உத்தேசமாக ரூபாய் 218.14 கோடி நிகர இலாபம்

ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை– சென்னை–திருப்பெரும்புதூர்–இராணிப்பேட்டை–ஒசூர், மதுரை–தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர்–சேலம். இதில் ஆராய்வு அறிக்கைப் பணிகள் முடிவுற்றவுடன் தொழில் துறையில் பின்தங்கிய தென் மாவட்டங்களில் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்தவும், நிலைத்த தொழில் வளர்ச்சியினை ஏற்படுத்தவும், மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடத்தையொட்டிய பகுதிகளில் தொழில் பூங்காக்களை ஏற்படுத்தவும் சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் துறை. தாய்நாட்டில் தமிழ்நாட்டை, தலையாய மாநிலமாய் உயர்த்துதல் என்னும் உயரிய நோக்கோடு, நம் அன்னைத் திருமகள், ஆற்றிவரும் கடமைகளைக் கண்டு விந்தைமிகு இந்திய தேசமே விழிவிரித்துப் பார்க்கின்றது.

நம் செந்தமிழர் குலக்கொழுந்தாம், நம் அம்மாவை, செங்கோட்டையும் வழிமேல் விழிவைத்து வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

‘கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி’

என்ற வள்ளுவரின் தத்துவத்திற்கேற்ப, தாராள குணமும், மனித நேயமும், நீதி தவறாமையும், மக்களுக்கு நிறைவான பாதுகாப்பு அளித்தலையும் செவ்வனவே செய்கின்ற அரசனை மற்ற மன்னர்களும் தங்களுக்கான கலங்கரை விளக்கமாய் ஏற்று பின்பற்றுவார்கள் என்கிறது வள்ளுவம். இதற்கு அம்மாவே இந்த அகிலத்திற்கும் சாட்சியல்லவா? ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ சர்க்கரை என்று காகிதத்தில் எழுதினால் இனிக்குமா என்று கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் அமைச்சர்கள் எல்லாம் கேட்டார்கள். ஆனால், சர்க்கரைத் துறையே எந்த அளவிற்கு கடந்த காலங்களில் சீர்கேடு அடைந்தது என்பதற்கு இரண்டு மூன்று உதாரணங்களைக் கொடுக்கக்



கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2005–2006 இல் 8 இலட்சம் டன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2006–2007 இல் அதே 8 இலட்சம் டன். அதற்குப் பின்னால் 2007–2008 இல் 6 இலட்சம் டன்னாக குறைந்துவிடுகின்றது. 2008–2009 இல் 4.94 இலட்சம் டன்னாக குறைந்துவிடுகிறது. 2009–2010 இல் 3.4 இலட்சம் டன்னாக குறைந்துவிடுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் சீரமைத்து மீண்டும் 2011–2012 இல் நான்கரை இலட்சம் டன்னாகவும், 2012–2013 இல் 4.69 இலட்சம் டன்னாகவும் இப்பொழுது உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகள் இலாபத்தில் இயங்கவில்லை என்றால் எப்படி இயங்கும்?

பிற்பகல் 3–10

இவர்கள் விவசாயிகளைப் பற்றி கவலைப்படுகிறார்களாம். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம். கடந்த காலங்களில் தனியாருக்கு புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்க 2006–2011 வரை 9 ஆலைகளுக்கு அனுமதி வழங்கி 8 ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. ஒரு ஆலைக்கு சுமார் 10,000 ஏக்கர் என்றால்கூட 80,000 ஏக்கர்களை தாரை வார்த்து கொடுத்துவிட்டால் எப்படி அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இலாபத்தில் இயங்கும்? யார் உண்மையான விவசாயிகள் நண்பன். தன் சுயலாபத்திற்காக காவேரி பிரச்சினையில் விவசாயிகளுக்குத் துரோகம் செய்ததுபோல கரும்பு விவசாயிகளையும் மைனாரிட்டி தி.மு.க. அரசு ஏமாற்றிவிட்டது என்பதற்கு சாட்சி. கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசு, சர்க்கரை ஆலைகளில் 183 மெகா வாட் இணைமின் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்தார்களேயொழிய அதற்காக சிறு துரும்பைக்கூட கிள்ளிப் போடவில்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும். பலமுறை அவரும் அந்தக் கூட்டத்தை நடத்தியுள்ளார்கள். 2011 இல் உள்ளபடி உற்பத்தி தொடங்கவேண்டும், ஆனால், உற்பத்தித் தொடங்குவதற்குண்டான ஒரு சிறு துரும்பைக்கூட அவர்கள் கிள்ளிப்போடவில்லை. அவர்கள் சிறு துரும்பைக்கூட கிள்ளிப்போடாததன் காரணத்தினால் அந்தப் பணி அப்படியே நின்றுவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் அவற்றை ஆய்வு

செய்து, என்ன பிரச்சினை என்று பார்க்கின்றபோது போதிய நிதி இல்லாத காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் ரூபாய் 352 கோடி கடனாக கொடுத்து, இப்போது பணிகள் வேகமாக நடைபெற்று கொண்டிருக்கின்றன. 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல கரும்பு விலை பற்றி வெளியே பேசிக்கொண்டிருக்கின்றார்கள். 2005–2006 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 1,014 ஆகவும் அதற்குப் பின்னால் 2006–2007 ஆம் ஆண்டில் ரூபாய் 1,025 ஆகவும், 2007–2008 ஆம் ஆண்டில் ரூபாய் 1,034 ஆகவும், 2008–2009 ஆம் ஆண்டில் ரூபாய் 1,144 ஆகவும், 2009–2010 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல் வருகின்றது என்ற காரணத்தினால் ரூபாய் 1,.537 ஆகவும், 2010–2011 ஆம் ஆண்டில் சட்டமன்றத் தேர்தல் வருகின்றது என்பதற்காக ரூபாய் 2,000 ஆகவும் கொடுத்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 2,100 கொடுத்தார்கள் தேர்தல் வரவில்லை. இப்போது 2012–2013 ஆம் ஆண்டில் ரூபாய் 2,350 ரூபாய் கொடுத்திருக்கின்றார்கள். தேர்தலை எதிர்நோக்கிக் கொடுக்கவில்லை. விவசாயிகளுடைய நலனுக்காகத்தான் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தகவல் தொழில்நுட்ப வழிப்பாதைத் திட்டம் என்று எடுத்துக்கொண்டால், முதற்கட்டமாக, சென்னை, மத்திய கைலாஷ் கோவில் சந்திப்பிலிருந்து சிறுசேரி வரையிலான சாலை மற்றும் கிழக்குக் கடற்கரை இணைப்புச் சாலை முக்கிய வாகன வழித்தடப் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கட்டத் திட்டத்தின் திட்ட மதிப்பீடு ரூபாய் 403 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், நடைபாதை மற்றும் சேவை பணிச்சாலை வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் 2013–க்குள் முடிவடையுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் சுமார் 280 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை வர்த்தக மையம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனமானது,



தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ) இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறையில் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 25.48 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 60.70 கோடி முதலீட்டில் கண்காட்சி அரங்குகள் மற்றும் கருத்தரங்கு மையம் கொண்ட சென்னை வர்த்தக மையத்தை அமைத்துள்ளது. இவ்வர்த்தக மையம்மூலம் சுமார் 250 நபர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L&T கப்பல் கட்டும் தளம் தொழிற்சாலை பற்றி கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு எந்த அளவுக்கு அதில் அக்கறை கொண்டார்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் அதிலே எந்த அளவுக்குச் சிரமம் மேற்கொண்டு முடித்துக்கொடுத்திருக்கின்றார்கள் என்பதற்கு விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் லார்சன் அண்டு டியூப்ரோ நிறுவனம் இணைந்து ரூபாய் 3,375 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில் துறைமுக வளாகத்துடன்கூடிய ஒரு கப்பல் கட்டும் தளத்தினை அமைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டமானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களால் 30–1–2013 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. எனினும் இந்தத் திட்டத்தால் மீஞ்சூரில் அமைந்துள்ள கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தினாலும், பழவேற்காடு பகுதியை சுற்றியுள்ள 15 கிராமங்களில் உள்ள மீனவர்களின் மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 28–7–2010 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி 850 நபர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பும் 900 நபர்களுக்கு ஒருவருட காலத்திற்கு வேலைவாய்ப்பும் வழங்க வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால், அவர்கள் இருந்த இரண்டாண்டு காலத்தில் ஒரு நபருக்குக்கூட வேலை வழங்கவில்லை. முந்தைய தி.மு.க. ஆட்சி முடியும் வரை எந்தப் பணியையும் செய்யாமல் விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக முதலமைச்சராக

பொறுப்பேற்றதற்குப் பின்னால் மீனவர்கள் பிரச்சினையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுசென்றவுடன் தனிக் கவனம் செலுத்தியதன் காரணமாக, முதற்கட்டமாக இப்பகுதியில் வாழும் 131 நபர்களுக்கு L&T நிறுவனத்தால் சென்ற ஆண்டு பிப்ரவரி மற்றும் ஜூலை மாதங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மீனவ சமுதாய பிரதிநிதிகளுடனும், L&T நிறுவனத்தாருடனும் பேச்சுவார்த்தை நடத்தி கீழ்க்கண்ட தீர்மானங்களை முடிவுசெய்தார்கள்:

பிற்பகல் 3–15

L&T நிறுவனத்தால் அளிக்கப்பட்ட அனைத்து உறுதிமொழிகளும் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில், L&T நிறுவனத்திற்கும், மீனவர்களுக்கும் இடையே பாலமாக டிட்கோ நிறுவனம் செயல்படும்.

L&T நிறுவனம் உடனடியாக 120 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும். இந்த 120 நபர்களில், 60 நபர்கள் L&T நிறுவனத்தில் நேரடியாக பணியமர்த்தப்படுவார்கள். மீதமுள்ள 60 நபர்கள், L&T நிறுவனத்தில் மூன்று மாத கால பயிற்சியைப் பெற்று பின்னர், முறையாகப் பணியமர்த்தப்படுவார்கள். பயிற்சி பெறும் 60 நபர்களுக்கும், பயிற்சிக் காலத்தில், பயிற்சித் தொகையாக மாதம் 6,000 ரூபாய் வழங்கப்படும். இந்த 6,000 ரூபாயில் 1,500 ரூபாய் மட்டும்தான் L&T நிறுவனம் கொடுக்கின்றது. மீதி 4,500 ரூபாயை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கொடுக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அரசுக்கு 8 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

மூன்று மாதங்களில், காட்டுப்பள்ளியில் பயிற்சி வசதியினை ஏற்படுத்த L&T நிருவாகம் நடவடிக்கை எடுக்கும். இந்தப் பயிற்சி மையத்தில், L&T நிறுவனத்தில் வேலைவாய்ப்பினை பெறும் வகையில், மேலும் 600 மீனவர்களுக்கு, குழு, குழுவாகப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பெறும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகையில் நான்கில் மூன்று பங்கினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுக்கொள்கிறது.



L&T நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 206 ரூபாய் தினக் கூலியை, நாளொன்றுக்கு 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், அவர்கள் கேட்டால் நாங்கள் கொண்டு வந்தோம் என்று சொல்வார்கள். என்ன கொண்டு வந்தார்கள், அவர்கள் MoU போட்டதோடு சரி, புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டதோடு சரி. பாதிக்கப்படுகின்ற அந்த மீனவர்களில் யாராவது ஒருவருக்காவது வேலை வாங்கிக் கொடுத்தார்களா? இல்லை, அந்தப் பணியை முடித்து, அந்த மீனவர்களுக்கு ஏற்கெனவே அளித்த உத்தரவாதத்தின்படி அவர்களுள் ஓரிருவருக்காவது வேலை வாங்கிக் கொடுத்திருந்தால் பரவாயில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும், அவர்கள் மீனவர்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, அம்மாவினுடைய அரசு மட்டும்தான் அவர்களுடைய நலனில் அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த நிதி சேவை பற்றி பல்வேறு வகைகளில் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நேரத்தின் அருமை கருதி மீண்டும் அதை நான் சொல்லவில்லை.

சூரிய மின் சக்தி பூங்கா. மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டங்களில் ஒன்றான சூரிய மின் சக்தி அமைக்கும் பூங்கா, 1,000 மெகா வாட் மின்சாரம் டிட்கோ நிறுவனத்தோடு இணைந்து செயல்படுத்தும் என்பதைக் கடந்த காலத்தில் நாங்கள் சொல்லியிருந்தோம். மாண்புமிகு அம்மா அவர்கள் எதை செய்ய முடியுமோ அதை மட்டுமே சொல்வார்கள் என்பதற்கு இதுவே ஓர் உதாரணம் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முதல்கட்டமாக 100 மெகா வாட் மின்சாரத்திற்காக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, அடுத்த மாதத்திலே அந்தப் பணியைத் துவக்க இருக்கின்றார்கள் என்ற செய்தியையும் சொல்லி, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இன்னும் 500 மெகா வாட் மின்சாரத்திற்கு—சூரிய ஒளி சக்தி மின்சாரம்—ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது (மேசையைத்

தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, பாலிமர்ஸ் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற வளாகம் ஏற்படுத்தப்பட்டு 2,100 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் வகையிலும், 25,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்.

“ஆயுதம் செய்வோம் – நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம் – கல்விச் சாலைகள் வைப்போம்”
என்றார் பாரதியார்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆண்டொன்றுக்கு 90,000 டன் உற்பத்தியைத் தொடங்கி இன்று 4,00,000 டன்னாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) காகிதக் கூழ் 250 டன்னிலிருந்து 880 டன்னாக உயர்ந்துள்ளது. 1,926 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், மறைமுகமாக 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அளித்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆலையில் ரூபாய் 100 கோடி முதலீட்டில் நாளொன்றிற்கு 600 டன் உற்பத்தித் திறன் கொண்ட சிமெண்ட் தொழிற்சாலையை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் 30–1–2013 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும், பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பாடப் புத்தகங்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் காகிதங்கள்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் முதன்முறையாக 2004–2005 ஆம் ஆண்டில் பண்ணைக் காடுகள், சுய பண்ணைத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டங்களின்கீழ் 28 மாவட்டங்களில் 17,021 விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.



இந்நிறுவனம், மார்ச் 2013 வரை 91,711 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயப் பண்ணை மற்றும் சுய பண்ணைத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விருதுகள்: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2011–2012 ஆம் ஆண்டிற்கான, இந்திய காகித உற்பத்தி கூட்டமைப்பினால் (Indian Paper Manufacturers Association) வழங்கப்படும் “ஆண்டின் சிறந்த காகித ஆலை” (Mill of the year Award) என்ற உயரிய விருதினைப் பெற்றுள்ளது. மேலும், இந்நிறுவனம் ‘பசுமை விருது’ (Green Award) மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடமிருந்து 11–9–2012 அன்று பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த விருதுகள், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நுட்பங்களை நடைமுறைப்படுத்தியதற்காக வழங்கப்பட்டது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினால் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மின்னாக்கிகள் வாங்குவதற்கு கடன்திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படுகிறது.

பிற்பகல் 3–20

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 7–12–2012 முதல் இத்திட்டத்தின்கீழ், 25 சதவீதமாக இருந்த தொழில்முனைவோரின் பங்களிப்பு 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். மின்னாக்கிக் கடன்களை தொழில்முனைவோர் மேலும் எளிதாகப் பெறுவதற்காக பிணையச் சொத்து விதிகளையும் இக்கழகம் தளர்த்தியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமுதாயத்தில் பொருளாதாரம் மற்றும் சமூகநீதியில் பின்தங்கிய துணைப் பிணையம் (Collateral Security) அளிக்க இயலாத புதிய தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக “Entrepreneurs Development Scheme” EDS திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை முனைவோரின் மூலதனமாகக் கொண்டு ரூ.5 இலட்சம் வரை பிணையமில்லாமல் ஒன்று அல்லது இரண்டு நபர்களின் உத்தரவாதத்துடன் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

[திரு. பி. தங்கமணி] [2013 ஏப்ரல் 19

அதுமட்டுமல்லாமல், கடந்த முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் பேசுகின்றபோது TIIC–லே 3 சதவீதம் வட்டி தொடருமா என்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த ஆண்டும் அந்த 3 சதவீதம் வட்டியைக் குறைத்துத் தரவேண்டும் என்பதற்காக 25 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு பதனிடும் தொழிலுக்கான மானியமானது, தகுதியுடைய முதலீட்டுக்கு, ஒரு நிறுவனத்திற்கு ரூ.50 இலட்சத்திற்கு மிகாமல் 25 சதவீதம் வரை மானியம் தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறையிடம் இருந்து கடன் சார்ந்த மானியத் திட்டத்தின்கீழ் (Credit Linked Capital Subsidy Scheme) 12.12 கோடி ரூபாய் பெற்று பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், காப்பீட்டு வர்த்தகம்மூலம் 2012–2013 ஆம் நிதியாண்டில் ரூ.11.80 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் நலிவடைய கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசும், மத்திய அரசும் எந்த அளவிற்கு காரணம் என்பதை ஒரு கணம் பாருங்கள்.

நிலக்கரி ஒதுக்கீடு. மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் ஒதுக்கீட்டின் அடிப்படையில், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலைகளான அரியலூர் மற்றும் ஆலங்குளம் ஆலைகளுக்கு சிமெண்ட் உற்பத்தி செய்யத் தேவையான நிலக்கரியின் அளவு 2005–2006 ஆம் ஆண்டு வரை அரியலூர் ஆலைக்கு 1,26,000 டன்னும் மற்றும் ஆலங்குளம் ஆலைக்கு 42,000 டன்னும் ஆக மொத்தம் 1,68,000 டன் மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால், இந்த அளவு 2007–2008 கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் அங்கே மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற இருவரும் சேர்ந்து அரியலூர் ஆலைக்கு 1,00,000 டன்களாகக் குறைத்தார்கள். மீண்டும் 2008–2009 ஆம் ஆண்டில் அதன் அளவை 63,000 டன்னாகக் குறைத்துவிட்டார்கள். ஆக, 1,68,000 டன் நிலக்கரியை கொடுத்துக் கொண்டிருந்த மத்திய அரசு, அதை தற்போது 63,000



2013 ஏப்ரல் 19] [திரு. பி. தங்கமணி]

டன்னாகக் குறைத்திருக்கிறது. இது தனியார் நிறுவனம் அல்ல. மாநில அரசு நிறுவனத்திற்குக்கூட 50 சதவீத நிலக்கரியைக் குறைத்துவிட்டார்கள் என்று சொன்னால் தமிழகத்திலே இருக்கின்ற சிமெண்ட் ஆலைகள் எப்படி இலாபத்தில் இயங்க முடியும். நிலக்கரி இல்லையென்று சொன்னால் வெளி நாட்டிலிருந்து வாங்க வேண்டும். இல்லையென்று சொன்னால் வெளியாட்களிடமிருந்து வாங்குகின்றபோது செலவினம் அதிகமாகின்றது. ஒருநாள் இல்லையென்றாலும்கூட மில் நிற்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. இந்த நிலைமை உருவாகியிருப்பதற்குக் காரணம் மைனாரிட்டி தி.மு.க. அரசுதான் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இதையெல்லாம் தாண்டி இந்த ஆலையை நவீனப்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, அரியலூரில் இப்போது 5 இலட்சம் டன்னாக இருப்பதை 15 இலட்சம் டன்னாகவும், ஆலங்குளத்தில் 2 இலட்சம் டன்னாகவும் இருப்பதை 4 இலட்சம் டன்னாகவும் உயர்த்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அந்தப் பணி விரைவிலே நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உப்பு நிறுவனம். 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்பது பழமொழி. மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றவரை அத்தனை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களின் எண்ணமெல்லாம் அதுதான் என்கின்ற வகையில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் என்பது கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசில் ஒரு துறையாகவே எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த ஆண்டு அதிகபட்சமாக 1.75 இலட்சம் டன் உற்பத்தி செய்து சாதனை எட்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால தி.மு.க. அரசு இராமநாதபுரம் வாலிநோக்கத்தில் உள்ள 5,520 ஏக்கர் நிலத்தில் 3,200 ஏக்கர் உற்பத்தி செய்தது போக மீதி இருந்த 2,320 ஏக்கர் நிலத்தில் உப்பு உற்பத்தியைத் தொடங்க, அந்த நிலத்தை மேம்படுத்துவதற்காக ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் ஆணை வெளியிட்டு இருந்தார்கள். ஆனால், அதற்குப் பின்னால் நிதியும்

ஒதுக்கவில்லை, வேலையும் தொடங்கவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் அதற்கு தனிக் கவனம் செலுத்தி கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசில் அதற்கு செலவுத் தொகை ரூபாய் 13.50 கோடி என்று மதிப்பிட்டு இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் 50 சதவீதம் குறைத்து 7 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, வருகின்ற ஜூன் மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்க உள்ளது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் வருடத்திற்கு 4 இலட்சம் டன் உற்பத்தி செய்து 10 முதல் 12 கோடி ரூபாய் அளவிற்கு இந்த உப்புத் துறை இலாபம் ஈட்ட இருக்கிறது என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் வெளி மாநிலங்களுக்குக்கூட விற்பனை செய்வதற்குத் தடை செய்துவிட்டார்கள். உப்பு என்பது தமிழ்நாட்டிற்குப் போக ஆந்திரா, கேரளா, கர்நாடகம் போன்ற மாநிலங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 2008 ஆம் ஆண்டிலிருந்து அதையும் நிறுத்திவிட்டார்கள். அது மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குச் சென்றவுடன் இப்போது ஆந்திராவிலும் ஆர்டர் கிடைத்திருக்கின்றது, கர்நாடகாவிலும் கிடைத்திருக்கின்றது, கேரளாவிலும் ஆர்டர் கிடைத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, வருகின்ற காலம் உப்புத் துறை மட்டும் அல்ல, அதை முக்கிய துறையாக மாற்றுகின்ற காலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம். இங்கே பேசிய மரியாதைக்குரிய திரு. பாண்டியராஜன் அவர்கள் சொன்னார்கள் அந்த தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாட்டிற்கு பெரிய அளவிலான தொழில் திட்டங்களை ஈர்க்கும் நோக்குடன் மாண்புமிகு அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது என்பதும், பெருந்தொழில்களுக்கு ஒற்றைச் சாளர வசதி வழங்குதல், ஏற்றுமதி சம்பந்தமான உட்கட்டமைப்பு முதலானவற்றை மேம்படுத்த அசைடு திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவை வழிகாட்டுதல் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான் நாட்டின் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாநில அரசு, ஜப்பானிய அரசுடன் இருதரப்பு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்படி ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டு அந்தப் பணிக்குழுவின் இருதரப்பு பொருளாதார மேம்பாட்டிற்கான மூன்றாவது கூட்டம் 27–2–2013 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலேதான் ஜப்பானுடைய தொழில் நிறுவனங்கள் எல்லாம் தமிழகத்திற்கு வருகின்றது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் சொல்ல இருக்கின்றேன். 2011–ல் கர்நாடகாவில் இருப்பது 182 ஜப்பானிய கம்பெனிகள், கேரளாவில் இருப்பது 47 கம்பெனிகள், ஆந்திராவில் இருப்பது 70 கம்பெனிகள், குஜராத்தில் இருப்பது 29 கம்பெனிகள் மட்டுமே. ஆனால், தமிழ்நாட்டில் 286 கம்பெனிகள். இதை அப்படியே 2012–ல் சொல்கின்றபோது, கர்நாடகாவில் 228 கம்பெனிகள், கேரளாவில் 53 கம்பெனிகள், ஆந்திராவில் 88 கம்பெனிகள், குஜராத்தில் 54 கம்பெனிகள் ஆனால், தமிழ்நாட்டில் 344 கம்பெனிகள் இருக்கின்றன என்பதைச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து ஜப்பான் முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நிருவாகத் திறமையும், சட்டத்தின் ஆட்சியும், வெளிப்படையான நிருவாகமும்தான் காரணம் என்பதை கண்கூடாக அறியலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டேன்மேக் நிறுவனம், 2004–2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம், 2011–2012 ஆம் ஆண்டில், 47,560 டன் மேக்னசைட் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனம் 2011–2012 ஆம் ஆண்டில் மிக அதிக அளவாக ரூ.91.86 கோடி அளவுக்கு விற்பனை செய்து வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.11.24 கோடி இலாபம் ஈட்டியுது. தீவிரமான விற்பனை உத்திகளைக் கையாண்டு 31.3.2012 அன்று நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களின் இருப்பு இல்லை (zero stock) என்ற நிலையை எட்டியது மாண்புமிகு அம்மா அவர்களின் முக்கிய சாதனையாகக் கருதப்படுகிறது.

மேக்னசைட் உற்பத்தி செய்யும்போது அதன் கூடவே கிடைக்கப்பெறும் மற்றொரு கனிமம் டூனைட் (Dunite) ஆகும். டூனைட், மெக்னீசியம், சிலிகேட்டை வேதிப்பொருளாக தன்னகத்தே கொண்டுள்ள டேன்மேக் நிறுவனம் 2012–2013 ஆம் ஆண்டில் 61,491 டன் டூனைட் விற்பனை செய்து இது கடந்த வருடத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாகும் என்பதைச் சொல்லி, இந்நிறுவனம், 2012–2013 ஆம் ஆண்டில் 37,693 டன் மேக்னசைட் பொருட்களை ரூ.88.22 கோடிக்கு விற்பனை செய்து வரிக்கு முந்தைய இலாபமாக ரூ.12.75 கோடியை ஈட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் – மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனம் சந்தையின் தேவைகேற்ப வெடிபொருட்கள் மற்றும் உபபொருட்களை உற்பத்தி செய்யத் தேவையான கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு உயர் அளவிலான விற்பனையை எட்டியுள்ளது. 1992–1993 முதல் 2002–2003 வரையிலான ஆறு ஆண்டுகளில் நிகர இலாபமும், ஒன்பது ஆண்டுகளில் ரொக்க இலாபமும் அடைந்துள்ளது. மத்திய அரசு, நைட்ரோகிளிசரின் வெடிபொருளின் உற்பத்தி மற்றும் விற்பனையை 2003–2004–லிருந்து தடை செய்ததைத் தொடர்ந்து இந்நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது. எனினும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொழிலாளர்களின் நலன் கருதி இலாபத்தில் இயக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

கனிம வளங்களை அறிவியல் முறையில் கண்டறிந்து அவற்றை தொழில்நுட்ப முறையில் வெட்டியெடுத்து இலாபகரமாக விற்பனை செய்யும் பணியினை தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) மேற்கொண்டுள்ளது. பூமியில் கிடைக்கப்பெறும் பலவகை கனிமங்களில் கருப்பு கிரானைட், நினைவு கற்கள், நினைவுச் சின்னங்கள், சுவர், கனரக இயந்திரங்கள் அடித்தளம் அமைக்கவும், வண்ணப்பாறைகள், சுவர் முகப்பு மற்றும் கட்டடங்களை அழகுபடுத்தவும், கிராபைட், வெப்பந்தாங்கும் சூலைக்கற்கள், மூசைகள், கரிக்குச்சி, மசகு எண்ணெய், கார்பன் தகடுகள், வர்ணம், வாகனத்திற்குத் தேவையான தடுப்பான்கள் தயாரிக்கவும், வெர்மிகுலைட், வெப்பந்தாங்கி அமைத்தல், ஒலியியல் சம்பந்தமான பொருட்கள் தயாரிக்கவும், குவார்ட்ஸ், உப்புத்தாள் மற்றும் கண்ணாடி தயாரிக்கவும், பெல்ஸ்பார், பீங்கான் பொருட்கள்



தயாரிக்கவும், சிலிகா மணல் என்கிற இந்திய தர மணல், சிமெண்ட் தரத்தை அறிய, கண்ணாடி தயாரிக்க, தொலைக்காட்சி படக்குழாய் மற்றும் ஆய்வுக் கூடங்கள் பயன்பாட்டிற்காகவும் மற்றும் சுண்ணாம்புக்கல், சர்க்கரை, தோல் பதனிடுதல், சிமெண்ட், காகிதம், செயற்கைப்பட்டு, பழக்கூழ் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகிறது.

பிற்பகல் 3–30

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் துறைதோறும் துறைதோறும் சாதனை என்ற வகையில் இந்தத் துறையினுடைய சாதனைகள் ஒருசிலவற்றை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கிரானைட் கற்களை கிழக்கு ஐரோப்பிய நாடுகளான சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ஒரு புதிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. சுண்ணாம்புக் கல் உற்பத்தி 15,000 டன்னிலிருந்து 60,000 டன் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தர மணல் மற்றும் வெர்மிகுலைட் விற்பனைமூலம் 1 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஈட்டியது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்.

ஜப்பானிய நினைவு சின்னங்களுக்கு ஏற்றுமதிக்காக முதன் முறையாக மணலி தொழிற்சாலையில் கருப்பு கிரானைட் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை கிராபைட் சுரங்கத்தில் கூடுதலாக 2,000 டன் கிராபைட் தாது தோண்டியெடுத்து சாதனை புரிந்ததும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சிலிகான் மணல் கூடுதல் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு சுரங்கத்தை மேம்பாடு செய்து, 80 இலட்சம் முதல் 90 இலட்சம் வரை அதிக வருவாய் ஏற்படுத்தப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) கனிமங்கள் சார்ந்த தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படை ஆதாரமாக விளங்குகின்றது.

தொழிற் சார்ந்த கனிமங்கள் (Major Minerals). பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், கார்பைட், சிலிகான் மணல், குவார்ஸ், பெர்ஸ்ஃபர், கிராஃபைட், இயற்கை எரிவாயு, எண்ணெய், மேக்னசைட் மற்றும் இரும்புத் தாது. சிறு வகை கனிமங்கள். கிரானைட், மணல், ஜல்லி மற்றும் சவுடு போன்ற சிறு வகை கனிமங்கள் அறிவியல்பூர்வமாகவும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பின்றி அளந்து எடுக்கப்படுகிறது. மலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் ஆய்வுகள் மேற்கொண்டு ஆலோசனை வழங்கி வருவதும், நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பில்லாத பகுதிகளை இனம் கண்டு கட்டுமானப் பணிகளைக் கட்டுவதற்கும், நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளில் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பதற்கும் இத்துறை ஆலோசனைகளை வழங்கி வருகிறது. கனிமத் துறையைப் பொறுத்தவரையில் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசில் எந்த அளவிற்கு இருந்தது, இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

2008–2009–ல் கிரானைட்டினுடைய சீனியரேஜ் வருமானம் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2008–2009–ல் ரூ. 35.32 கோடி. 2009–2010–ல் ரூ. 36.27 கோடி. 2010–2011–ல் ரூ.47.37 கோடி. ஆனால், 2011–2012–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அது ரூ.75 கோடியாகவும், 2012–2013–ல் ரூ. 79 கோடியாகவும் (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதேபோல, மதுரையில் மட்டும் 2006–2007–ல் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ரூ.14.42 கோடியாக இருந்த வருமானம், 2007–2008–ல் ரூ. 8 கோடியாகக் குறைந்தது. 2008–2009–ல் மறுபடியும் ரூ.8 கோடியாக இருந்தது. 2009–2010–ல் ரூ. 7 கோடியாகக் குறைந்தது. 2010–2011–ல் ஒரு கோடி உயர்த்தி ரூ.9 கோடியாக உயர்த்தினார்கள். மறுபடியும் ரூ. 6 கோடியாகக் குறைந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டு வந்தவுடன் ரூ. 19 கோடியாக முதன் முதலாக (மேசையைத தட்டும் ஒலி) மதுரையினுடைய சரித்திரத்திலேயே வருமானமாக ஈட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல, கடந்த கால மைனாரிட்டி அரசில் கனிம வருவாய் 2010–2011–ல் வெறும் 670 கோடி ரூபாய். இப்பொழுது 2012–2013–ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் 941 கோடி ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொக்கு மீனைக் கொத்தாமல் இருந்தால், பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால், புலி ஆட்டை அடிக்காமல் இருந்தால், நானும் கொள்ளையடிக்காமல் இருப்பேன் என்று கொள்ளையடிப்பதை ஒரு கலை என்று சொல்லும் தலைவர், ‘காகித ஓடம், கடலலை மீது, போவது போலே, மூவரும் போவோம். ஆதரவின்றி ஆழ்ந்திடும் ஓடம், அதுபோல் ஒன்றாய் மூழ்குது நன்றாம், கடிதமும் போட்டு, கொடிகளும் ஏற்றி, ஆட்சியை ஓட்டி, தீயையும் வைத்தோம், காலம் பார்த்து, நேரம் பார்த்து, பதவியும் பெற்று, வதைக்கவும் செய்தோம், அழுவதைக் கேட்க ஆட்களும் இல்லை, ஆறுதல் வழங்க யாருமே இல்லை, கழகம் வாழ இடமே இல்லை, வழக்குகள் எதிலும் முடிவுகள் இல்லை, தமிழக மடியும் நிலைத்திடவில்லை, காங்கிரஸ் நிழலும் காத்திடவில்லை, ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, அன்னை எங்களை அழைத்திடு தாயே, என்று அவர்களது ஒரு படகு எந்தத் திசையில் போய்க்கொண்டிருக்கிறது என்று தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினுடைய நிலைமை என்பதைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நடையில், நேர்கொண்ட பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத உழைப்பில், அறிவாற்றலில், அனைத்து துறைகளிலும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமே முதலிடம் என்னும் தலையாய சாதனையை நோக்கி விரைகிறது தாய் ஆளும் தமிழகம். முப்பெரும் பொருளுக்கு முதல்வரான இராமபிரான் அன்று கட்டிய பாலத்திற்கு சிறு அணிலும் சேர்ந்து பங்காற்றியதைப்போல, தாய் ஆற்றும் அளப்பறிய கடமைக்கு அணிலாக நானும் இருந்து பணியாற்றுவேன் என்றும், அம்மாவின் தியாகத்திற்கு பரிசாக வரும் நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளையும் மக்கள் அம்மாவிடம் அளித்து (மேசையைத்

தட்டும் ஒலி) இந்தியப் பிரதமராக்கி, வஞ்சகர்களை, துரோகிகளை, சந்தர்ப்பவாதிகளை, நன்றி கொன்றவர்களை நாடோடிகளாக அலையவிடுவார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நானும், என் வம்சமும் காலமெல்லாம் நன்றியுரைப்போம் என்று சொல்லி, என் பதிலுரையை நிறைவு செய்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 3–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி சில அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

**அறிவிப்புகள்**

1. உபரி காகிதக் கூழினை கூழ் அட்டைகளாக மாற்றி மறுபடியும் தேவைக்கேற்ப காகிதமாக்கிக் கொள்ளும் இயந்திரம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 6 கோடி மூலதனத்தில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் நிறுவப்பட உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

2. காகிதக் கூழ் பிரிவின் உற்பத்தித் திறனை மேம்படுத்த இரண்டு Twin Roll Press இயந்திரங்கள் சுமார் ரூபாய் 7 கோடி மூலதனத்தில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, புதிய தொழில்நுட்பம் கொண்ட Rewinders மற்றும் நகல் காகிதங்கள் வெட்டும் பிரிவுகளில் உள்ள இயந்திரங்கள் சுமார் ரூபாய் 12 கோடி முதலீட்டில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் நவீனப்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

4. உற்பத்தி செய்த காகிதங்களை வைப்பதற்கான கிடங்கு வசதி ரூபாய் 5 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் விரிவாக்கம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*



5. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தற்போது இயங்கிவரும் பழைய கொதிகலன்கள் (Boilers) மற்றும் மின் ஆக்கிகளின் (Turbo Generators) இயங்கு திறன் ரூபாய் 6 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் மேம்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

6. புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய திறன் வாய்ந்த மோட்டார்களை பழைய மோட்டார்களுக்கு பதிலாக பயன்படுத்துதல், தொழிற்சாலையில் உருவாகும் வெப்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துதல் போன்ற எரி சக்தி பயன்பாட்டில், சேமிப்பு மற்றும் சிக்கன நடவடிக்கைகள் ரூபாய் 3 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தால் நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

7. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை முழு திறனுடன் செயல்படுவதற்காக, அங்கு Filtrate Clarification System இயந்திரங்கள் ரூபாய் 45 இலட்சம் செலவில் சர்க்கரைத் துறையால் நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

8. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மின் திறனைப் பெருக்குவதற்காக திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் Planetary Gears இயந்திரங்கள் ரூபாய் 40 இலட்சம் செலவில் சர்க்கரைத் துறையால் நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

9. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சர்க்கரைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக, மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் Rotary Screen என்ற இயந்திரம் ரூபாய் 25 இலட்சம் செலவில் சர்க்கரைத் துறையால் நிறுவப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

10. தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்தால் மேற்கொள்ளப்படும் கொள்முதல் மற்றும் விற்பனை தொடர்பான பணிகள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e–tendering) முறையில் சர்க்கரைத் துறையால் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர்

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

11. சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் மற்றும் இலாபம் ஈட்டும் திறனை மேம்படுத்த ஓர் உயர்நிலை நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையின்படி ஆலைகள் நிதிநிலையில் தன்னிறைவு பெற்றிட நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

12. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அரியலூர் மற்றும் ஆலங்குளம் சிமென்ட் ஆலைகளின் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களில் இரவு நேரப் பணிகளின்போது பாதுகாப்பினை மேம்படுத்த, நகரக்கூடிய கோபுர விளக்குகள் ரூபாய் 30 இலட்சம் செலவில், தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தால் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

13. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, விருத்தாச்சலம் கற்குழாய் ஆலையில் கற்குழாய்களைத் தயாரிக்கத் தேவையான களிமண் கலவை இயந்திரம் ரூபாய் 4 இலட்சம் செலவில் தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தால் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சிமென்ட் மூட்டைகளின் சரியான எடையினை உறுதி செய்வதற்காக, ஆலங்குளம் சிமென்ட் ஆலையில் சுழலும் மின்னணுவியல் மூட்டை நிரப்பும் இயந்திரம் ரூபாய் 58 இலட்சம் செலவில் தமிழ்நாடு சிமென்ட் நிறுவனத்தால் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

15. தமிழ்நாடு உப்பு நிறுவனம் உற்பத்தி செய்யும் உப்பின் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஒரு மணி நேரத்திற்கு 100 மெட்ரிக் டன் திறன் கொண்ட உப்பு கழுவும் இயந்திரங்கள் (Salt Washery) ரூபாய் 1.5 கோடி செலவில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 3–40

16. உப்புப் பாத்திகளில் கிடைக்கும் ஜிப்சத்தைப் பயன்படுத்தி பிளாஸ்டர் ஆப் பாரிஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ரூ.75 இலட்சம் செலவில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

17. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தியினை அதிகரிக்கவும், அவை சுகாதாரமான முறையில் சிப்பமாக்கவும் மூன்று தானியங்கி சிப்பமாக்கும் இயந்திரங்கள் (Automatic Packing Machines) ரூ.30 இலட்சம் செலவில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

18. இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (இரும்பு மற்றும் அயோடின்) உற்பத்தித் திறனை இருமடங்காக உயர்த்தி, அதாவது மாதத்திற்கு 1,500 டன்னிலிருந்து 3,000 டன்னாக அதிகரிக்க, கூடுதலாக இரண்டு புதிய இயந்திரங்கள் ரூ.20 இலட்சம் செலவில் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தால் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

19. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடன் பெறும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான 3 விழுக்காடு வட்டி மானியத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மேலும் மூன்று வருடங்களுக்கு நீட்டிக்கப்படும். மேலும் TIIC வழங்கும் அனைத்து காலக் கடன்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்திற்காக 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு அரசு ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

20. புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்காக, சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் கனிமச் சோதனைச் சாவடிகள், மதுரை, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மண்டலங்களில் பறக்கும் படை (செயலாக்கப் பிரிவு) ஆகியவற்றை அமைப்பதற்கும், 15 மாவட்ட அலுவலகங்களுக்கு 15 புதிய வாகனங்கள் வழங்குவதற்கும் அரசு ரூ.2.13 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

21. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கிரானைட் குவாரிகளின் நிருவாக செயல்திறனை மேம்படுத்த குவாரி மேனேஜ்மென்ட் சிஸ்டம் (Quarry Management System) என்ற மென்பொருள் உருவாக்கவும், ஒவ்வொரு குவாரியிலும் கண்காணிப்புக் காமிராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு, குவாரி செயல்பாடுகள் மற்றும் கிரானைட் கற்களை எடுத்துச் செல்லுதலை டாமின் தலைமையகத்திலிருந்து கண்காணிக்கவும், டாமின் நிறுவனத்தால் ரூ.40 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

22. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, கிரானைட் குவாரிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் சுற்றுச்சூழல் மாசுபடாவண்ணம் கிரானைட் கற்களில் துளையிடும் பணி மேற்கொள்ளவும் இரண்டு ஹைட்ராலிக் துளையிடும் இயந்திரங்கள் (Hydraulic Drilling Machines) ரூ.1.80 கோடி செலவில் டாமின் நிறுவனத்தால் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

23. சிவகங்கையிலுள்ள கிராபைட் தாதுவின் உற்பத்தியினைப் பெருக்கவும், அதனைச் செழுமைப்படுத்தவும் ஒரு முதன்மை அரவை இயந்திரம் (Primary Crusher) ரூபாய் ஒரு கோடி செலவில் டாமின் நிறுவனத்தால் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

24. சிப்காட் தொழில் வளாகங்களுக்காக நிலம் கையகப்படுத்துகையில், அப்பகுதியிலுள்ள கிராம மக்களின் நலனில் அக்கறை கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சிப்காட் தொழில் வளாகங்கள் அமைந்துள்ள பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிக்கூடங்கள் மற்றும் கிராமத்தினர் பயன்பாட்டிற்குத் தேவையான குடிதண்ணீர் வசதி, மேசை, நாற்காலிகள், மின் சாதனங்கள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 2013–2014 ஆம் ஆண்டில் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் (Corporate Social Responsibility) திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி



சிப்காட் நிறுவனத்தால் செலவிடப்படும். இத்திட்டத்தின்மூலம் 20 கிராமங்கள் பயன்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்தின்போது தெரிவித்த கருத்துகளுக்கு நான் தெரிவித்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறும், இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்றும் அனைவரிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். உங்களின் ஆக்கபூர்வமான கருத்துகளும், ஆலோசனைகளும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்று கூறி மீண்டும் ஒரு முறை எங்கள் இதய தெய்வம், குடும்ப தெய்வம், எங்கள் வாழ்க்கையினுடைய ஆதாரமாக விளங்குகின்ற முதலமைச்சர் இதய தெய்வம், வருங்கால பாரதப் பிரதமர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,181,96,96,000/– மூலதனக் கணக்கில் ரூ.22,21,47,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.500,00,05,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [2013 ஏப்ரல் 19

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (22–4–2013) திங்கட்கிழமை, காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

78. கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை சேவைகள் துறை தரமான குளிரூட்டப்பட்ட விந்தணு அடைக்கப்பட்ட குழாய்களை நேரடியாக (அ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனத்திடமிருந்தும்; மற்றும் (ஆ) இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட விலையில் குஜராத், பிடஜ் சபர்மதி ஆசிரமம் கௌசாலா நிறுவனத்திடமிருந்தும் கொள்முதல் செய்வது குறித்து நிதி (சம்பளங்கள்) துறையின் 7–1–2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 3–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

129. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் முதலாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

130. 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)



2013 ஏப்ரல் 19]

131. 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

132. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் நான்காவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

133. 2010–2011 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்பகுதி அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் ஐந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

134. மானியக் கோரிக்கை எண் 27 – தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

135. கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) மற்றும் பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)

136. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2012–2013)

137. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2012–2013)

138. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2012–2013)

139. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2012–2013)

140. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2012–2013)

141. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை. (2012–2013)

142. பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை. (2012–2013)

[2013 ஏப்ரல் 19

*143.* பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை. *(2012–2013)*

*144.* பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை. *(2012–2013)*

*145.* பொதுக் கணக்குக் குழுவின் நூறாவது அறிக்கை. *(2012–2013)*

*****